# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 24 வியாழக்கிழமை (09.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 287


## பெரும் சர்ச்சையைக் கிளப்பிய

# 18 ஆவது அரசமைப்புச் சட்டம்

# அமோகமாக நிறைவேறியது!

## ஆதரவாக 161, எதிராக 17 வாக்குகள்

கொழும்பு, செப்ரெம்பர்9

நாட்டு மக்களிடையே பெரும் சர்ச்சையையும் வாதப் பிரதி வாதங்களையும் பரபரப்பையும் கட்சித் தாவல்களையும் உண்டாக்கிய அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் 161 வாக்குகளைப் பெற்று அமோகமாக நிறைவேறியது. எதிராக 17 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 18ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்துள்ள போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்களான அப்துல் காதர், லக்ஷ்மன் செனவிரத்ன, நில்வல ஜயசிங்க, ஏர்ள் குணசேகர, மனுஷ நாணயக்கார, நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான உமெக்ஷா சுவர்ணமாலி ஆகியோர் சபைக்கு வருகை தந்து 18ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அரசுக்கு ஆதரவாக வாக்களித்தவர்களில் நுவரெலியா மாவட்ட எம்.பி. ஸ்ரீரங்காவும் ஒருவர்.

அதேவேளை, நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (24 ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வினுக்கு மீண்டும் பதவிக் கதிரை



கொழும்பு,செப்.9

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அண்மையில் சமுர்த்தி அதிகாரி ஒருவரை மரத்தோடு கட்டி வைத்து பெரும் சர்ச்சையை கிளப்பியவருமான மேர்வின் சில்வாவுக்கு மீண்டும் பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

டெங்கு விழிப்புணர்வு தொடர்பான கூட்டத்துக்கு வருகை தராத சமுர்த்தி அதிகாரியை கயிற்றால் மரத்தோடு கட்டிய விவகாரத்தால் பல்வேறு தரப்புகளிடமிருந்தும் மேர்வின் சில்வாவுக்கு அழுத்தங்கள் ஏற்பட்டன. இத்தகைய நெருக்கடிகள் தீவிரமடைந்ததால் அவரிடமிருந்த நெடுஞ் சாலைகள் பிரதி அமைச்சர் பதவி அரசால் பறிக்கப்பட்டது. எனினும் மேர்வின் சில்வாவின் செயற்பாடுகள் பற்றி விசாரித்த ஒழுக்காற்றுக்குழு அவர் மீது குற்றம் எதுவுமில்லை என்று அண்மையில் தீர்ப்பளித்திருந்தது.

இந்நிலையில் மீளவும் மேர்வின் சில்வாவுக்கு நெடுஞ் சாலைகள் பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு நேற்று அறிவித்தது. (ஒ-எ)

## கூட்டமைப்பு எம்.பி. உட்பட7 பேர் அரசுப் பக்கம் தாவல்!

கொழும்பு,செப்.9

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் நேற்று நாடாளுமன்றத்தில் அரசுடன் இணைந்து கொண்டனர்.

கண்டி மாவட்ட ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.ஆர்.எம்.ஏ.காதர் நேற்று மாலை சபையில், நாங்கள் அரசுடன் இணைந்துக் கொள்கின்றோம் எனத் தெரிவித்து ஏனைய ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரச தரப்புக்குச் சென்றார்.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் செனவிரத்ன, ஏர்ள் குணசேகர, மனுஷ நாணயக்கார, (24 ஆம் பக்கம் பார்க்க)

## வெடி கொளுத்தி மக்கள் ஆரவாரம்

கொழும்பு,செப்.9

161 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் 18 ஆவது அரச மைப்புத் திருத்தம் அமோகமாக நிறைவேறியதால் அரச தரப்பு ஆதரவாளர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் பட்டாசு கொளுத்தி தமது மகிழ்வை வெளிப்படுத்தினர்.



கொழும்பு மாநகர சபைக் கட்டடத்துக்கு முன்பாகக் கண்ணைக்கவரும் வகையிலான வண்ண, வண்ண, வாணங்கள் மற்றும் பட்டாசுகள் இவ்வாறு கொளுத்தப்பட்டன. பல இடங்களில் அரச ஆதரவாளர்கள் குழுக்களாக நின்று ஆரவாரக் குரல்களை எழுப்பி ஆனந்தமாகக் கூத்தாடி மகிழ்ந்ததையும் காணமுடிந்தது.(ஒ-எ)

## கால அவகாசம் இருந்திருந்தால் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக்கொடுத்திருப்பாராம் ஹக்கீம்

கொழும்பு,செப்.9

தனக்குப் போதுமான கால அவகாசம் இருந்திருந்தால் அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கும் சந்தேகத்தைத் தீர்த்து கூட்டமைப்பின் ஆதரவையும் இந்த அரசமைப்புத் திருத்தத்துக்குப் பெற்றுக்கொடுத்திருக்க முடியும் என்று மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அரசமைப்புத் திருத்தம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாங்கள் எந்தவிதமான அச்சுறுத்தல்களும், பலவந்தங்களும் இன்றி நிறைந்த மனதுடனேயே 18ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றோம். எமது கட்சியின் பரிபூரண அங்கீகாரத்துடனேயே ஆதரவாக வாக்களிக்கின்றோம்.

இன்று காலை இச்சபையில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (24 ஆம் பக்கம் பார்க்க)

## பியசேன எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை!

கொழும்பு,செப்.9

உத்தேச அரசமைப்பு திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த கூட்டமைப்பின்அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது தொடர்பாக அவருக்கு உடனடியாக கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த 6 ஆம் திகதி கூட்டமைப்பு (24 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நிலைகொண்டிருக்கும் ராணுவத்தினரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்படும்

### இராணுவத் தளபதி தகவல்



கொழும்பு,செப்.9

வடக்கில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்படும். அதன் பின்னர் வடக்கின் சிவில் நிர்வாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும்.

- இவ்வாறு இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று இராணுவத் தளபதி (24 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் மீதான இரத்தம் சிந்தாத யுத்தத்தின் உச்சக்கட்டமே 18 ஆவது அரசமைப்புச் சட்டம்

### அதனை ஆதரிப்பது ஜனநாயகத்தின் மரணத்தை வரவேற்பதாகும் - சரா எம்.பி.

கொழும்பு,செப்.9

இந்நாட்டில் இரத்தம் சிந்தும் அரசியல் முடிவை எட்டிய அன்றே தமிழ்மக்கள் மீது இரத்தம் சிந்தாத யுத்தம் அரசினால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் உச்சக்கட்டமே, சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதினெட்டாவது அரசமைப்புத் திருத்தச் சட்டம்.

அதனை ஆதரிப்போர் ஜனநாயகத்தின் மரணத்தை வரவேற்பவர்களாகக் கருதப் படவேண்டியவர்கள்.

இந்தச் சட்டத்தினால் சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபைகளும் கூட அதிகாரமற்றவையாகின்றன என்பதனை சகோதர உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு 18ஆவது அரசமைப்புச் சட்டம் மீதான விவாதத்தில் நேற்றுப் பேசிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கூறினார்

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது-

அந்நிய ஆக்கிரமிப்புக்களாலும் உள்ளூர் யுத்த வெறியர்களாலும் சீரழிந்துபோய் கிடந்த சீன தேசத்தை மகத்தான ஒரு நீண்ட (22 ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!

நல்லைக் கந்தனின் உற்சவ காலத் திருக்காட்சிகள் தினமும் உங்கள் உதயனின் வலைத் தளத்திலும்....

www.uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பணி சிறக்க வாழ்த்துகின்றோம்



கல்விப்புலத்துப் பதவிகள் பலவற்றைத் தனது அழகான ஆளுமையால் அலங்கரித்து அயராத உழைப்பால் இன்று வட மாகாணக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து நிற்கும்

**ப.விக்னேஸ்வரன்**

அவர்களை

மேலும் புதுப்பொலிவோடு வடமாகாணக் கல்விப் பணி சிறக்க இறையாசி வேண்டிப் பெருமையோடு வாழ்த்தி மகிழ்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.



வன்னி மாணவர் நலனுக்காக
வட்டக்கச்சியில் புதிய உதயம்

## இமயம் கல்வி நிறுவனம்

சிவிக்சென்ரர், வட்டக்கச்சி.

தரம் 04 மற்றும் 05 புலமைப் பரிசில் வகுப்புகள்
தரம் 06 இலிருந்து க.பொ.த. [சா/த] வகுப்புகள், A/L வகுப்புகள்
**யாழ். மற்றும் வன்னி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை**
யாழிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் உடனுக்குடன் கல்வி வெளியீடுகள் மாணவர் கைகளில்.....
ஆங்கில மொழி, சிங்கள மொழி வகுப்புகள்.
ஆங்கில மொழி சிறப்பு வகுப்புகளின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

**ஆரம்பம்: 11.09.2010 சனிக்கிழமை பி.ப. 2 மணி.**

கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

தொடர்பு:
ரி.ஆனந்தன் (நிர்வாகி)
0776114068 (103126)
imayam.in@gmail.com
www.imayam.yolasite.com


## கருத்துப் பகிர்வு

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்யும்**
**'யாழ்.மாணவர்களின் இன்றைய கல்வி நிலைமையும், வெகுசனத் தொடர்பூடகங்களின் ஆதிக்கமும்'**

*இடம்:*
விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்,
இல.167, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

*காலம்:*
செப்ரெம்பர் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை (10.09.2010)

*நேரம்:*
முற்பகல் 9.30 மணி

**நிலையுணர்ந்து, சமூக மாற்றத்திற்காய் பணிபுரிவோம்!**

(10314) **மாவட்ட உத்தியோகத்தர்.**

## மரண அறிவித்தல்

### திரேசம்மா அலோசியஸ்

(நெல்லியடி, கரவெட்டி - மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம்)

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல.08, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரேசம்மா அலோசியஸ் நேற்று (08.09.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வின் அலோசியஸின் (பொது சுகாதாரப் பரிசோதகர்) அன்பு மனைவியும், ரஞ்சன் அலோசியஸ் (நீர்கொழும்பு), ரவீந்திரன் அலோசியஸ் (டென்மார்க்), ரீட்டா ரஞ்சனி அலோசியஸ் (கனடா), கிறிஸ்ரி மகேந்திரன் அலோசியஸ் (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தாயும், தவராணி (நீர்கொழும்பு), ரதிகுமாரி (டென்மார்க்), குமார் (கனடா), சாந்தகுமாரி (விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும் தர்சிகா, ஆன்ஸ் றோஸ், றெனிற்றன், மோனிக்கா, சஞ்ஜீவன் (யாழ்.இந்துக் கல்லூரி), அட்சயா (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.08, மணல்தறை ஒழுங்கை,*
*கந்தர்மடம்.*

தகவல்:
கிறிஸ்ரி மகேந்திரன்
அலோசியஸ் *(மகன்).*

## OBITUARY NOTICE

### Mrs. Cecelia Gunamani Rajaratnam

**B.A. Retd. Deputy Principal**
**(J/Methodist Girls High School. Point Pedro.)**



The death is announced of Mrs.Cecelia Gunamani Rajaratnam B.A Retd. Deputy Principal, (J/Methodist Girls High School, Point Pedro ) beloved wife of Mr.J.S Rajaratnam Retierd, Maths Master. (J/ Hartley College, Point Pedro.) daughter of Mr & Mrs.S.V. Gunanayagam (Teacher J/Hartley College Point Pedro) daughter in law of Mr & Mrs. Sellathurai, loving Mother of Rajani , Dr.Rajaseelan , Rajapalan , Dr. Rajaselvam & Rajakaruna , Mother in law of Quintus, Nilmini , Rulanthini , Dr. Arunika & Mythily. Grand mother of Dilan, Natasha, Jonathan, Cyril, Anitha , Andrew & Ellana.

Funeral service will be held on Saturday the 11th of September 2010, at "Bethany", Beach Road, Point Pedro at 3.00 p.m

J.S.Rajaratnam
(Husband).

## மனைப்பொருளியல் ஆசிரியருக்கு

யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கான பயிலமர்வு நாளைமறுதினம் சனிக்கிழமை நல்லூர் ஸ்தான சி.சி. தமிழ் கலவன் பாடசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பயிலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் கேட்டுள்ளார். (த-6-7)

## எரிபொருள் நிலையப் பணி வழமைக்குத் திரும்பியது

கட்டணம் செலுத்தப்படாமையால் துண்டிக்கப்பட்ட வேலணைப் ப.நோ.கூ. சங்கத்துக்கான மின்சாரம் மீள வழங்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து சங்கத்தின் எரிபொருள் நிலையத்தின் செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன. (ஓ-10-188)

## நாளை கொடியேற்றம்

வேலணை வடக்கு இலந்தைவனப் பதி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

19ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (ஓ-10-188)


இப்போது அமோக விற்பனையில்...
Pulsar 135



S.J.MORTERS
இல.73, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4554, 0777238373, 0771711819.



**வாடகைக்குத் தேவை**

தனியார் நிறுவனத்தின் பாவனைக்காக யாழ்.நகரை அண்மித்த பகுதியில், வாகனத் தரிப்பிடம், Attach Bathroom மற்றும் வசதி கொண்ட இடம் தேவை.
*தொடர்பு:* 077 3630885
077 3558644

**உடன் விற்பனைக்கு**

புதிதாக மீளமைக்கப்பட்ட சிவப்புநிற HONDA CD 200 (Road Master) வகை மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (விலை பேசித் தீர்மானிக்கப்படும்.)
தொடர்பு: 077 7261946

**கணனி விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள P4, 2.26 GHz, Computers Full Set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன ஒரு வருட உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை 16,750/= மட்டுமே).
தொடர்பு:
SKY COMPUTER SYSTEM
162, Main Street, Jaffna. T.P.: 021 222 1417

**வீடு வாடகைக்கு**

No.76, ஒஸ்மானியாக் கல்லூரி வீதி, நாலு சந்தி, நாவலர் வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொ.பே: 0777224942, 0778156712

**தேவை**

பகல் நேரத்தில் பெண் ஒருவருக்குப் பாதுகாப்பாக இருக்கக் கூடிய பெண் ஒருவர் தேவை. வேறு எவ்வித வேலைகளும் வழங்கப்பட மாட்டாது. நகரப் பகுதியில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.
077 7630215 (பிற்பகல் மட்டும் தொடர்பு கொள்க)

**விற்பனைக்கு**

Nokia N900, N97 Phone and Sony Brovia LCD TV (32") விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 1551517, 077 2208048

**காணி விற்பனைக்கு**

இணுவில் வடகிழக்கில் புகையிரத வீதிக்கு அருகில் 8 பரப்பு 5.2 குளி வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. பகுதியாகப் பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0779465887

**விற்பனைக்கு**

MF 135 ... விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6154078



A/L 2010 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு.
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

DMI COMPUTER EDUCATION

Real Offer 75% for All
உண்மைக் கட்டணக்கழிவு

DIPLOMA IN PC APPLICATION
DIPLOMA IN MICROSOFT OFFICE
ADV. DIP. IN HARDWARE & NETWORKING
DIPLOMA IN PRE-PRESS DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIP. IN WEB PAGE DESIGNING AND DEVELOPMENT
TALLY FINANCIAL ACCOUNTING TRAINING
ICDL AutoCAD INTERNET E-MAIL



மல்ரிமீடியா கற்கைநெறிகள்.
DIP. IN VIDEO PRODUCTION AND MULTIMEDIA
MASTERS DIPLOMA IN DIGITAL ANIMATION
MASTERS DIP. IN MULTIMEDIA or ANIMATION

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
10/9/2010 9.00 a.m.
13/9/2010 10.00 a.m.
18/9/2010 9.00 a.m.

சர்வதேச அங்கீகாரத்துடன்.
veta Experts in English Training An ISO 9001:2008 Company
ITECS Tally IAB

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English பயிற்சி மையம்

ஆங்கிலம் பேசலாம் வாங்க
Come, let's speak fluent English



veta®
Experts in English Training
An ISO 9001:2000 Company

veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 கிளைகள் மூலம். ஆங்கிலத்தைப் பயிற்றுவிப்பதில் வல்லுநர்கள், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் பேச்சுத் திறமைக்கு ஒளி விளக்காக விளங்கியவர்கள்.

Foundation English — For beginners who want to read and write English.
Fluent English First Step — For people who are doubtful about their English and want to speak English fluently.
Fluent English Next Step — For sperkers of English who want to master diction and style.

For whom ?
உயர் கல்விகற்போர், பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவுள்ளோர், Student Visa க்கு விண்ணப்பிக்க இருப்போர்க்கு. யாழில் முதன்முறையாக Online பயிற்சி பாடங்கள். (கணினி ஊடான ஒலி - ஒளி வாயிலான பயிற்சிபாடங்கள்.) சிங்கப்பூரில் இருந்து பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ்கள்.

veta புதிய பிரிவுகள் ஆரம்பம்.
10/9/2010 9.00 a.m.
11/9/2010 9.00 a.m. & 3.30 p.m.
13/9/2010 9.00 a.m.

IELTS
புதிய பிரிவுகள் ஆரம்பம்

நவீன நுட்பங்களுடன் இலகுவான முறையில் ஆங்கிலம் பேசப் பயிலலாம்.
மேலதிக விபரங்களுக்கு

DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M. M. V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-320 7700


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சியாமளா



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை சியாமளா நேற்று (08.09.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - கனகேஸ்வரியின் அன்பு மகளும் காலஞ்சென்ற பகீரதி மற்றும் பகீரதன், உமாகாந்தன், கெங்காகரன், அனோசன், கௌசியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2010) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சைவப்பிரகாச வீதி,*
*கல்வயல், சாவகச்சேரி.* (10770)

தகவல்:
குடும்பத்தினர்.
*தொ.பே.: 021 3734248*

### பொன்னையா பத்மநாதன்

(முன்னாள் உரிமையாளர், புதிய தங்கமாளிகை, பிரதான வீதி, பருத்தித்துறை.)

புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ரொறன்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பத்மநாதன் கடந்த 02.09.2010 முற்பகல் 11.05 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் புலோலி வடக்கு காலஞ்சென்ற பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் (தங்கரத்தினம்) அன்புக் கணவரும், சோதிலிங்கம் (பிரான்ஸ்), அபிதகுசலாம்பிகை (லண்டன்), பத்மலோசனி (பட்டு - கனடா), தேவலிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 06.09.2010 அன்று ரொறன்ரோ, கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்மபவனம்,*
*புலோலி வடக்கு,*
*பருத்தித்துறை.* (101760)

தகவல்:
பொ.கெங்காதரன்
*(சகோதரன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜனநாயகத்துக்கு நேற்றுக் கரிநாள்

நாட்டில் பெரும் அரசியல் சர்ச்சையை உருவாக்கிய அரசமைப்புக்கான பதினெட்டாவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நேற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் மேலதிகமாகப் பதினொரு வாக்குகளைப் பெற்று அமோகமாக நிறைவேறியது.

இந்தச் சட்டம் நாட்டில் சர்வாதிகாரத்தை ஏற்படுத்த வகை செய்யும் என்பதே யதார்த்தம். மக்கள் நலனில், நாட்டு நலனில் அக்கறை உள்ள, தேசப்பற்றுள்ள கல்விமான்கள், புத்திஜீவிகள், சட்டமேதைகள், துறைசார் நிபுணர்கள், முன்னாள் அரசியல் தலைவர்கள் என்று பல தரப்பினரும் கெடுதிகளை விளக்கியும் விமர்சித்தும் வந்தனர். ஆனால் அவர்களின் கருத்துக்களை செவியில் போட்டுக் கொள்ளும் நிலையில் ஜனாதிபதியோ அவரது மந்திரிப் பிரதானிகளோ இல்லை.

குறிப்பிட்ட அரசமைப்புத் திருத்தம் நாட்டுக்கு நலன்களையே செய்யப்போகிறது என்ற நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் விதைக்கும் யுக்திகள் அத்தனை யையும் கையில் எடுத்துச் செயலாற்றினார்கள் அவர் கள். அரசுக்குச் சார்பான, அரசமைப்புச் சட்டத் திருத் தத்தை ஆதரித்துக் கருத்துக் கூற வல்லவர்களைக் கண்டுபிடித்து, ஏன் 'உருவாக்கியும்' தங்களது நிலைப்பாட்டைச் சொல்லவும், எழுதவும் வைத்தனர்; வைப்பித்தனர்.

இதற்குச் சிகரம் வைத்தாற்போன்று, ஜனாதிபதியே கொழும்பில் பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து, பதி னெட்டாவது அரசமைப்புத் திட்டத்தினை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்ற நிலைப்பாட்டைக் கருவாகக் கொண்டு விளாசினார்.

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சக்திமிக்க வேட்பாளரை நிறுத்தும் வரை நான் தேர்தலில் போட்டி யிடுவேன். ஜனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை தடவைகள் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். மக்கள் விரும்பும் வரை ஒருவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம். இந்தத் திருத்தம் ஜனநாயகத்துக்கு முரணானது அல்ல - எனத்தெரிவித்து தமது நடவடிக்கை சரியானதே என்று நிலை நாட்டினார்.

அரசமைப்புக்குக் கொண்டுவரப்படும் எல்லாத் திருத்தங்களுக்கும் தனித்தனியாக மக்களின் ஆணை பெறத் தேவையில்லை என்றும் அவர் அடித்துக் கூறியிருக்கிறார்.

தாம் செய்வது எல்லாம் சரியே என்ற நிலைப்பாட்டுக்குச் சாதகமான விடயங்களை மட்டுமே அவர் பத்திரிகை ஆசிரியர்களிடம் கொட்டிக் குவித்தார்.

இன்னும் சில வாரங்களில் நாடாளுமன்றுக்கு வரவு - செலவுத் திட்டம் வரப்போகிறது. அதனைத் தொடர்ந்து வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதம் நடைபெறும். ஆகையால் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற இதுவே தகுந்த தருணம் என்றும் தமது அவசரத்துக்குச் சார்பான நேர அட்டவணையையும் விளங்கப்படுத்தினார்.

நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் தாம் வகுப்பதை, திட்டமிடுவதை, சொல்வதை செய்தே தீருவார் என்ற சர்வாதிகாரத் தொனி பத்திரிகை ஆசிரியர்கள் சந்திப்பில் வெளிவந்திருந்தது.

தலைவர் வழியிலே மந்திரிப் பிரதானிகளும் என்ற ஒழுங்கில், அமைச்சர்களும் தமது அரசாங்கம் செய்வது சரியே என்ற பிரசாரத்தை முடுக்கிவிட்டிருந்தார்கள். தாங்கள் கூறுவது எல்லாம் உண்மையிலும் உண்மையே; சத்தியத்திலும் சத்தியமே என்று 'கற்பூரம் மீது தொட்டுக்' கூறியிருந்தனர் அமைச்சர்கள்!

நாடாளுமன்றில் நேற்று 161 வாக்குகளை ஆதரவாகப் பெற்று நிறைவேறிய அரசமைப்புக்கான பதினெட்டாவது திருத்தச் சட்டம் மக்கள் நட்புறவு ஆட்சிக்கு வழிசெய்யும் என்றும், 1978 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்காகவே புதிய திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்றும் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

ஜனாதிபதிக்கு உள்ள மிதமிஞ்சிய அதிகாரத்தையும் குறைக்கவேண்டும் என்ற குரல் பல வருடங்களாக எழுப் பப்பட்ட போதிலும், அதனை முந்திய அரசுகள் காதில் போட்டுக் கொள்ளவில்லை என்றும், இப்போதைய அரசே மக்கள் விருப்பத்துக்கு மதிப்பளித்து அதனைக் கொண்டு வந்ததாகவும் அவர் அண்டப் புழுகை அவிழ்த்துவிட்டார்.

புதிய சட்டத் திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வந்து பொறுப்புக்கூற வேண்டிய தேவை இருப்பதால், அவர் மிக்கப் பொறுப்புடன் செயற்பட இப் புதிய சட்டத்திருத்தம் வகை செய்கிறது என்றும் சிறிசேன விளக்கினார்.

அதுமட்டுமா, புதிய சீர்திருத்தத்தின் பின்னர், சுதந்திரமாக இயங்கும் ஆணைக்குழுக்கள் அரச தலைமைப் பீடத்தின் தலையீடு இன்றி அதிக அளவில் சுதந்திரமாக இயங்க வகை செய்யப்பட்டிருப்பதாகப் பெருமிதப்பட்டார் அமைச்சர் சரத் அமுனுகம. அப்பாடா! எத்துணை உண்மை, அமைச்சர் காட்டிய மறுபக்கம்!

இவர்களைவிட, அரசதரப்பு வாதங்களுக்குச் சிகரம் வைத்தார் அமைச்சர் ரம்புக்வெல. முப்பது வருடமாக நாட்டை அச்சுறுத்திய பயங்கரவாதிகளின் போரை முடிவுக்கு கொண்டு வந்த கையோடு நாடு இப்போது மிகப் பலமான நிலையை அடைந்துள்ளது. அபிவிருத் தியை நோக்கி வீறுநடை போட இதுவே நல்ல தருணம். அதனாலேயே அரசமைப்புத் திருத்தத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது -

எந்த நல்ல காரியத்தையும் எதிர்ப்பதனையே தமது கொள்கையாகக் கொண்டுள்ள எதிர்க் கட்சியினரின் நிலைப்பாட்டை தாம் கருத்தில் கொள்ளவேண்டிய தேவை இல்லை என்பது ரம்புக்வெலவின் நிலைப்பாடு.

அரசாங்கம் ஆற்றுவது அத்தனையும் சரி என்ற மமதை மேலோங்க, அமைச்சர்கள் கருத்துக் கூறியதற்கு அடிப்படைக் காரணம், பிரதான எதிர்க் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தூண்டில் போட்டு இழுத்த மெத்தனத்தில் அமைச்சர்கள் தமது நிலையே சரியென்று நிறுவினார்கள்.

எதிர்க்கட்சிகள் அரசமைப்புத் திருத்தத்தை ஆட்சேபித்து ஊர்வலம் நடத்தியதற்குப் பதிலாக அரசு அதனை ஆதரித்து தானும் ஊர்வலங்களை நடத்தியது.

தலையைக் கீழே வைத்தேனும் தான் நினைத்ததை அரசு செய்துவிட்டது. எதிர்க்கட்சியிலிருந்து நாடாளு மன்ற உறுப்பினர்களைக் காந்தம்போன்று இழுக்கும் சக்தி எல்லா விதங்களிலும் அரசு வசம் இருந்தது; இருக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இனி என்ன? வெற்றி அரசுக்கே என்பதால் மக்களின், நாட்டின் எதிர்காலத்துக்கு அரோகரா! மக்கள் ஆட்சி என்பது மருந்துக்கும் கிடைக்காமல் போகும் என்பது நிதர்சனமாகிவிட்டது. ஜனநாயகம் தலை கீழாகக் கூத்தாடும்!

# அபாயம் நிறைந்த 'குமுதினி' பயணத்துக்கு தீர்வு காண எவரும் முன் வராதது ஏன்?

## நேற்றும் அது நடுக்கடலில் தத்தளிப்பு

யாழ்ப்பாணம், செப்.9

குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நேற்றுப் பயணிகளுடன் நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்ட குமுதினிப் படகு இயந்திரக் கோளாறு காரணமாக நடுக்கடலில் நின்று தத்தளித்தது.

காலையில் குறிகாட்டுவானிலிருந்து புறப்பட்ட படகு பிற்பகல் 1.45 மணியாகியும் நெடுந்தீவுக்குச் சென்றடையாததால் தேடிப் புறப்பட்ட கடற்படைப் படகும் 'அக்குவாட்டி' படகும் கடலில் தத்தளித்தவாறு நின்ற ''குமுதினி'' படகை நெடுந்தீவுக் கரைக்கு இழுத்துச் சென்று கரைசேர்த்தன.

'குமுதினி' படகு அடிக்கடி பழுதடைந்து நடுக்கடலில் நிற்பது வாடிக்கையான விடயமாகிவிட்டது என விசனம் தெரிவிக்கும் மக்கள், இதுகுறித்து அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் கோரிக்கைகள் விடுத்தபோதும் அவர்கள் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

நெடுந்தீவுக்கு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச உயர் அதிகாரிகளும் வெறுமனே வாக்குறுதிகளை மட்டும் அள்ளிவீசிவிட்டுச் செல்வதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (த-6-7)

# பாதிக்கப்பட்ட முல்லை. மாணவிக்கு நீதி கிடைத்தது; தட்டிப்பறித்தவரின் பல் மருத்துவபீட அனுமதி ரத்து!

யாழ்ப்பாணம்,செப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவியொருவர், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முயற்சியால் பேராதனை பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

குறித்த மாணவி 2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி மாவட்ட மட்டத்தில் 6ஆம் தர நிலையைப் பெற்றிருந்தார். பல்கலைக்கழகத்துக்கு முதல் தெரிவாக மருத்துவ பீடத்தினையும், இரண்டாவது தெரிவாகப் பல் மருத்துவ பீடத்தினையும் விண்ணப்பித்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட கோட்டாவின்படி குறித்த மாணவிக்கு மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகும் வாய்ப்புக்கள் இருந்தன. எனினும் குறிப்பிட்ட இரு துறைகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர் பட்டியலில் குறித்த மாணவியின் பெயர் இடம் பெறவில்லை. எனவே இதுதொடர்பாக - மனித உரிமை ஆணைக்குழுவில் 24ஆம் திகதி ஆறாம் மாதம் முறைப்பாடு செய்யப்பட்டது.

மாணவியின் முறைப்பாடு தொடர்பாக உரிய விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்ட போது சில உண்மைகள் தெரியவந்தன.

குறித்த மாணவியின் இடத்துக்கு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவனொருவனது பெயர் வெளியிடப்பட்டது. திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவனது பெயரே அவ்வாறு வெளியிடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குக் குறித்த மாணவன் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியில் தான் 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் இணைந்து கொண்டதாகவும் அதற்கு முதல் முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலத்தில் கல்வி கற்றதாகவும் கடிதம் அனுப்பியிருந்தார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்ட விதிகளின் பிரகாரம் ஒருவர் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு 3 வருடங்களுக்கு முன்னர் எப்பிரதேசத்தில் கல்வி கற்றாரோ அப்பிரதேசமே அவரது தோற்றுதல் மாவட்டமாகக் கொள்ளப்படும் என்பதால், குறித்த மாணவன் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவராகக் கொள்ளப்பட்டு அவரது பெயர் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணையின்போது குறித்த மாணவன் முல்லைத்தீவில் கல்வி கற்கவில்லையெனவும் போலியான ஆவணத்தையே சமர்ப்பித்தார் என்றும் தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் குறித்த மாணவனுக்கு வழங்கப்பட்ட அனுமதி தற்போது, பாதிக்கப்பட்ட மாணவிக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த மாணவி நேற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதிவுகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (எ-15)

# ஐ.தே. கட்சிக்குத் தலைமை வகிக்க தயார் என்கிறார் சஜித் பிரேமதாச

கொழும்பு, செப். 9

நாட்டின் ஐ.தே. கட்சி ஆதரவாளர்களில் பெரும்பான்மையோரின் ஆதரவு கிடைக்குமானால் எதிர்வரும் ஐ.தே. கட்சியின் வருடாந்த மாநாட்டில் கட்சியின் தலைமைத்துவத்தைக் கையேற்கத் தாம் தயாராகியிருப்பதாக அம்பாந்தோட்டை மாவட்ட ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனுமாகிய சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தாம் அவ்விதம் ஐ.தே. கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இன்று பெரும் பின்னடைவு நிலை கண்டுள்ள ஐ.தே. கட்சியைக் கட்டியெழுப்பி வெற்றிப் பாதையில் இட்டுச் செல்லத் தம்மால் இயலுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். அந்தவகையில் எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள தேர்தல்களில் ஐ.தே. கட்சியை வெற்றிவாகை சூடவைக்கும் திறன் தமக்குண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள நாளிதழொன்றுக்குக் கருத்து வழங்கிய சமயமே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (த)

# பக்தர் வெள்ளத்தின் வேகத்தால் தீர்த்தத்தில் திணறிய பொலிஸார்

யாழ்ப்பாணம், செப். 9

தீர்த்தக் கேணியைச் சுற்றிச் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையிலிருந்தபோதும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் திரண்டு வந்து தீர்த்தமாடியதால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திகைத்து நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்று நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய தீர்த்தத் திருவிழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

ஆலயக் கேணியில் தீர்த்தமாடும் போது ஏற்படும் சனநெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில் சுமார் 60இற்கும் மேற்பட்ட பொலிஸார் நேற்றுக் காலையிலேயே தீர்த்தக் கேணியைச் சுற்றிக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

எனினும் பக்தர்கள் தீர்த்தமாடித் தமது நேர்த்திகளை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆவலில் பொலிஸாரின் தடைகளையும் மீறித் தீர்த்தக் கேணியில் குதித்துத் தீர்த்தமாடியதைக் காணமுடிந்தது. (த-16)

# யாழ்ப்பாணத்தில் வேலையற்ற இளைஞரின் விவரங்களைத் திரட்டுகிறது முதலீட்டுச் சபை

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளின் விவரங்கள் இலங்கை முதலீட்டுச் சபையினால் திரட்டப்படுவதாக இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ். பிராந்திய சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் ஏ.ஆர்.ஜெயமனோன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு :-

இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ். மாவட்டக் காரியாலயத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகிறது.

இதில் வேலையற்ற இளைஞர், யுவதிகளின் விவரங்கள் தரம் 8 வரை படித்தவர்கள், ஜி.சீ.ஈ. (சா/த) படித்தவர்கள், ஜி.சீ.ஈ. (உ/த) படித்தவர்கள், பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள், தொழில் நுட்பக் கல்வி கற்றவர்கள் என்ற தகைமைகளின் அடிப்படையிலேயே மேற்படி விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

எனவே மேற்படி இளைஞர், யுவதிகள் தமது விவரங்களை கண்டி வீதியிலுள்ள வீடமைப்புச் செயலகக் கட்டட முதலாம் மாடியிலுள்ள இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் பிராந்தியக் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் - என்றார். (த-16-26)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 25 | 10.09.2010 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | : துதியை ந.ப.12.01 வரை |
| நட்சத்திரம் | : அத்தம் மு.இ.10.46 வரை |
| சுபநேரம் | : 06.03-07.33 வரை |
| ராகுகாலம் | : 10.33-12.03 வரை |

# நல்லூர் தேர்த்திருவிழாவன்று இராணுவம் 10 ஆயிரம் உணவுப் பொதிகளை வழங்கியது

யாழ்ப்பாணம், செப். 9

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழாவான நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை இராணுவத்தினர் ஆலயத்துக்கு வந்த பக்தர்களுக்கு 10 ஆயிரம் உணவுப் பொதிகளை வழங்கினார்கள்.

யாழ். மாவட்டப் படைகளின் தளபதியின் ஆலோசனையின் பேரில் 51 ஆவது, 52ஆவது படையணிகள் பக்தர்களுக்கான மதிய உணவை வழங்கின.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் அருகில் இடம்பெற்ற இந்த உணவுப் பொதி வழங்கும் நிகழ்வில் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, 51ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் என்.ஜே.வல்கம, யாழ். பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி பிரிகேடியர் பி.சி.ஜே.ஏ.எவ்.றொட் றிக்கோ உட்படப் பல இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இம்முறை நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவில் வெளிநாட்டில் இருந்தும், தென்னிலங்கையில் இருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவகணேசசர்மா ஸ்கந்தசிவரூபசர்மா

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வி.சிவகணேசசர்மாவின் புத்திரன் ஸ்கந்த சிவரூபசர்மா (நல்லூர் பூசகர்) நேற்று (08.09.2010) புதன் கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
செட்டித்தெரு,
நல்லூர். 021 3217055 (103121)

# வலி.தென்மேற்குப் பிரதேச அபிவிருத்திக் கூட்டம்


சண்டிலிப்பாய், செப். 9

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் பிரதேச கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் காணிக் கொள்வனவு, பிரதேச சபைக்கான தலைமைக் கட்டடம் அமைத்தல், நூலக இடமாற்றம், டெங்கு தடுப்பு நடவடிக்கை உட்பட பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இது சம்பந்தமாக மக்களின் ஆலோசனையைப் பெறுவதற்காக இடம்பெறும் இக்கூட்டத்தில் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், வர்த்தக சங்கப் பிரதி நிதிகள் உட்பட நலன்விரும்பிகள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-115)

# மரண அறிவித்தல்



## இராசலிங்கம் பஞ்சலிங்கம்

*(Retired Chief Clerk, Police Transport Office, Narahenpitiya)*

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இராசலிங்கம் பஞ்சலிங்கம் 07-09-2010 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இணுவில் இராசலிங்கம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காரைநகர் சிதம்பரப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் சுபோதினி, வினோதினி, கிரிதரன், விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், சிவபாலன், சுபாஷினி, பிரதாபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அர்ச்சனா, வைஷ்ணவி, அபிநாஷ், நேகா, நிடேஷ் ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற சொர்ணலிங்கம் மற்றும் குணலிங்கம், இராஜேஸ்வரி, தியாகலிங்கம், சொர்ணம், யோகலிங்கம், றஞ்சனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவனேசமணி, சறோஜா, கருணானந்தராஜா, சுவர்ணா, சந்திரா காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சண்முகேஸ்வரன், வத்சலா, வாசுகி, கௌதமி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சஞ்ஜீவனி, லக்ஷிகா, சஜீவ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் பிரதாபன், பிரஷாந்தன், சதீஸ், சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-09-2010) வியாழக்கிழமை ***Highland Funeral Home and Cremation Centre, Scarborough, Ontario*** கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கருணானந்தராஜா,
மைத்துனர், இணுவில்.
T.P.: 0213214012.

திருமதி பஞ்சலிங்கம்
T.P.: 001-416-291-3787

# அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

கோப்பாய், செப். 9

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்குஇன்று நடைபெற விருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அது நடைபெறும் எனவும் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (த-72)


# ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்

edexcel
HND
Higher National Diploma
HND in Computing (General)
HND in Computing (ICT System Support)
HND in Computing (Software Development)

bcs British Computer Society
The Chartered Institute for IT
Certificate in IT
Diploma In IT
Professional Graduate Diploma in IT



இரண்டு கற்கை நெறிகள்,
ஒரு கற்கை நெறிக்கான கட்டணம் !

தகவல் தொழில் நுட்பத்துறையில் உலகின் தலைசிறந்த தகைமைகளை வழங்கி வரும் ஜாம்பவான்களான BCS, Edexcel நிறுவனத்தின் HND சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பினை IIS City Campus நிறுவனம் ஏற்படுத்திக்கொடுக்கின்றது. HND கற்கை நெறிக்கு பதிவினை மேற்கொள்ளும் மாணவர்கள் முற்றிலும் இலவசமாக BCS கற்கை நெறியினை பயிலமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900

உலகின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் துறையிலே உயர்கல்வியினை வழங்கிவரும் பிரித்தானிய BSC (British Computer Society) நிறுவனமானது 1969ம் ஆண்டிலிருந்து தனது சேவையை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனம் வட இலங்கையிலே தனது கல்விச் செயற்பாட்டை விஸ்தரிக்கும் முகமாக IIS CITY CAMPUS நிறுவனத்துடன் சேர்ந்து இயங்கவுள்ளது. இந்நிறுவனத்தின் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் September மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வட இலங்கையிலே BCS நிறுவனத்தின் நேரடியான அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பயிற்ச்சி மையம் IIS CITY CAMPUS என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகின் தலைசிறந்த இரண்டு நிறுவனங்களின் சான்றிதழை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை IIS CITY CAMPUS நிறுவனம் குடாநாட்டு மாணவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கின்றது. இலங்கையில் இதுவரை எந்த ஒரு நிறுவனமும் சிந்திக்காத வழங்காத வாய்ப்பாகும்.

IIS CITY CAMPUS
200,Sivan Pannal Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk


# சேவை நலன் வாழ்த்து



எமது கல்லூரியில் கடந்த 14 வருடங்களாக விஞ்ஞான ஆசிரியையாகச் சேவை யாற்றி 09.09.2010 இன்று ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற

## திருமதி சரோஜினி இரங்கநாதன்

(ஆசிரியை S.L.T.S-I)

அவர்களின் சேவையினை நயந்து பாராட்டுவதுடன் நீண்டகாலம் நலமுடன் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

சேவை விபரம்

*1974.05.02-1979.07.01* அம்பாறை அரசினர் தமிழ் வித்தி.
*1979.07.02-1981.12.03* ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை
*1982.01.01 - 1996.12.31* வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
*1997.01.01. -* இன்றுவரை உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

ஆசிரியர் கழகம்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

# அரசாங்க அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

### 2010 ஆம் ஆண்டுக்கான தளபாடம்/உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள் கோருதல்

மாவட்ட செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காக கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. பெறுகைதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்துதல் வேண்டும். இச்செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக் கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2010 ஆம் ஆண்டுக்கான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள்'' எனக்குறிப்பிட்டு 2010.09.29 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியில் இடல் வேண்டும். அல்லது தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு, பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். பெறுகைகள் அன்றைய தினம் பி.ப. 3 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

கீழ்க்குறிப்பிடப்படும் தளபாடம்/அலுவலக உபகரணங்களுக்கான பெறுகை விண்ணப்பப்படிவங்களையும் மாதிரிப் படங்களையும் செயலக களஞ்சிய நலன்புரி கிளையில் 2010.09.09 ஆம் திகதி தொடக்கம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மாதிரிக்கொவ்வாத பொருள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| 1. மரத்தளபாடங்கள் | 4. அலுவலக உபகரணங்கள் |
| கைபிடிக் கதிரை | மேசை கணனி (Desk Top Computer) |
| எழுதுநர் மேசை | மடிக் கணனி (Laptop Computer) |
| பதவி நிலை உத்தியோகத்தர் மேசை | இரட்டிப்பு இயந்திரம் (Ronio Machine) |
| கணனி மேசை | நிழல்படப்பிரதி இயந்திரம் (Photocopier) |
| 2. உருக்குத் தளபாடங்கள் | திரையிடு கருவி (Multimedia Projector) |
| உருக்கு அலுமாரி | மின் சீராக்கி 1000w (Stabilizer 1000w) |
| கோவை அலுமாரி | இடையறா மின் வழங்கி (UPS) |
| கோவைத் தட்டு | மின்சார நீர்ப்பம்பி |
| 3. பிளாஸ்ரிக் சார்ந்த பொருள்கள் | இரும்பு காப்பு பெட்டகம் |
| பிளாஸ்ரிக் கைபிடிக்கதிரை | நீர் வடிகட்டி |
| கணனிக்கதிரை | புகைப்படக் கருவி (Camera) |

திருமதி இமெல்டா சுகுமார்,
தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, யாழ்.மாவட்ட செயலகம்.
(சி/570756)

# ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 08 |
| ★ | ★ |
| 12 | 09 |
| ★ | ★ |
| 1917 | 2004 |



## அமரர் பண்டிதர் அ.ஆறுமுகம்

பண்ணாகம் விசவத்தனை வேலவர்
பாதத்தை வணங்கி யாவரும் நினைவு
கொள்வோம்.
இன்றுடன் ஆறு ஆண்டுகள் மறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவாக நாம் வாழ்ந்து
வருகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

அறக்கட்டளை
நினைவுக்குழுவினர்.
பண்ணாகம், சுழிபுரம்.
(சி/570767)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற தீர்த்தோற்சவத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இதில் நல்லூர்க்கந்தன், விநாயகர், வள்ளி, தெய்வானை சகிதம் தீர்த்தமாட எழுந்தருளி வருவதை முதற்படத்திலும், பக்தர்கள் காவடி மற்றும் பறவைக்காவடி எடுத்துத் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்வதை அடுத்த இரு படங்களிலும், பக்தர்கள் தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.
(படங்கள்: ரட்ணம்,லக்ஸ்மன்,சுகந்தன்,நேசன்)

# யாழ்ப்பாணத்தில் கல்லுடைக்கும் ஆலைகளுக்கு சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரம்

நாவற்குழி ,செப்.9

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகம் கல்லுடைக்கும் தொழிற்சாலைகளுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

பொதுமக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் இயங்க வேண்டுமென்ற நோக்கிலேயே இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது.

இந்த அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதில் யாழ். மாவட்டத்திலுள்ள கல்லுடைக்கும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் நாட்டம் காட்டுகின்றனர்.

சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரிகள் இத்தொழிற்சாலைகளின் தரம், சூழலுக்கு அவை தீங்கு பயக்காத தன்மை, பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தீமை பயக்காத நிலைமை போன்றவற்றைக் கருத்திற் கொண்டு அனுமதிப் பத்திரத்திற்குரிய சிபாரிசை முன்வைக்கின்றனர்.

சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெறாத கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் எதுவுமே இயங்க முடியாத நிலை ஏற்படுமெனவும் கூறப்படுகின்றது. (த-121)

# மனைவியின் நகை களவாடப்படுவதை தடுத்த கணவரின் கையில் கடித்த பெண்

யாழ்ப்பாணம்,செப்.9

மனைவியின் தாலிக் கொடியை அறுக்க முற்பட்ட பெண்ணைக் கணவர் கையும் மெய்யுமாகப் பிடித்த வேளையில் திருட்டில் ஈடுபட்ட பெண் கணவரின் கையில் கடித்து காயம் உண்டாக்கிய சம்பவம் நல்லூர் தேர்த் திருவிழாவில் இடம் பெற்றுள்ளது.

நல்லூர் ஆலயத் தேர்த்திருவிழாவில் பெண் ஒருவர் தனது கணவருடன் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளையில் அந்தப் பெண்ணின் தாலிக் கொடியை அந்தக் கூட்டத்தில் இருந்த மற்றொரு பெண் அறுக்க முற்பட்டுள்ளார். இதனை அவதானித்த கணவர் குறிப்பிட்ட பெண்ணின் கையை எட்டிப் பிடித்துள்ளார்.

உடனே திருட்டு முயற்சியில் ஈடுபட்ட பெண் தன்னைப் பிடித்தவரின் கையைக் கடித்து விட்டுத் தப்ப முயன்ற போதிலும் காயம் ஏற்பட்ட போதும் கணவர் ஏனையவர்களின் உதவியுடன் திருட்டுப் பெண்ணைப் பிடித்து பொலிஸில் கொடுத்துள்ளார்.

அதன் பின்னர் அவர் தனியார் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார். (த-86)

# நலன்புரி நிலையத்தில் கண் சிகிச்சைமுகாம்

யாழ்ப்பாணம் ,செப்.9

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொடிகாமம் இராமாவில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் இலவச கண் சத்திரசிகிச்சை முகாமொன்று கடந்த செவ்வாய் காலை 9 மணி முதல் நண்பகல் வரை நடைபெற்றது.

இந்த இலவச கண் சிகிச்சை முகாமில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்களால் அங்கு தங்கியுள்ள மக்களுக்கான இலவச கண் வைத்திய பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

அந்த வைத்திய சேவையில் 97 பொதுமக்கள் சிகிச்சைக்குட்படுத்தப் பட்டனர். (பரிசோதனை) இவர்களில் 46 பேர் உடன் சிகிச்சைக்கான மருந்து வழங்கப்பட்டன. ஏனைய 51 பேர் உரிய சிகிச்சை பெற அறிவுறுத்தப்பட்டனர். (த-131)

# பழுதடைந்த பொருள்களின் நட்டம் கிளை முகாமையாளர்களின் தலையில்

## மானிப்பாய் சங்கப் பணியாளர் விசனம்

சண்டிலிப்பாய் ,செப்.9

கூட்டுறவுச் சங்க கிளைகளில் பழுதடைந்த நிலையில் இருக்கும் பொருள்களின் நட்டத்தைக் கிளை முகாமையாளர்களே பொறுக்க வேண்டுமாம். சங்கத்தின் இந்த நிலைப்பாடு குறித்து பணியாளர்கள் கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ளார்கள்.

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளைகளுக்குத் தேவையான பொருள்களைச் சங்கத்திலிருந்து கிளைகளுக்கு அனுப்பி வருகின்றது. இப்பொருள்களில் சில பொருள்கள் பல நாள்களாக விற்பனை செய்யப்படாமல் இருப்பதால் அப்பொருள்களின் தரம் குறைந்து காணப்படுவதுடன் பாவனைக்கு உதவாதவாறு பழுதடைந்து வருகின்றன.

இப்பொருள்களை மக்கள் வாங்கப் பின்னடிப்பதால் இவை கிளைகளில் தேங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சில முகாமையாளர்கள் இப்பொருள்களைத் தந்திரமாக மக்களிடம் செலுத்தி வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நிலையில் கிளைகளில் இருப்பெடுக்கும் சமயங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள பொருள்களை ஏற்கச் சங்கம் மறுப்பதினால் இப்பொருள்களின் நட்டத்தைக் கிளை முகாமையாளர்களே ஏற்க வேண்டிய நலை உருவாகியுள்ளது.

சங்கத்தின் இந்த நிலைப்பாடு குறித்து கவலையும் அதிருப்தியும் அடைந்துள்ள பணியாளர்கள் சங்கத்தில் தொடர்ந்தும் வேலை செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த சுமையைத் தாங்களே சுமந்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப் படுகின்றது. (த-115)

# 'மிஹின் லங்கா' யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம் ,செப்.9

'மிஹின் லங்கா' விமான நிறுவனத்தின் புதிய கிளை எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 289, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டு புதிய கிளையைத் திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் கலந்துகொள்வார்.

பலாலி- கட்டுநாயக்கா இடையேயான உள்ளூர் விமான சேவையை 'மிஹின் லங்கா' நடத்த ஏற்பாடு செய்துள்ளதோடு வெளிநாடுகளுக்கான விமானப் பயணச் சீட்டையும் யாழ். கிளையில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை யாழ். குடாநாட்டில் ஸ்ரீலங்கன் எயார் வேய்ஸ், இந்தியன் எயார்வேய்ஸ் நிறுவனங்களின் முகவர்கள் மட்டுமே செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (த-16)

# வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபராக திருலிங்கநாதன் நியமனம்

யாழ்ப்பாணம் ,செப்.9

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் துரிதமாக மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதன் உதவி அரசாங்க அதிபராக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் இடமாற்றப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இங்கு கடமையாற்றிய மா.சிறிஸ்கந்தகுமார் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக இடம்மாற்றப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரையில் இதே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உதவி அரசாங்க அதிபராக இடம்மாற்றப்பட்டு நியமனம் பெறுவது இதுவே முதற் தடவையாகும்.

(த-10-236)




# சொந்த இடங்களுக்குச் செல்ல 6 குடும்பங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம் ,செப்.9

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இராமாவில் நலன்புரி முகாமில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களில் 6 குடும்பத்தினர் கடந்த 7ஆம் திகதி நண்பகல் 12.50 மணிக்கு அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல அரசினால் அனுமதியளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் நேற்று இராமாவில் நலன்புரி முகாமில் வைத்து அரச அதிகாரிகள், படையினர் முன்னிலையில் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதியளிக்கப்பட்டது.

இவர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றில் அவர்களது உடமைகளுடன் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளான கேணல் கேமந்த பண்டார, சிவில் அதிகாரி மேஜர் றஞ்சக்கொட,மேஜர் லசலாலகே உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-131)

# வண்ணை கதிரேசன் கோயில் கும்பாபிஷேகம் நாளை காலை

யாழ்ப்பாணம் ,செப்.9

யாழ். திருவண்ணைநகர் கதிரேசன் கோயில் என வழங்கும் செந்தில் வேலாயுத சுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.20 மணி தொடக்கம் 8.40 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, யாக வழிபாடு, அக்கினி வழிபாடு, 7.25 மணிக்கு ஸ்தூபிகள் கோபுர கும்பாபிஷேகம், பிரதான கும்பம் வீதி உலா, 8.40 மணிக்கு கதிர்வேலாயுத சுவாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம், பிற்பகல் 4 மணிக்கு திருக்கல்யாண மகோற்சவம் என்பன நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார்.

இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாடு நடைபெற்று 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (த-204)

# மறவன்புலோவில் மீளக்குடியமர்ந்த 7 குடும்பங்களுக்கு வீடு வழங்கத்திட்டம்

யாழ்ப்பாணம் ,செப்.9

1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக சாவகச்சேரி மறவன்புலோவில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த ஏழு குடும்பங்களுக்கு வீடமைப்பதற்கான நிதி [illegible] டக்குழு வழங்கவுள்ளதாக அதன் தலைவர் எஸ். ஸ்ரீசக்திவேல் தெரிவித்துள்ளார்.

தற்போது மீளக்குடியமர்ந்துள்ள இந்தக்குடும்பங்கள் தமது காணியை வேறு எவருக்கும் கைமாற்றவோ, விற்பனை செய்யவோ கூடாது என்ற நிபந்தனை [illegible] நிதியுதவி வழங்கப்படுவதாகவும் தெரிவித்த அவர் இதற்கான நிதியை சுவிஸ் அபிவிருத்தி அமைப்பு வழங்கவுள்ளதாகவும் கூறினார். (த-6-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு.பரமநாதன் விக்னேஸ்வரன்



வலிகாமம் கல்வி வலயம்
வளர்ச்சி பெற்றிடவே
சலியாது பாடுபட்ட
கல்விப் பணிப்பாளரே!
ஓயாத சேவையால் உயர்ந்து
விட்டீர் உம்பணியில்
மேலான உம் பதவியினால்
மேலோங்கும் வடக்கு.

எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையை மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துவோர்.

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய கல்விச் சமூகம்.
பண்ணாகம், சுழிபுரம்.

# கிளி/முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்

(வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

கிளி/முல்லை மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

பதவி: லிகிதர்
வெற்றிட எண்ணிக்கை - 01
சம்பள குறியீட்டு இல. 302/15 9,450 - 11,000
சம்பள அளவுத்திட்டம் 75X10, 80X10

**தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் லிகிதர் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த. (சாதாரண தரம்) இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம், தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்க லிகிதர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

1. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.
2. விண்ணப்பப் படிவங்கள் தலைவர் கிளி./முல்லை. மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரிலோ, பதிவுத்தபாலிலோ அனுப்புதல் வேண்டும்.
3. விண்ணப்ப முடிவுத் திகதி 30.09.2010.
4. வயதெல்லை - 18 - 45
5. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படும் இடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
6. சங்க எல்லைப் பரப்பில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
7. கணனி அறிவு கவனத்தில் எடுக்கப்படும்.

தலைவர்,
கிளி./முல்லை. மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், கிளிநொச்சி.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 24 ★ 12 ★ 1981

காலனவன் பிடியில் 31 ★ 08 ★ 2008



## கனகரத்தினம் நர்மதன்

ஈராண்டு சென்றாலும் ஓயவில்லை உம் நினைவு
நீராண்ட மனமெல்லாம் உமை நினைத்து துடிக்கிறது
பாராண்ட உம் உறவு பாதியிலே முடியும் என்று
யாரேனும் நினைக்கவில்லை யமன் உம்மை வெல்வானென்று

02, தாமரை வீதி, யாழ்ப்பாணம். (103104)
என்றென்றும் உம் நினைவில் தங்கை.

# சுதந்திரமான மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்க ஆதரவளிக்குக!

கொழும்பு, செப். 08

மருந்து உற்பத்தி தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் தவறான எண்ணங்களை நீக்கி மக்களுக்கு ஏற்ற சுதந்திரமான மருத்துவ சேவையை வழங்க ஆதரவளிக்குமாறு இலங்கை மருத்துவ உற்பத்தியாளர் சபையினரிடம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை மருத்துவ உற்பத்தியாளர் சங்கத்தின் வருடாந்த மாநாடு கடந்த வாரம் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இலங்கை மருத்துவ உற்பத்தியாளர் சபையின் நடப்பு வருடத் தலைவராக ஆனந்த சமரசிங்க இம் மாநாட்டில் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த வருடம் மருந்து உற்பத்தித் தொழிலை மேம்படுத்துவதற்கு முன்னின்று உழைத்த உபதலைவர்களான எஸ்.கோவிந்தசாமி, ஸ்டுவட் செப்மன், செயலாளர் சுதர்சன ஜயதிலக, பொருளாளர் எச்.ஏ.ஏ.பிரியந்த, உதவிக் செயலாளரும் உதவிப் பொருளாளருமான சஞ்சீவ சமரநாயக்க, முன்னாள் தலைவர் ஏ.பஸ்நாயக்க ஆகியோரின் சேவையை பாராட்டி அவர்களை செயற்குழுவுக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

இலங்கை மருந்து உற்பத்தியாளர் சபை தனியார் இயக்கமாக இருந்தபோதும் இந்நாட்டில் சுதந்திர சுகாதார சேவைக்குப் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

கடந்தகாலப் பகுதியில் சுகாதார சேவையில் நிலவிய மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அவசரமாக வெளிநாடுகளிலிருந்து மருந்து வகைகளை இறக்குமதி செய்ய இச்சபை பாரிய பங்களிப்பை வழங்கியது. எதிர்காலத்திலும் இதுபோன்ற நிலை ஏற்பட்டால் உங்கள் பங்களிப்பு எமக்கு அவசியம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (சி)

# யாழ்ப்பாணக் கல்லூரியின் பாரதிவிழா இன்று

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ்மன்றம் நடத்தும் பாரதி விழா இன்று வியாழக் கிழமை மு.ப 10 மணிக்கு 'ஒட்சி' மண்டபத்தில் தமிழ்மன்றத் தலைவர் எஸ்.ஜெயாதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் தொடக்கவுரையைக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனும், ஆசியுரையை பாரதி விழா ஆரம்பகர்த்தாவான தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் அதிவண.கலாநிதி எஸ்.ஜெபநேசனும் வழங்கவுள்ளனர். (த-6)

# சமய சந்நிதிகளில்

காரைநகர், செப் 9

காரைநகர், வேதரடைப்பு ஆலங்கன்றா ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெற உள்ளது.

தினமும் முற்பகல் 10 மணிமுதல் விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து வசந்தமண்டபப் பூசையும் சுவாமி திருவீதி உலா வருதலும் இடம் பெறும். (204-250)

* * *

யாழ்ப்பாணம், செப் 9

காரைநகர், புதுறோட், கிழவன்காடு கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியது.

திருவிழாக் காலங்களில் தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை இரா. செல்வவடிவேல் 'முருகன் கருணை' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (204-250)

# 30 ஆவது பிறந்த தினமும் 21 ஆம் நாள் நினைவு தினமும்



## வைத்தீஸ்வரன் சாரங்கன்

(மருத்துவபீட மாணவன்)

மலர்வு: 09.09.1980
உதிர்வு: 20.08.2010

உலகப் பூங்காவில் உதிர்ந்துவிட்ட மலரொன்று
ஊனுடம்மைப் பிரிந்து இன்று பறந்துவிட்ட உயிரொன்று
ஊரெல்லாம் நடையயின்று ஓய்ந்துவிட்ட உடலொன்று
உன்னதப் படைப்புக்களில் ஒடுங்கிவிட்ட படைப்பொன்று
மண்ணுலகில் உன் பிரிவு ஈடுசெய்ய முடியாதது
இவ் விண்ணுலகில் உன் வரவு விலைமதிக்க முடியாதது
பொன்னுலகப் பயணமதில் புனிதா நீ அமைதிகொள்க
என்னிதய பீடமதில் இனியனே அமர்ந்துகொள்க
உன் பிறப்பால் செழித்த நிலம் உன் புதைப்பால் உயர்கிறது
உன்னைச் சுமந்த அன்னை மனம் உன் இழப்பால் துடிக்கிறது

என்றும் உன் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்
க.தீபன் (நண்பன்)
சிங்கப்பூர். (103110)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பொன்னப்பா இராசம்மா

தோற்றம்: 12.06.1903
மறைவு: 29.08.2000

பின் உரை அமாவாசை
திதி: 09.09.2010
வியாழக்கிழமை

வையகத்தில் வாழ்ந்திட்ட நாளில் உமையுருக்கி
எமை வளர்த்த அன்புமிகவுடைய தெய்வமே!
தாயே உள்ளத்தால் உயர்வாகி வாழ்வுக்கு
வழிகாட்டி மனிதருள் மாணிக்கமாய்
திகழ்ந்த அம்மா பத்தாண்டுகள் ஓடி
மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
மனதில் என்றும் நின்று நிழலாடும்
அம்மா எந்தநேரமும் கடவுளை வணங்கி
வருகிறோம் அம்மா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல. 4,செட்டித்தெரு, நல்லூர். (சி/570751)
மகன், மகள், மருமகன், பேரன், பேர்த்தி, பூட்டி..

# எங்கள் அன்புத் தெய்வத்திற்கு ஆண்டுகள் நான்கு




ஆண்டுகள் நான்கு ஆனதுவோ–அப்பா! நீங்கள்
அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக் கேங்குகிறோம்!
வழிகாட்டும் ஒளியாய்–எம் விழியாய்
உம் வார்த்தைகள் எம்மோடு என்றும்.......
வாழும்.....! வணங்குகிறோம்!

பசுபதீயம், கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரால் நிர்மாணிக்கப்பட்ட கணனிஅறைக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் மங்கள விளக்கேற்றுவதை முதல் படத்திலும், லண்டன் கிளையின் உதவிச் செயலாளர் திருமதி சிவமலர் சிவனருட் செல்வன் கட்டத்தினை நாடா வெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், பாடசாலை அதிபர் த.சோதிலிங்கம் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் இன்று 365 குடும்பங்கள் மீள் குடியேற்றம்

யாழ்ப்பாணம்,செப்.9

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் பணிகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன. முதற்கட்டமாக 365 குடும்பங்களைச் சேர்ந்த 1080 பேர் அங்கு மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தக் குடும்பங்கள் இதுவரை இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப் பட்டிருந்தனர். மீளக்குடியமர்த்தப்படுவதற்காக இன்று காலை பஸ்கள் மூலம் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

வடமராட்சி கிழக்கில் 6 கிராமசேவகர் பிரிவுகளில் இன்று முதல் இடம்பெறவுள்ள மீள்குடியேற்றத்தின் முன்னேற்பாடாக அந்தப் பகுதியில் உள்ள 6 கிணறுகள் நேற்று முன்தினம் சுத்திகரிக்கப்பட்டன.

பருத்தித்துறைப் பிரதேச சபை ஊழியர்கள், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊழியர்கள் மற்றும் இராமாவில் முகாமில் இருந்து அழைத்துச் செல்லப் பட்ட வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்கள் ஆகியோர் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டனர்.

செம்பியன்பற்று அ.த.க பாடசாலை, மருதங்கேணி ப.நோ.கூ.சங்கம், தாளையடி தேவாலயம், உடுத்துறை ம.வி, ஆழியவளை சி.சி.த.க பாடசாலை ஆகியவற்றில் உள்ள கிணறுகளே இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிணறுகள் யாவும் அந்தத்தப் பிரதேசத்துக்குரிய சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையில் சுத்திகரிக்கப்பட்டன.

மீள்குடியேற்றத்தின் முதற்கட்டமாக 365 குடும்பங்களைச் சேர்ந்த 1080 பேர் பஸ்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டு மீள் குடியேற்றப் பணிகள் மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளன. இத்தினங்களில் மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மீள் குடியேற்றங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்து தாளையடிக்கு இ.போ.ச. பஸ் சேவையும் ஆரம்பிக்கப்படும் எனப் போக்குவரத்து சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-10-236-131)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## யாழ்.பாடசாலைகளுக்கு கூட்டுப்பசளைத் தொட்டி

பருத்தித்துறை,செப்.9

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு கூட்டுப்பசளை தயாரிக்கும் தொட்டிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ''பிலிசரு'' தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் இந்தக் கூட்டுப் பசளை தயாரிக்கும் தொட்டிகள் வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் கூட்டுப்பசளை தொட்டிகளை எவ்வாறு உபயோகிப்பது சம்மந்தமான தகவல்கள் அடங்கிய பிரசுரங்களும் விநியோகிக்கப்படுகின்றன.

(த-190)

# மாநகர சபை புதிய கட்டடத்துக்கு பொதுமக்களின் உதவி கோரல்

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய




மூன்று மாடிக் கட்டடத்தை அமைக்கப் பொது மக்களின் உதவி கோரப் பட்டுள்ளது.

திராவிடர் கலைகளை உள்ளடக்கியதாக அமைக்கப்படவுள்ள இப்புதிய கட்டடத்திற்கான அடிக் கல் நாட்டப் பட்டுள்ள நிலையில் கட்டடத்தை சிறந்த முறை யில் அமைக்கப் பொதுமக்களின் உதவியைக்கோரும் யாழ். மாநகரசபை பொதுமகன் ஒருவரிடமிருந்து 100 ரூபா வரை எதிர்பார்க்கின்றது.

இது தொடர்பாக நிதியை வழங்க விரும்பு வோர்களின் வசதிக்காக நல்லூர் கந்தசுவாமி கோயிலிலுள்ள யாழ்.மாநகர சபைத் தற்காலிக பணிமனையின் முன்பாக வைக்கப்பட்டுள்ள பிரசுரத்தை மேலுள்ள படத்தில் காணலாம். (த-7)

# சண்டிலிப்பாய் இந்து அதிபரின் இடமாற்றத்தை ரத்துச் செய்க

## அமைச்சர் டக்ளஸிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.9

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தனுக்கு வழங்கப்பட்டுள்ள திடீர் இடமாற்றத்தை இரத்து செய்யுமாறு கல்லூரி சமூகம் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக கல்லூரிச் சமூகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள விடயம் அறிந்து கல்லூரியின் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், பழையமாணவர்கள் ஆகிய நாம் பெரும் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளோம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியானது அபரீதமானது. அத்துடன் அத்தகைய வளர்ச்சி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சண்டிலிப்பாய் கிராமத்திற்கு ஆரோக்கியமானதாகவே உள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு தற்போதைய அதிபர் வ.ஸ்ரீகாந்தனின் முன்னூட்டல் ஊடான பங்களிப்பு காத்திரமானது. கல்வித்துறைசார் நிர்வாகம் என பல்வேறு கட்டமைப்புக்களைக் கொண்ட அவரது நிர்வாகச் செயற்பாடுகள் கட்டுக்கோப்பானது.

அத்தகைய கட்டுக்கோப்பான அவரது நிர்வாகத்திறனில் கல்லூரியின் வளர்ச்சி பல்வேறு பரிணாமங்களை நாளாந்தம் கண்டு உயரிய பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

கல்லூரியின் இத்தகைய வளர்ச்சியானது சண்டிலிப்பாய் கிராமத்துக்கு புத்தெழுச்சியினை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் கல்லூரியின் வளர்ச்சிப்பாதையில் தன்னை இணைத்து அயராது சேவையாற்றிக் கொண்டிருக்கும் அதிபரின் திடீர் இடமாற்றம் எழுச்சி கொண்டுள்ள ஒரு சமூகத்தை வீழ்ச்சிப் பாதையில் தள்ளிவிடுவது போன்ற செயற்பாடாகவே கருதவேண்டியுள்ளது.

கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் 56 வயதினைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் தனது அரச சேவையில் இருந்து ஓய்வு பெற இன்னும் 7 மாதங்கள் மட்டும் உள்ளன. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்ட போதும் அவர் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் அறிகிறோம். இந்நிலையில் இத்தகைய திடீர் இடமாற்றம் மென்மேலும் அதிருப்தி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. எனவே அவரது இடமாற்றத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் - என்றுள்ளது.

அதிபரின் இடமாற்றத்தைச் இரத்துச் செய்யுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர், வலி.தென்மேற்கு பிரதேச செயலர், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடமும் மகஜரின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன. (த-9)

## ரமழான் சிந்தனை!

எமது அன்பார்ந்த முஸ்லிம் சமூகமே! இஸ்லாத்தின் பர்ழான கடமைகளில் ஒன்றான ஸகாத் கடமையைச் சரிவரத் தெளிவாக விளங்கிக் கொண்டோமா? அதன்படி அமுல் செய்ய எல்லாம் வல்ல அல்லாஹ் துணை புரிவாராக! ஆமீன்! ஸகாத் ஒரு மகத்தான இயிதத் இஸ்லாம் எனும் ஐம் ஸாம் தான்களில் மூன்றாவது துயர் மிதுவாகும். தொழுகை ஒரு முஸ்லிம் மீது எவ்வாறு கடமையோ அதே போன்று ஸகாத்தும் ஒரு முக்கிய கடமையாகும். ஸகாத் என்ற நேரடி வார்த்தை தொழுகையுடன் சேர்த்து அல்-குர் ஆனில் 27 இடங்களில் அல்லாஹ் வலியுறுத்தியுள்ளார். ஸகாத்தை வழங்குவதற்கு வழங்குபவர் முஸ்லிமாக இருப்பதோடு, சொந்தப் பொருளுக்குரியவராகவும் வழங்கவேண்டிய அளவுக்கு இருக்க வேண்டும். இஸ்லாமிய வருஷம் பூர்த்தியாகி இருத்தல். சொத்துக்கள் வளரும் நிலையிலிருத்தல்.

தனது அடிப்படைத்தேவைகளுக்கு மேலதிகமாகயிருத்தல் ஸகாத்தின் பர்ழுகள் இரண்டு:-

ஒன்று எனக்குக் கடமையான ஸகாத்தை அல்லாஹ்க்காக நிறைவேற்றுவேன் என (நிய்யத்திதுல்லைத்தல்) இரண்டு தகுதியுடையோருக்கு மட்டுமே வழங்குதல்.

*எம்.ஏ. காதர்.*

# தேநீரில் மயக்க மருந்து கலந்து கொடுத்து வயோதிபரின் மோதிரத்தை உருவிய ஆசாமி

சண்டிலிப்பாய்,செப்.9

வயோதிபர் ஒருவருடன் அன்பாக உரையாடிய முன்பின் தெரியாத இளைஞர் ஒருவர் தேநீரில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து விட்டு அவர் விரலில் அணிந்திருந்த 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு பவுண் தங்க மோதிரத்தை உருவிக் கொண்டு மாயமாய் மறைந்து விட்டார்.

மயக்கம் தெளிந்த வயோதிபர் வீட்டுக்குச் சென்ற பின் தான் தனது மோதிரம் அபகரிக்கப்பட்ட விடயம் பற்றித் தெரிந்து கொண்டார்.

இந்த விசித்திரமான திருட்டு சுதுமலையில் உள்ள சிவன் கோயில் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி கூறப்படுவதாவது:-

சுதுமலை தெற்கைச் சேர்ந்தவரும் வவுனியாவில் பிள்ளையுடன் வசித்து வருபவருமான 65 வயது உடைய வயோதிபர் ஒருவர் தனது கண்ணுக்கு சிகிச்சை செய்வதற்காக சுதுமலையிலுள்ள தனது பிள்ளைகள் வீட்டில் தங்கியிருந்தார்.

சம்பவதினம் மாலை 5 மணியளவில் இவர் பொழுதைப் போக்குவதற்காக அருகில் உள்ள சுதுமலை அம்மன் ஆலயத்திற்குச் சென்று மண்டபத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது அங்கு வந்த அறிமுகமில்லாத இளைஞர் ஒருவர் இவருடன் அன்பாக உரையாடி விட்டு கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு வெங்காயம் தேவைப்படுவதாகவும் வாங்குவதற்கு உதவி செய்யும் படியும் கேட்டுள்ளார்.

இவருடைய பேச்சை நம்பிய வயோதிபர் இளைஞரை மானிப்பாயிலுள்ள ஒரு கடைக்கு அழைத்துச் சென்றபோது கடை பூட்டப்பட்டிருந்ததால் வாலிபர் தேநீர் அருந்த வரும்படி வயோதிபரை தேநீர்க் கடைக்கு அழைத்துச் சென்றார். வயோதிபர் மறுத்தபோதும் அவரை விடாப்பிடியாக அழைத்துச் சென்று தேநீர் வாங்கிக் கொடுத்துள்ளார்.

இருவரும் தேநீர் அருந்திவிட்டு திரும்பி வந்து சுதுமலையில் உள்ள சிவன் கோயில் முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். சிறிது நேரத்திற்குப் பின் வயோதிபர் சோர்வடைந்த நிலையில் மயக்கமுற்று இருக்கும் போது குறித்த இளைஞர் இவர் விரலில் அணிந்திருந்த 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க மோதிரத்தை உருவிச் சென்றுவிட்டார். சற்று நேரத்தின் பின் வீட்டுக்கு வந்த வயோதிபர் தனது கையில் அணிந்திருந்த மோதிரம் திருடப்பட்டது பற்றி அறிந்து கொண்டார்.

இத்திருட்டுப் பற்றி இவர் பிள்ளைகளுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து திருடனைப் பிடிப்பதற்காக எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. (த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் எதிர் நாடுகளை கைக்கொள்வதில் இலங்கையின் நகர்வுகளை ஈழத் தமிழர்களும் கையாளவேண்டும்

விடுதலை வேண்டிப் போராடிவரும் ஈழத்தமிழ் இனம் ஒரே நேரத்தில் பல தளங்களிலும் பயணம் செய்யவேண்டும் என்று நீண்டகாலமாக சில புத்தி ஜீவிகள் வலியுறுத்தி வருகிறார்கள்.

உலக அரங்கில் ஒரு பக்கத்திற்குச் சார்பாக நிலைப்பாடு எடுப்பதென்பது எமது போராட்டத்தை பின்தள்ளிவிடவே வழி கோலும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டி வருகிறார்கள்

ஒரு தரப்பை அல்லது ஒரு நாட்டை மாத்திரம் நம்பி எமது இருப்பு, நகர்வுகள், எதிர்காலம் போன்றனவற்றை ஒப்படைப்பதைத் தவிர்த்து, பல நாடுகள், பல அமைப்புக்கள், என்று நாம் வியூகம் அமைத்தால் எம்மால் ஒரு விடுதலையை நோக்கிப் பயணிக்க முடியும் என்ற சிலரது வாதம் பற்றி நாம் சற்றுச் சிந்தித்துத்தான் ஆகவேண்டி இருக்கின்றது.

அதாவது நாம் உதவி பெறுவதோ, தங்கியிருப்பதே, ஒரு நாடு என்றிருக்காமல் முடியுமான பக்கங்களில் இருந்தெல்லாம் உதவிகளைப் பெற்று, பல தளங்களிலும் காய்களை நகர்த்தி எமது விடுதலையை நோக்கிப் பயணிக்கவேண்டும்.

உதாரணத்திற்கு நாம் அமெரிக்காவுடனும் நட்பு பேணவேண்டும். அதேவேளை கியூபாவுடனும் பேசவேண்டும். இந்தியாவையும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதன் எதிர் நாடானா சீனாவுடன் பொருளாதாரம் செய்யவேண்டும். இது அனைத்தையும் இழந்துவிட்டு நம்பிக்கை என்கின்ற ஒன்றை மாத்திரமே பலமாகக் கொண்டு நகர முற்படுகின்ற எமது இனத்திற்குப் பெரிதும் பலம் சேர்க்கின்ற ஒன்றாக இருக்கும் என்றே நான் நினைக்கின்றேன்.

இது இரண்டு தோணியில் கால் வைக்கின்ற செயல். ஒருபோதும் கரை போய் சேர முடியாது என்று சிலர் கூறலாம். ஒருவனாகப் பயணம் செய்கின்ற பொழுதுதான் அவன் இரண்டு தோணியில் கால் வைக்க முடியாது. பலர் பயணம் செய்கின்ற பொழுது, சிலர் அமெரிக்கா என்கின்ற தோணியிலும், சிலர் இந்தியா என்கின்ற தோணியிலும், சிலர் சீனா என்கின்ற தோணியிலும் பிரிந்து பிரிந்து பயணம் செய்கின்ற பொழுது, ஏதாவது ஒரு தோணியாவது எங்களைக் கரை கொண்டுபோய் சேர்த்துவிடும் சந்தர்ப்பம் இருக்கின்றது.

இதற்கு முதலில் ஈழத் தமிழர்கள் என்பவர்கள் தனி மனிதர்கள் அல்ல, அவர்கள் பலர் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். பல தோணிகளில் பயணம் செய்கின்ற வித்தையை நாங்கள் எங்கள் எதிரியைப் பார்த்துக்கூட கற்றுக் கொள்ள முடியும்.

இலங்கை தேசம் அமெரிக்காவிடம் ஆயுதம் வாங்கியது. சீனாவைத் துணைக்கிழைத்துச் சண்டை போட்டது. பாகிஸ்தானின் விமானங்களை வரவழைத்து குண்டு வீசியது. இந்தியாவிடம் இருந்து 'ராடர்' கருவிகளைப் பெற்றுத் தன்னைக் காத்துக்கொண்டது. இஸ்ரேலுக்கு தனது படையினர்களை அனுப்பி பயிற்றுவித்தது. ஈரானுக்கு தனது அரச தலைவரை அனுப்பி கைலாகு கொடுத்தது. இப்படி பல தளங்களிலும் நின்று இராஜதந்திரம் செய்ததால்தான் இலங்கை தேசம் ஓர் இமாலய வெற்றியை அதனது வரலாற்றில் பெற முடிந்தது.

இஸ்ரேல் தேசம் உருவாகிய பொழுது அதற்கு பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்த அதேவேளை ரஷ்யாவும் ஆதரவு தெரிவித்தது. இஸ்ரேலின் உருவாக்கம் முதற்கொண்டு ஈரானுடனும் இஸ்ரேல் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்ததையும், அரபு உலகுடன் இஸ்ரேல் மோசமான யுத்தம் புரிந்துகொண்டிருந்த காலங்களில் இஸ்லாமிய நாடான ஈரானிடம் இருந்து இஸ்ரேலால் பல உதவிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததையும் இந்த இடத்தில் சுட்டிக் காண்பிக்க விரும்புகின்றேன்.

இதைத்தான் இராஜதந்திரம் என்று கூறுவது. இந்த ராஜதந்திரத்தை நாம் சரியாக எமது கடந்த காலத்தில் செய்யவில்லை.

இந்தியாவை நம்பியிருந்த பொழுது இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காக நாம் அமெரிக்காவைப் புறக்கணித்தோம். எம்.ஜீ.ஆரைச் சார்ந்திருந்த பொழுது அவரைத் திருப்திப்படுத்த கருணாநிதியைப் புறக்கணித்தோம். திராவிடக் கட்சிகளைத் திருப்திப்படுத்த விஷ்வ இந்து பரிசாத் தலைவர் பால்தாக்ரே நீட்டிய நேசக்கரத்தை தட்டிவிட்டோம். மேற்குலகைத் திருப்திப்படுத்த போராடும் இனங்களின் காவலன் என்று கூறப்படுகின்ற கியூபாவையும், ரஷ்யாவையும் நிராகரித்தோம். கடைசியில் எந்தத் தோணியிலும் நாம் ஏறாமல் நடுக் கடலில் தத்தளித்துக்கொண்டு நிற்கின்றோம்.

1984ஆம் ஆண்டு, அப்பொழுது தமிழீழ விடுதலைக்காக வேண்டிப் போராடிவந்த தமிழ் அமைப்புக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும், விடுதலையின் அவசியம் பற்றி ஆராய்வதற்கும் என்றும் கூறி அமெரிக்க நியூயோர்க் நகரில் ஒரு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழீழ ஆதரவு மாநாடு என்ற பெயரில் அமெரிக்காவில் இருந்த ஈழத்தமிழர்கள் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு ஈழத் தமிழ் இயக்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் கரங்களுக்குள் போராட்ட அமைப்புக்களைக் கொண்டுசெல்லும் நோக்கத்துடனேயே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதாக தமிழ் இயக்கங்கள் இந்த மாநாடு பற்றி குற்றம் சுமத்தி மாநாட்டை புறக்கணித்திருந்தன. இந்த மாநாட்டு ஏற்பாட்டாளர்களுள் முக்கியமான ஒருவரான டாக்டர் பஞ்சாட்சரம் என்பவர் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. அமைப்பின் ஓர் உளவாளி என்றும் சந்தேகம் தெரிவித்த தமிழ் இயக்கங்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள அப்பொழுது மறுப்பு தெரிவித்திருந்தன.

ஈழப் போராட்ட அமைப்புக்களின் பிரசன்னம் இல்லாமல் நடைபெற்ற இந்த மாநாட்டில் தமிழர் தாயகம் என்ற பெயரில் ஈழத் தமிழர்கள் பெரும்பான் மையாக வாழும் வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் என்பனவற்றை உள்ளடக்கியதாக ஒரு தமிழர் தேசத்தைக் கோரி பிரகடனம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் நடைபெற்ற இந்த மாநாடு பற்றிக் கருத்துத் தெரிவித்த ஈழப் போராட்ட அமைப்புக்கள், இது அமெரிக்கா சீ.ஐ.ஏ. இன் சதி என்றே தெரிவித்திருந்தன. ஆனால், அதே அமெரிக்காவில்தான் இன்று நாடு கடந்த தமிழீழ அரசை ஈழத் தமிழர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள்.

இந்த இடத்தில் 1964 இல் நடைபெற்ற மாநாடு சரி-பிழை என்றோ அல்லது நாடு கடந்த அரசு சரி-பிழை என்றோ நான் கூறவரவில்லை. 1984 இல் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு நகர்வை நாங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதைத்தான் நான் இங்கு சுட்டிகாட்ட விரும்புகின்றேன்.

நேரத்தில் இந்தியாதான் ஈழத் தமிழருக்கு எல்லாமாக இருந்தது. அந்நேரத்தில் அமெரிக்காவுடன் நாம் கைகோத்திருந்தால் இந்தியா எங்களை கைகழுவி விட்டிருக்கும் என்று சிலர் வாதாடலாம். அந்த வாதத்தில் உண்மையும் இருக்கத்தான் செய்கின்றது.

இதற்கும் சிங்கள தேசத்திடம் இருந்தே நாம் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். சிங்கள தேசம் எப்படி எதிர் எதிர் துருவங்களாக இருக்கும் நாடுகளை, சக்திகளை தனக்கு ஏற்றாற்போன்று கையாளுகின்றது என்று ஆராய்ந்து பார்த்தால் சில விடயங்களை எங்களால் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

ஜே.ஆர். அமெரிக்காவுடன் பேசுவார். இஸ்ரேலை அழைத்து இலங்கையில் நிறுத்துவார். அதேவேளை, இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஏ.சீ.எஸ் கமீது அரபு நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரபு நாடுகளைச் சமாளிப்பார். அரபு நாடுகளிடம் இருந்து நிதி உதவிகளைப் பெற்று வருவார்.

ஒரு பக்கம் சந்திரிக்கா இந்தியாவுக்குச் சென்று கூடிக் குலாவுவார். மறுபக்கம் மஹிந்த பலஸ்தீன உதவி வழங்கும் அமைப்புகளுக்கு தலைமை வகிப்பார். அதே வேளை லக்ஷ்மன் கதிர்காமரோ மேற்குலக ராஜதந்திரிகளைச் சமாளிப்பார்.

மஹிந்த இந்தியாவுடன் ஒப்பந்தம் பற்றிப் பேசுவார். ஜே.வி.பி அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து சீனாவுடன் இலங்கையை நட்பாக வைத்திருக்கும். எப்படி பல தோணிகளில் பயணம் செய்வது என்பதையும், எப்படி பல தரப்புக்களில் இருந்தும் நன்மைகளைப் பெற்று எமது பாதையைச் செப்பனிடுவது என்பதும்- நாங்கள் சிங்களத்திடம் இருந்துதான் கற்றுக்கொள்ளவேண்டும்.

எமது போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற ஓர் உதாரணத்தை இந்த இடத்தில் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

இந்தியாவைத் தளமாகக் கொண்டு, உலகளாவிய ரீதியில் மிகவும் பலமாக இயங்கிக்கொண்டிருக்கும் ஓர் இந்து அடிப்படைவாத அமைப்புத்தான் விஷ்வ இந்து பரிஷாத் அமைப்பு. இந்த அமைப்பின் தலைவராக இருந்த பால்-தர்க்கரே இந்தியாவில் மிகவும் பிரபல்யமான தலைவர்களில் ஒருவர். இந்தியாவின் ஆட்சியைத் தீர்மானிப்பதில் முக்கியமானவர். இவர் ஒரு சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளை நோக்கி நேசக்கரம் நீட்டியிருந்தார்.

பிரபாகரன் ஓர் இந்து. விடுதலைப் புலிகள் இந்துக்கள். ஈழத் தமிழர் இந்துக்கள். எனவே அவர்களை காப்பாற்றும் கடமையும், அவர்களுக்கு ஆதரவு வழங்கும் கடமையும் ஒவ்வொரு இந்துவுக்கும் உள்ளது. அந்த வகையில் விஷ்வ இந்து பரிஷாத் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்க விரும்புகின்றது என்று பகிரங்கமாக அதன் தலைவர் அழைப்பு விடுத்தார்.

ஆனால், அந்த நேசக் கரத்தை விடுதலைப் புலிகள் தட்டிவிட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் மதச் சார்பற்ற கொள்ளை, நிலைப்பாடு இதற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தது. அத்தோடு, இந்தியாவில் விடுதலைப் புலிகளின் மிக நெருங்கிய ஆதரவாளர்களாகவும், நண்பர்களாகவும் இருந்தவர்கள் விஷ்வ இந்து பரிசாத் அமைப்பின் மிக மோசமான விரோதிகளான திராவிடக் கட்சிகள். எனவே திராவிட அமைப்புக்களின் தொடர்பை இழந்துவிடாமல் இருப்பதற்காகவும் விஷ்வ இந்து பரிசாத் அமைப்பின் நேசக்கரத்தை விடுதலைப் புலிகள் பற்றிப்பிடிக்கவில்லை.

இதனைத் தவறு என்று நான் கூறவரவில்லை. விடுதலைப் புலிகள் செய்தது சரியான ஒரு நடவடிக்கைதான். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் இதில் எமது சமூகத்தின் தவறைத் தான் நான் இங்கு சுட்டிக்காண்பிக்க விரும்புகின்றேன்.

விஷ்வ இந்து பரிஷாத்தின் நேசக்கரத்தை விடுதலைப் புலிகள் பற்றிப் பிடிக்காதிருந்தாலும், ஈழத்தில் இருந்த இந்து அமைப்புக்கள் நிச்சயம் பற்றிப் பிடித்திருக்கவேண்டும். விடுதலைப் புலிகள் ஓர் விடுதலை அமைப்பாக விஷ்வ இந்து பரிசாத்தின் உதவிகளைப் பெறுவதில் சிக்கல்கள், சங்கடங்கள் இருந்திருந்தாலும், வேறு ஓர் அமைப்பை மறைமுகமாக ஊக்குவித்திருப்பதன் ஊடாக, உலக இந்துச் சமூகத்தின் நட்பு வலயத்தை உருவாக்கியிருக்கலாம்.

ஏனெனில், உலகில் மூன்றாவது பெரிய மதம் இந்து மதம்தான். கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களுக்கு அடுத்ததாக உலகில் அதிகமானோர் வழிபடும் மதம் இந்து மதம்தான். உலகில் சுமார் 83 கோடியே 70 லட்சம் மக்கள் இந்து மதத்தை பின்பற்றி வருகின்றார்கள். உலக சனத்தொகையில் சுமார் 13 சதவீதமானவர்கள் இந்துக்கள். இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈழத் தமிழரின் போராட்டத்தில், உலகம் முழுவதும் பரவி வாழும் இந்துக்களை நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதும், இந்து ஆதரவுத் தோணியில் நாம் பயணிக்கவில்லை என்பதும் ஈழத் தமிழர் விட்ட மிகப் பெரிய தவறுகளில் ஒன்று என்றுதான் கூறவேண்டி இருக்கின்றது. வாசல்தேடி வந்த ஒரு நட்பு சக்தியை சரியாகக் கையாளாதது உண்மையிலேயே ஈழத் தமிழர் விட்ட பெரிய பிழை என்றுதான் நான் கூறுவேன்.

வடக்கு, கிழக்கில் இலங்கை இராணுவம் கால் வைத்த ஒவ்வொரு தெருக்களிலும் இந்து ஆலயங்கள், வழிபாட்டு தலங்கள் இருந்தன. கடைசி ஒரு சூலமாவது நட்டு வைக்கப்பட்டிருந்தது. இலங்கைப் படைகள் நுழைந்த ஒவ்வொரு வீட்டிலும் பூஜை அறைகள் இருக்கத்தான் செய்தன. நாங்கள் உலக இந்து அமைப்பை சரியாகக் கையாண்டிருந்தால், எந்த தெருக்களில் இலங்கை இராணுவத்தின் சப்பாத்துக் கால்கள் நடந்திருந்தாலும், தமிழரின் எந்த வீட்டின் மீது குண்டுகள் வீசப்பட்டாலும், அது இந்து வழிபாட்டுத் தலங்களின் மீதான தாக்குதல்களாக

- நிராஜ் டேவிட் -

மாற்றப்பட்டு உலகளாவிய ரீதியில் ஒரு பெரிய எதிர்பை ஏற்படுத்தியிருக்கலாம்.

இதேபோன்றுதான், கிறிஸ்தவர்கள் என்கின்ற ஒரு பெரிய தோணியையும் ஈழத் தமிழர் தமது விடுதலைப் பயணத்தில் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

உதாரணத்திற்கு கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் உலகின் பல நாடுகளிலும், குறிப்பாக மேற்குலகின் பல தெருக்களிலும் ஈழத் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள். அவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் தமது கைகளில் புலிக்கொடிகளையும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படங்களையும், வன்னியில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் இரத்தம் தோய்ந்த காட்சிகளையும் தாங்கிக்கொண்டு வீதிகளில் இறங்கியிருந்தார்கள். உலகத்தின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் இந்த கவனயீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியா மாவட்ட மக்களின் வறுமைக்கு மதுபானமே காரணம்

## அரச அதிபர் சுட்டிக்காட்டு

நுவரேலியா, செப். 09

''நுவரெலியா மாவட்ட மக்கள் மதுவுக்கும் ஏனைய போதைப் பழக்கங்களுக்கும் அடிமையாகியுள்ளதே அவர்களின் வறுமை நிலைக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

மாவட்டத்திலுள்ள ஏழு லட்சம் மக்களில் 2,54,000 பேர் மிகவும் வறுமை நிலையிலுள்மை ஆய்வுகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

வறுமைப்பட்ட மக்கள் அதிகம் உள்ள இடமாக நுவரெலியா காணப்படுகின்றது. நூற்றுக்கு முப்பத்தெட்டு சதவீதம்பேர் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.'' - என நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜீ.குமாரசிறி தெரிவித்தார்.

மாவட்ட அரச அதிபர் காரியாலயக் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரசசார்பற்ற நிறுவப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களை மதுபாவனையிலிருந்து காப்பாற்றும் பாரிய பொறுப்பில் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் பங்குண்டு.

நுவரெலியா மாவட்டத்தில் மதுபாவனை பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. கடந்த வருடத்தில் மட்டும் 54 லட்சத்துக்கும் அதிக லீற்றர் மதுபானம் நுவரெலியாவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த மதுவுக்கு செலவிட்ட பணத்தை பிரதேசத்திகன் அபிவிருத்திக்குச் செலவிட்டிருந்தார் பாரிய நன்மைகளை அடைந்திருக் கலாம்.

இந்த மக்கள் மாதமொன்றில் மதுவுக்கு மாத்திரம் 50 லட்சம் ரூபாவைச் செலவிடுகின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும்.

எனவே, இதுகுறித்து அரசசார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். பெருந்தோட்ட - கிராமப்புற மக்களிடையே மது பாவனை தொடர்பான விழிப்புணர்வை ஏறபடுத்துவது சிரமமான காரியம் என்றாலும் கூட அதை முன்னெடுப்பது எமது கடமையாகும்.

நாம் இனமதபேதமின்றி ஒன்றுபட்டு இவ்விடயத்தில் ஈடுபடும் பட்சத்தில் வெற்றியடைய முடியும்.

மதுவுக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு மாவட்டத்தில் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வோம் எமது பிள்ளைகளின் வளமான கல்விக்கு வழிவகுப்போம்.

நுவரெலியா மாவட்ட மக்களில் நூற்றுக்கு 57 சதவீதம்பேர் தனியார் துறைகளிலேயே தொழில் புரிகின்றனர்.ஏழு சதவீதம் பேரே அரச துறைகளில் தொழில் புரிகின்றனர்.

பாடசாலைகளில் தரம் ஐந்துடன் வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மாணவர்கள் இவ்வாறு பாடசாலைகளை விட்டு இடைவிலகுவது காத்திரமான விடயமல்ல.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். எமது மூதாதையர் விட்ட தவறுகளை நாமும் விடக் கூடாது - இப்படி அரச அதிபர் குமாரசிறி தெரிவித்தார். (ளி)




# மதுப்பழக்கத்திற்கு அடிமையான இளைஞர்களை விடுவிப்பதற்கு நுவரெலியாவில் விசேட திட்டம்

நுவரேலியா, செப். 09

நுவரெலியா மாவட்டத்தில் போதைப் பழக்கத்துக்கு அடிமையான இளைஞர்களை அதலிருந்து மீட்டெடுக்கும் வகையிலான விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடை முறைப்படுத்துவதற்கான் ஏற்பாடுகள் நடை பெற்றுவருகின்றன என நுவரெலியா மாவட்ட உதவிச் செயலாளரும், சமுர்த்தி அதி காரியுமான ஏ.வி.சரத் சந்திர தெரிவித்தார்.

கால்நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த வேலைத்திட்டத்தின்கீழ் பெருந்தோட்டப் பகுதிகளில் தோட்டங்கள் தோறும் இளைஞர் - யுவதிகளைக் கொண்ட குழுக் கள் அமைக்கப்படும்.

இக்குழுக்களூடாக இளைஞர்களுக்கு மதுபாவனை தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படும். இவ்வாறான வேலைத் திட்டத்தின்மூலம் மாவட் டத்திலுள்ள இளைஞர்களை மது பாவனையி லிருந்து மீட்டெடுக்க முடியும் என அமைச்சர் ஆறுமுகன் எதிர்பார்க்கிறார்.

பெருந்தோட்டப்பகுதிகளில் இவ்வாறான வேலைத்திட்டத்தை முறையாக முன்னெடுக்கும் பொருட்டு நுவரெலியா மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜீ.குமாரசிறி தலைமையிலான விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது - இப்படி சரத் சந்திர தெரிவித்தார். (ளி)

# நிறைந்துவழியும் நோட்டன் பஸ்நிலையக் கழிவறை; விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் கலக்கும் அவலம்

## கவனிப்பார்களா அதிகாரிகள்?

நுவரேலியா, செப். 09

நோட்டன் நகர் பஸ் நிலையத்தி லிருக்கும் பொதுக்கழிவறை நிறைந்து வழிந்து விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் கலக்கின்றது எனப் பொதுமக்கள் விசனம் தெரி விக்கின்றனர்.

இது குறித்து நகரவாசிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கழிவறை நிறைந்து வழிவதால் நகரில் பெரும் சுகாதாரச்சீர்கேடு நிலவுகின்றது. நகருக்கு வரும் மக்கள் துர்நாற்றம் தாங்காது பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இதனால் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பலமாதங்களாகத் தொடரும் இந்நிலைமையைக் கவனிப்பாரில்லை

எனவே, சம்பந்தப்பட்ட அம்பகமுவ பிரதேசபை அதிகாரிகள் உடனடியாக இதனைத் துப்புரவு செய்யவேண்டும் - இப்படி நகரவாசிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ளி)

# ஹதரலியத்தை பிரதேசத்தில் பசு வளர்ப்புக்கு நடவடிக்கை

கண்டி, செப். 09

கண்டி மாவட்டத்தில் ஹதரலியத்தை பிரதேசம் பசுமாடு வளர்ப்புக்கு மிகவும் உகந்த பிரதேசமாகும். எனவே, இங்கு மாடு வளர்ப்பு ஊக்குவிக்கப்படும். அதற்கேற்ப நெஸ்லே கம்பனியுடன் கலந்துரையாடி பால் சேமிப்பதற்கேற்ற குளிர்சாதன வசதிகள் பெற்றுத்தரப்படும் - என பிரதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

ஹதரலியத்தை நகரில் லக் ச.தொ.ச மொத்த கூட்டுறவு நிலையம் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்தவை வருமாறு வருமாறு:-

இப்பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகள் அபிவிருத்தி அடைந்து வருகின்றன.

எனவே, அவற்றுக்கேற்ப இங்கு வங்கிக் கிளைகளும் திறக்கப்படும். அரச வங்கிகள் மாத்திரமன்றி தனியார் வங்கிகளும் திறக்கப்படும் - இப்படி சரத் அமுனுகம தெரிவித்தார். (ளி)

# முப்பது வருடங்களின் பின் அம்பாறையில் களை கட்டும் முஸ்லிம்களின் நோன்புப் பெருநாள்

கடந்த முப்பது வருடங்களுக்குப் பின் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில்புனிதநோன்புப்பெருநாள்இம்முறை கலகலப்பாகக் களை கட்டிக்கொண்டு வருகிறது. பெருநாளை சிறப்பாகக் கொண்டாடு வதற்கு ஏதுவாக முஸ்லிம்கள் தங்கள் குடிமனைகளை அலங்கரிப்பதிலும், துணிமணிகள், புதிய தளபாடங்கள் கொள்வனவிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதற்கு ஏதுவாக சிறுபோக நெற்செய்கை யும் மாவட்டத்தில் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டு உத்தரவாத விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இம்முறை பணக் கையிருப்பும் கலகலப்புக்கு முக்கிய காரணமாக அமைந் துள்ளது.

நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவு வதால் இந்தியாவிலிருந்து பெருந்தொகையான வர்த்தகர்கள் துணிமணிகளுடன் இங்கு வந்து முகாமிட்டு, வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருகிறார்கள்.

உள்ளூர் வியாபாரிகளும் துணிமணிகளையும், ஏனைய பொருட்களையும் வீதிக்கரை களில் குவித்து வியாபாரம் செய்து வருகிறார்கள்.

இதேநேரத்தில் நாட்டின் தென்பகுதியிலுள்ள வர்த்தகர்களும் பெருநாள் வியாபாரத்துக்காக ஆடம்பரப் பொருட்களை லொறிகளில் ஏற்றிக்கொண்டு வீதி வீதியாகச் சென்று வியாபாரம்செய்து வருகிறார்கள்.

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் அம்பாறை மாவட்டத்தில்தான் கூடுதலான முஸ்லிம்கள் குடியிருக் கிறார்கள். இங்குள்ள மொத்த சனத்தொகையில் 41.59 வீதமான முஸ்லிம்கள் இங்குதான் இருக்கிறார்கள்.

தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றவர்களும் உள்நாட்டின் வேறு இடங்களுக்குச் சென்றவர்களும் கூட்டம் கூட்டமாக வந்து இறங்குவதால் பஸ் நிலையங்களில் மக்கள் வெள்ளம் அலை மோதுகிறது. (ஒ- 108)

# ஜி.சீ.ஈ. விஞ்ஞானப் பாடப் பரீட்சையை பிற்போடுமாறு முஸ்லிம் அமைப்புகள் கோரிக்கை

காரைதீவு, செப். 09

முஸ்லிம்களின் புனித ரமழான் பெரு நாளன்று அல்லது மறுநாள் முன்னோடி ஜி.சீ.ஈ. (சா/த)விஞ்ஞானப் பாடப் பரீட்சையை இலங்கை முழுவதும் நடத்த கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது. கல்வியமைச்சு எதிர்வரும் ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத் தும் நோக்கில் விஞ்ஞானம், கணிதம், தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய 5 பாடங்களுக்கு விசேட முன்னோடிப் பரீட்சையை செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் 10 தினங்கள் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

அதன்படி முதலாவது பரீட்சை விஞ்ஞானப் பாடத்துக்காகவும், அப்பரீட்சையை எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் நடத்தவும் திட்டமிட்டுள்ளது.

முஸ்லிம்களின் புனித ரமழான் நோன்புப் பெருநாள் பெரும்பாலும் 10ஆம் அல்லது 11ஆம் திகதிகளில் இடம்பெறும். எனவே, பெருநாள் கொண்டாட்டங்களில் முஸ்லிம் மாண வர்கலந்து கொள்வதையும், சமய உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டும் விஞ்ஞானப் பாடப்பரீட்சையைப் பிற்போடுமாறு முஸ்லிம் அமைப்புகள் கல்வியமைச்சைக் கேட்டுக்கொண்டுள்ளன. (ளி)


# பெரும் எண்ணிக்கையில் பயணிகள் திருமலைக்கு நாளாந்தம் வருகை

திருகோணமலை, செப். 09

தென் இலங்கையிலிருந்து தினமும் திருகோணமலைக்குப் பெரும் எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணமுள்ளனர். இதனால் திருகோணமலையின் சகல இடங்களிலும் இரவு, பகல் பாராது சன நடமாட்டங்கள் அதிகரித்துள்ளன.

அதேவேளை, வாகன நடமாட்டங்களும் அதிகரித்துள்ளன. திருகோணமலை நகரிலுள்ள சிறிய வீதிகளிலும் கூட கனரக வாகனங்களும், கொள்கலன் வாகனங்களும் ஓடித்திரிகின்றன.

வாகனங்களைக் கட்டுப்படுத்தி வீதி ஒழுங்குகளைப் பேணுவதில் போக்குவரத்துப் பொலிஸார் மும்முரமாக ஈடுபடுகின்றனர். முக்கிய சந்திகளில் சன நடமாட்டங்கள் மிகவும் அதிகரித்துள்ளன. இதனால் பல இடங்களில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.




# கிழக்கு உதயம் வேலைத்திட்டத்தின் கீழ் 43உள்ளூராட்சிமன்றங்கள் அபிவிருத்தி

அம்பாறை, செப்.08

'கிழக்கு உதயம்' வேலைத் திட்டத்தின்கீழ் கிழக்கு மாகாணத்தி லுள்ள 43 உள்ளூராட்சி மன்றங்களும் ஒரே முறையில் முழுமையாக அபிவிருத்தி செய்யப் படவிருக்கின்றன.

இந்த அபிவிருத்தி நடவடிக்கை களுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக் கும் தலா 20கோடி ரூபாவை உலக வங்கியின் நிதியுதவியுடன் ஒதுக்கீடு செய்து, இது தொடர்பான சுற்று நிருபத்தையும் உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் அழகு படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், தற்போது கிறவல் வீதிகளாக இருக் கும் வீதிகள் எல்லாம் பிரதேச மக்களின் பங்களிப்புடன் கொங்கிறீட் வீதிகளாக மாற்றப்படவுள்ளன. ஒவ்வொரு உள் ளூராட்சி மன்றப் பிரதேசத்திலும் சகல வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானம், பொது நூல் நிலையம், பஸ் நிலையம் ஆகியவையும் அமைக்கப் படவுள்ளன. (ளி)

# கிழக்குக் கிராமங்களுக்கு மின்விநியோகத் திட்டம்

மட்டக்களப்பு, செப். 08

கிழக்கு மாகாணக் கிராமப்புறங்களில் மின் விநியோகத் திட்டத்தை கிழக்கு மாகா ணசபை முன்னெடுக்கவுள்ளது.இது தொடர்பாக ஆராயும் விசேட மாநாடு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் 'சீடா' அமைப்பினூடாகவும், அம்பாறை மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாகவும் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. குறுகிய கால திட்டங்கள் 3 வருட காலத்திலும், நீண்ட காலத் திட்டங்கள் 7 வருட காலத்திலும் நிறைவடையும் என கிழக்கு மாகாண மின்சாரப் பொறியியலாளர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அமைச்சர்களான எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.சுபைர் ஆகியோர் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி விக்டோறியா அவர்களின் அன்புக் கணவர்

### எல்விஸ் பிறஸ்லி

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் ஆசிரியருக்கும் அவரது உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்,
ஆறுகால்மடம்.

(103107)

## தவறிவிட்டது

Thirunelvely East, Kennady Lane செல்லத்துரை நாகராசா என்னும் பெயர், முகவரியுடைய காப்புறுதிப்பத்திரம்(Tax Insurens) மற்றும் இலங்கை வங்கி கணக்குப்புத்தகம் என்பன திருநெல்வேலிச் சந்திக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொ.பே இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்பு: 0777497590,
0777497591

## முன்னோடிப் பரீட்சை

பருத்தித்துறை, செப். 9

டிசெம்பர் மாதம் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு மாகாணமட்ட முன்னோடிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

முதல்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய ஐந்து பாடங்களுக்குமே இம்முன்னோடிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் இப்பரீட்சை நடத்தப்படவுள்ளது. அதற்கான நேர அட்டவணை விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

தரம்9 இற்கான மாகாணமட்டப் பரீட்சை நவம்பர் மாதம் மூன்றாம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-190)

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையார் மெட்டல்
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.

தொ.பே: 024 222 2097
024 222 0129

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- சுப்பிரமணியம் சரவணபவன்
சிற்ப ஆசாரி 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- சி.சிவானந்தம்
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A.09 வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

(103864)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து




கனடாவில் வசிக்கும் திரு.திருமதி தவராசா அர்ச்சினி தம்பதியரின் செல்வப் புதல்வன்

செல்வன்
### தவராசா பவிநேஷ்

தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (09.09.2010) வியாழக்கிழமை கனடாவில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
அவரை பாசமுள்ள அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தாமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம்வல்ல தட்டாங்குளம் நீலகண்டப்பிள்ளையார் அருளால் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

"முருகவாசா",
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்: ஆ. செல்வராசா
(அம்மப்பா-இலங்கை),
செ.அனோசன் (மாமா-கனடா)

(103008)

இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

Organized by
pico Events



அனுமதி இலவசம்

செப்டம்பர் 18-19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

JEF
Jaffna Education Fair 2010

BRITISH COUNCIL
Main Sponsor
acbt
Co-Sponsors
CSC-ASIAN COMPUTER EDUCATION
Daily News
Print Media Sponsor
உதயன்
Official Tamil Newspaper
Official Electronic Media Sponsor
pico
Official stall contractor
Ministry of Education & Ministry of Higher Education
Northern Provincial Council
Governor's Sub Office, Northern Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9th, 10th, 11th, 15th September Half Page Ad

# மக்கள் நலன் காக்கும் பிரிவு – கோப்பாய்

மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்கி குறித்த பிரதேசம்சார் மக்களின் நல்வாழ்வுக்கான பணிகளை முன்னெடுத்துவரும் பிரதேசம்சார் தொண்டு நிறுவனம் என்ற வகையில் கோப்பாய் - மக்கள் நலன்காக்கும் பிரிவின் பணிகள் குறிப்பிடத்தக்கன.

1986ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 03ஆம் திகதி இருபாலை பேச்சியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற உண்ணா நோன்பு பிரார்த்தனையின்போது இந்த அமைப்பு கால்கோளாயிற்று. ஆரம்பத்தில் இருபாலை நலன்காக்கும் பிரிவு என்ற பெயருடன் செயற்பட்டபோது காலச் சூழலின் தேவையைக் கருத்தில் கொண்டு வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு முழுவதையும் உள்ளடக்கி தனது சேவையை விஸ்தரித்து கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு என நாம கரணம் பெற்றது.

மக்கள் நலன்காக்கும் பிரிவின் செயற் பிராந்தியம் என்ற வகையில் "கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட எல்லாப் பிரதேசம்" "பொதுச்சபையால் தேவைப்படும்போது தீர்மானிக்கப்படும் பிரதேசம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவு மக்களின் நலன்களை பேணி மக்களுக்கு பல்வேறு வகையான உதவிகளையும் செய்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உள்ளூர் சேவையாற்றும் மக்கள் நலன்காக்கும் பிரிவை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கு நலன் காக்கும் பிரிவு தோற்றம் பெற்ற காலப் பகுதியில் நிலவிய நாட்டின் நிலைமையும் மக்களின் அவல வாழ்வும் காரணமாக அமைந்திருந்தன.

மக்கள் நலன் காக்கும் பிரிவு உருவாகிய நிலைமை தொடர்பாக நலன்காக்கும் பிரிவின் தற்போதைய தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி அவர்கள் கூறும்போது

"வீடுகளில் இருக்க முடியாமல் ஏதிலிகளாக இடம்பெயர்ந்த மக்கள் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி உட்பட கோப்பாய் இருபாலைப் பகுதியில் உள்ள பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் பெருமளவில் தங்கியருந்த காலப்பகுதில் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்ற உயர் நோக்குடன் உருவானது. இந்தவகையில் ஆரம்பத்திலேயே தமது வீடுகளுக்கு திரும்பச் செல்ல முடியாத நிலையில் இந்தப் பகுதியில் தங்கியிருந்த 200இற்கும் மேற்பட்ட குடும்பங்களை பராமரிக்க வேண்டி இருந்தது" எனக் கூறினார்.

மக்கள் நலன் காக்கும் பிரிவின் நோக்கம் தொடர்பாக அமைப்பு விதியில் "அங்கத்தவர்களிடமே,சமூக உணர்வையும் ஒருமைப்பாட்டையும் வளர்த்து முற்போக்கான சமுதாயக் கட்டுக் கோப்புக்கு வித்திடல்; பொது அமைப்புக்களுடன் நல்லுறவைப் பேணிப் பாதுகாத்தல், எமது சமுதாயத்தின் பாரம்பரிய கலை, பண்பாடுகளை பேணிப்பாதுகாத்தலும் அபிவிருத்திக்காவும் உழைத்தல், சமுதாயத்தின் பின் தங்கியோர், சிறுவர்கள் முதியோர்கள், மகளிர் ஆகியோரின் உரிமையை பாதுகாத்து அவர்களின் நலன்களை மேம்படுத்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பது மக்கள் நலன் காக்கும் பிரிவின் உயர் செயற்பாட்டை வெளிப்படுத்தியி ருக்கின்றன. நலன் காக்கும் பிரிவின் இலச்சினையில் பசு, பசுக்கன்று, பாற்குடம் இடம்பெற்றுள்ளன.

மக்கள் நலன் காக்கும் பிரிவின் உறுப்பினர்கள் என்ற வகையில் ஆயுட்கால உறுப்பினர்கள், ஆண்டுச் சந்தா செலுத்தும் உறுப்பினர்கள் என்ற வகையில் பல நூற்றுக் கணக்கானோர் உறுப்புரிமை பெற்றுள்ளனர். மக்கள் நலன் காக்கும் பிரிவின் தற்போதைய செயலாளராக தி.உமாசங்கர் கடமையாற்றுகின்றார்.

பிரிவின் பணிமனை அண்மைக்காலம் வரையும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் இருபாலைச் சந்திக்கு அண்மையில் வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள வசதியான கட்டடத்தில் செயற்பட்டு வந்தது. தற்பொழுது இருபாலைச் சந்தியில் இருந்து பிரிந்து வடகிழக்காக செல்லும் (பழைய வீதி) வீதியில் சந்தியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

(தொடரும்)





ஞான ஆதவன்



வலி.கிழக்கு வலம்

படங்கள்: உமா

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவ்வாறு சிலையை எடுத்துச் செல்லும் போது திருவடிநிலை பறாளை விநாயகர் ஆலயத்துக்கு கிழக்கேயும், அச்செழுவிலும், உடுவில், கோப்பாய், மட்டுவில் பன்றித் தலைச்சி, கச்சாய், பொறிக்கடவை, வற்றாப் பளை, திரியாய், கோயில்வயல் போன்ற இடங்களில் தேவி சிலையை நிலைநிறுத்த வழிபாடியற்றியதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறானதொரு 1500 வருட நீண்ட கால வரலாற்றுப் பெருமையைக் கொண்ட ஆலயமாக இக் கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயம் மிளிர்ந்து வருகிறது.

ஆலய வரலாற்றுப் பதிவுகளின்படி இக் கோவிலுக்கு இருபாலை சேனாதிராசா முதலியாரின் உறவினர்கள் மேற்பார்வையாளராக 1926 ஆம் ஆண்டளவில் இருந்ததாகவும் 12.05.1926 இல் கோப்பாய் கிராமச்சங்க எல்லைக்குள் பரவலாக 28 பேர் கொண்ட நிர்வாக சபையும் நியமிக்கப்பட்டு கோவில் ஊர்ப் பொதுவாக்கப்பட்டது.

கோவில் முகாமை நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1926-1931 முருகேசு பொன்னம்பலம், 1931 - 1942 முருகேசு வயிரமுத்து, 1942-1967 கணபதியார் கந்தையா என்போர் முகாமையாளராகக் கடமையாற்றினர். 1968 இல் தற்காலிக முகாமையாளராக தம்பு சுப்பிரமணியம் கடமையாற்றினார்.

28.06.1974 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து ஆலய நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றன. 1981 இல் சி.பொன்னையா தலைமையிலான நிர்வாகசபையும், 1984 இல் க.இ.குமாரசாமி தலைமையிலும், 1987 இல் இ.இராசரத்தினம் தலைமையிலும், 1996 இல் இ.தெய்வேந்திரம், 2006 இல் டி.தயாகரன் தலைமையிலும் இன்றுவரை சிறந்த நிர்வாக அமைப்பில் இயங்கி வருகின்றது.

கோவில் பூசகர்களாக ஆரம்பத்தில் சுப்பையா ஐயர் அவர்களும், 1938 இல் குருமூர்த்திக் குருக்களும், 1941 இல் வை.மு.பரமசாமி குருக்களும், 1943 இல் பொன்.குமாரசாமிக் குருக்களும், 1944 இல் மீண்டும் மு.பரமசாமிக் குருக்களும், 1980 வரை அறப்பணியாற்றியுள்ளனர்.

01.09.1980 தொடக்கம் மு.பரமசாமிக் குருக்களின் இளைய புதல்வர்களில் ஒருவரான ப.சண்முகராஜக் குருக்கள் பூஜை மற்றும் விசேட விழாக்களைப் பக்தி பூர்வமாக மக்களுக்கு அருளாசிகள் கிடைக்கும் வகையில் இன்று வரை சிறந்த சிவத் தொண்டு புரிந்து வருகின்றார்.

இவ் ஆலய வழிபாடுகளை எடுத்து நோக்கின் பொங்கல் மற்றும் குளிர்த்தி விழாக்களே பெரு முக்கியத்துவம் பெறுகின்றன. மக்கள் பலரும் தமக்கு வரும் நோய் பிணிகள் மற்றும் துன்ப துயரங்கள் தீருவதற்கு பொங்கல் குளிர்த்தியிட்டு நேர்த்தியை நிறைவேற்றுவர்.

மழை வேண்டி குளிர்த்தி நடத்தி பெருமழையை வருவிக்கும் பக்தி பூர்வமான பெரு நிகழ்வும் இங்கு சிறப்பாக நடைபெறுவதுண்டு.

இவ்வாறு வருடாவருடம் அம்பாள் சித்திரை தமிழ் வருடப் பிறப்பைத் தொடர்ந்து வரும் முதல் திங்கட்கிழமையை மையப்படுத்தி மாபெரும் திருக்குளிர்த்தி வைபவம் இடம்பெறும். இதனை முன்னிட்டு அம்பாளின் கிராம தரிசனம் முதல் நாள் அயல் ஊர்களுக்கு நடைபெறுவதுண்டு. மேலும் பங்குனித் திங்கள் காலங்களில் பல ஆயிரக் கணக்கான அடியவர்கள் பொங்கல் செய்து வழிபாடு இயற்றுவதுண்டு.


மேலும் வைகாசி விசாகம், ஆடிப்பூரணையை நிறைவு நாளாகக் கொண்டு முதல் 10 நாள்கள் சிறப்பு அலங்கார திருவிழாக்கள், புரட்டாதி நவராத்திரி பூஜை, ஐப்பசி வெள்ளி, சோமவாரத் திங்கள், திருவெம்பாவை பூஜை உட்பட பலவிழாக்கள் பிரதேச பொதுமக்கள் மற்றும் அயலூர் பொதுமக்களால் பக்தி பூர்வமாக மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு இளைஞர்களின் முன்மாதிரியான செயற்பாடாக விழாக் காலங்களில் நாதஸ்வர மேள ஒலிகளின் போது சினிமாப் பாட்டுக்கள் அன்று தொடக்கம் இன்று வரை இசைக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவ் ஆலயம் தினமும் குளிர்ச்சியுடன் தொடர்ந்து திகழ பிரதேச இளைஞர் குழுக்களும் வீரவாகு தலைமையில் பல்வேறு பயன்தரு நிழல் மரங்களை 89-95 காலப்பகுதிகளில் நாட்டி இன்று சுமார்25 வரையான பல்வேறு மரங்கள் வளர்ந்து வியாபித்து நின்று சூழலை தூய்மையாக்கி வனப்புறச் செய்கின்றன. இவ் ஆலயத்தில் வாரத்தில் 3 நாள்கள் 10 இற்கும் மேற்பட்ட பெண்ணடியார்கள் ஆலய பெருஞ்சூழலைக் கூட்டி துப்பரவு செய்வதை தமது பெரும் பாக்கியமாகக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு சிறந்த இயற்கை அமைப்புள்ள புராதன தொன்மையுடைய அருளலைகள் நிரம்பிய இளைஞர்களால் மிகவும் பக்தி பூர்வமாக நிர்வகிக்கப்படும் வலி.கிழக்கின் முதன்மை ஆலயமாக பலானை கண்ணகி அம்மன் ஆலயம் திகழ்வது உண்மையாகும். (முற்றும்)

எழிலன்

# கோப்பாய், பலானை கண்ணகை அம்மன் கோயில்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்

எதிர்பாராத பணவரவுகள் வந்தாலும், அதில் ஒரு பகுதியை மற்றொரு காரியத்திற்காக செலவிடலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். உடன் பிறப்புக்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். நாவன்மை அதிகரிக்கும்.

### இடபம்

தொட்ட காரியங்கள் தடையின்றி துளிர்விட்டு வளரும் நாள். நண்பர்கள் சிலர் தவறு செய்தாலும், அதை பெருந்தன்மையோடு மன்னிப்பீர்கள். உறவினர்கள் சிலருடன் சேர்ந்து முக்கியமான வேலை ஒன்றைச் செய்வீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். கடந்த காலத்தில் செய்த தவறுக்கு இப்போது பிராயச்சித்தம் செய்யலாம்.


**மிதுனம்** வெளியூர்களில் இருந்து வரும் உறவினர்களுக்காக காத்திருக் கலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலரை விமர்சனம் செய்து அவர்களின் கோபத்திற்கு ஆளாகுவீர்கள். பெண்கள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர் ஒருவர் உங்களிடம் கடனுதவி கேட்கலாம். சிலர் உங்களிடம் காரியம் சாதித்துவிட்டு, நீங்கள் கேட்ட உதவியை மறுத்துவிடலாம்.

### கடகம்

பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் நாள். விமர்சனங்களையும் அறிவுரையாக ஏற்றுக் கொள்வீர்கள். முக்கியமான வேலை ஒன்றுக்காக அலைந்தாலும், அதனால், கணிசமான ஆதாயம் பெறுவீர்கள். தொலைபேசி வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும் நாள். குரு வழிபாடு குதூகலம் தரும்.

### சிங்கம்

சிலர் உங்களை நம்பி ஒப்படைத்த வேலைகளை நிறைவேற்ற முடியாமல் சிரமங்களைச் சந்திக்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறுவர். ஒவ்வாத பொருள்களைச் சாப்பிட்டு உடல் உபாதைகளுக்கு ஆட்படலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### கன்னி

பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். உறவினர் ஒருவரிடம் கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுப்பீர்கள். சில காரியங்கள் முடிவது போல தோன்றினாலும், முடியாமல் போகலாம். பிரியமான சிலருக்காக தாராளமாகச் செலவு செய்வீர்கள். நண்பர் ஒருவரைப் புகழ்ந்துபேசிக் காரியம் சாதிப்பீர்கள்.

### துலாம்

நடக்காத ஒரு விடயத்தைப் பற்றி பெரிய அளவில் கற்பனை செய்வீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் யோசனை கேட்டு செயற்படலாம். பெண்கள், கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் வாக்கு வாதங்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும். சக ஊழியர் ஒருவருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். தெய்வ பிரார்த்தனைகளை நிறை வேற்றுவீர்கள்.

### விருச்சிகம்

பொது விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலையாகவோ வெளியிடங்களுக்குச் செல்லலாம். வீண் பழிகள் வராமல் இருக்க தேவையற்ற விடயங்களில் தலையிட வேண்டாம். மாற்று மொழி பேசும் நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.

### தனுசு

சில வேலைகளில் தீவிரமாக இறங்கிவிட்டு, பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். இறைவழிபாட்டின் மூலம் இன்பம் பெறலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் கடைசி நேரத்தில் கைவிடலாம். ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்குவீர்கள்.

### மகரம்

பல மணி நேரம் இழுத்தடிக்கலாம் என நினைத்த வேலை ஒன்று எளிதாக முடிவுக்கு வரும். குடும்பப் பெரியவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். உங்களின் பெருமைகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வீர்கள்.

### கும்பம்

மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள். பிள்ளைகள் கல்வி விடயங்களில், எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். எதிலும் உங்களின் தனித்தன்மையை வெளிப்படுத்த முற்படுவீர்கள். சர்ச்சைக்குரிய விடயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும்.

### மீனம்

நாடி வந்தவர்களுக்கு பிறரிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவி செய்வீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பொறுப்பான சில வேலைகளால் போராட்டமான நிலைமைக்கு ஆட்படலாம். பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கலாம். நீங்கள் பெரிதும் எதிர்பார்த்த ஒரு விடயம் நடக்காமல் தள்ளிப் போகலாம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 03.04.1942

விண்ணில் 10.08.2010

## அமரர் வேலுப்பிள்ளை ஜெயராசா

மாதமொன்று கழிந்திட்ட போதிலும் விழிநீர் ஓயவில்லை
ஆறவில்லை எங்கள் மனதின் சோகங்கள் கண்முன்னே
நடப்பதுபோல்- உங்கள் நினைவுகள் வாட்டுகின்றன!
சிறு துரும்பெடுக்கவேனும் துணையிங்கு எமக்கில்லை
செயல் வீரன் தனையிழந்து செய்வதறியா நிற்கின்றோம்
துணையின்றி உம்பிரிவால் நடைப்பிணம் போல் நிற்கின்றோம்
பூப்போன்று என்னை என் செல்வங்கள் பார்த்தாலும்
என்மனப்பாரம் இறக்கி வைக்க முடியவில்லை
நாடோறும் உம் செல்வங்கள் உமக்கு மலர் வைத்து
உம் ஆசிபெற்றுச் செல்கின்றனர்
உம் பெருமை பார்க்கவன்றோ எம்மை விட்டுச் சென்றுவிட்டீர்
உங்கள் ஆத்மா என்றும் சாந்தி பெற்றிடவே
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

''சுதாபவனம்''
பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
T.P:021 222 6499

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(102925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல தீர்ப்பு



ஒரு ஊரில் ஒரு அரசர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர்.

ஒருநாள் அரண்மனையில் விசாரணை நடந்து கொண்டிருந்தது விசாரணை. அதில் ஒரு வழக்கு.

ஒரு விவசாயி வந்து புகார் கொடுத்தார்.

என்ன புகார் என்றால், அவருடைய வயலில் ஆடுகள் வந்து பயிரை அழித்து விட்டது!

'நிறைய உழைத்துப் பணம் செலவு செய்து பயிரை வளர்த்திருந்தேன்... இப்போது எல்லாம் போய்விட்டது. இனிமேல் நான் என்ன செய்வது? நீங்கள் தான் இதற்குச் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும்!' என்று அந்த விவசாயி கேட்டுக் கொண்டார்.

அந்த ஆடுகளுக்குச் சொந்தக்காரர் யார் என்று கண்டுபிடித்து அவரை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்' என்று அரசர் உத்தரவு பிறப்பித்தார்.

சேவகர்கள் சென்று ஆடுகளுக்குச் சொந்தக்காரரை அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள்.

ராஜா விசாரித்து முடித்து 'விவசாயி அடைந்திருக்கும் இழப்புக்கு ஈடாக உன்னுடைய ஆடுகளை நீ அவரிடம் கொடுத்துவிட வேண்டும்' என்று தீர்ப்பு வழங்கினார். இதைப் பார்த்துக் கொண்டே அந்த மன்னரின் மகன் உட்கார்ந்திருந்தான்.

அவன் தன் தந்தையிடம் தெரிவித்தான்.

உடனே அந்த அரசர் 'சரி, நீயே இதற்குச் சரியான ஒரு தீர்ப்புச் சொல்!' என்றார்.

அந்த இளவரசன் ஆடுகளுக்குச் சொந்தக்காரரைப் பார்த்து, 'உங்களுடைய ஆடுகள் எல்லாவற்றையும் ஒரு வருடகாலம் அந்த விவசாயியிடம் நீங்கள் ஒப்படையுங்கள். அந்த ஒரு வருடத்துக்குள் அந்த ஆடுகள் போடும் குட்டிகள், பால், எரு ஆகியவற்றை விவசாயி எடுத்துக் கொள்ளட்டும். ஒரு வருடத்துக்குப் பிறகு உங்களுடைய ஆடுகளை நீங்கள் திரும்பவும் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று தீர்ப்புக் கூறினான்.

'இது சரியான தீர்ப்புத்தான்... இனி நான் என்னுடைய அரச பொறுப்புக்களை இளவரசனிடம் ஒப்படைக்கிறேன்' என்று சொல்லி அரசர் அவ்விதமே செய்தார்.

ஒரு தண்டனையைப் பெறுபவன். அதற்குப் பிறகு சமுதாயத்தில் நல்ல விதமாக வாழ்வதற்கு வாய்ப்பு இருப்பது போல தீர்ப்பு அமைய வேண்டும். அதற்கு இந்தத் தீர்ப்பு ஒரு நல்ல உதாரணம்.

சில தீர்ப்புக்கள் எப்படி அமைந்து விடுகிறதென்றால்... ஒரு தண்டனையை அனுபவித்து முடித்தவன் அதற்குப் பிறகு அவன் இந்தச் சமூகத்தில் நல்லவனாக வாழ நினைத்தாலும் வாழ முடியாது என்பது போல் அமைந்து விடுகிறது.

இது சிந்திக்க வேண்டிய ஒரு செய்தி.

கோ.சுவாமிநாதன்.

# சில இலைகளும் மருத்துவக் குணங்களும்

**துளசி:**

ஜீரணக் கோளாறுகள் காய்ச்சல், இருமல், சளி, ஈரல் சம்பந்தமான நோய்கள், காதுவலி முதலியவற்றுக்குச் சிறந்தது. இரத்தத்தில் உள்ள விஷத்தன்மையை வெளியேற்றிச் சுத்தம் செய்கிறது.

**வில்வம்:**

காய்ச்சல், அனீமியா, மஞ்சள் காமாலை, சீதபேதி போன்றவற்றுக்குச் சிறந்தது. கொலரா தடுப்பு மருந்தாக வில்வம் செயற்படுகிறது. மலச்சிக்கல், சர்க்கரை வியாதிக்கு மிகவும் சிறந்தது.

**அறுகம்புல்:**

எல்லா நோய்களுக்கும் ஏற்ற சிறந்த மருந்து. காலையில் பசி ஆரம்பித்த உடன் வெறும் வயிற்றில் 7 மணிக்கு சாப்பிடவேண்டும். இதைச் சாப்பிட்டு ஒரு மணி நேரம் கழித்து ஏதேனும் சாப்பிடலாம்.

இதனைக் கடைப்பிடித்தால் பல நோய்கள் குணமடையும். உடல் எடை குறைய கொலஸ்டிரோல் குறைய நரம்புத்தளர்ச்சி நீங்கி இரத்தப்புற்று நோய் குணமடைய அறுகம்புல் சிறந்தது.

இருமல், வயிற்றுவலி, இருதயக் கோளாறு, மூட்டுவலி, சர்க்கரை நோய், அனீமியா போன்ற நோய்களுக்குச் சிறந்தது. இதை ஆரோக்கியமானவர்கள் தொடர்ந்து பருகினால் நோய் எதிர்ப்புச் சக்தி தரக்கூடியது. இரத்தத்தில் ஹீமோ குளோபின் அதிகரிக்க பயன்படுகிறது.

தோல் நோய்கள் அனைத்தும் அறுகம்புல்லினால் தீரும். இரத்தத்தில் உள்ள விஷத்தன்மையை வெளியேற்றுவதில் திறமையானது.

**அரசு இலை:**

ஏழைகளின் மருந்து. அரசிலைச்சாறு எனலாம். ஒரு நல்ல மலமிளக்கியாகும். உடலைக் குளிர்ச்சியடையச் செய்கிறது. கர்ப்பப்பைக் கோளாறுகள் மறையும். காய்ச்சலுக்கும் நல்லது.

அரச மரத்தின் பழங்கள் மலட்டுத்தன்மை நீக்கவல்லது.

**பூவரசு:**

பேதியாகுதல், சீதபேதி ஆகியவற்றுக்கு இதன் இலைச்சாறுகள் நிவாரணம் அளிக்கக்கூடியது. தீக்காயங்கள், புண்கள், தோல் நோய்கள், தொழுநோய் முதலியவற்றுக்கு அரைத்துப் பூசலாம்.

**கல்யாண முருங்கை:**

அதிகமாக பித்தத்தை நீக்கும். முடி நரைக்காமலிருக்க உதவுகிறது. காய்ச்சலைக் குறைக்கும். நீர் பிரியும். மலமிளக்கி, மாதவிடாய்த் தொல்லையை நீக்கும். கிருமிகளை வெளியேற்றும், வீக்கங்களைக் குறைக்கும். நீரிழிவு சீதபேதி, வாதம் குணமடையும். பருவமெய்யாத பெண்களுக்கு இதன் சாறு நல்ல பலன் தருகிறது.

**வாழைத்தண்டு:**

சிறுநீரகக்கல் சிகிச்சை செய்யாமலே குணமடையப் பச்சை வாழைத்தண்டுச் சாறு உதவுகிறது.

பாம்புக்கடி போன்ற விஷத்தை வெளியேற்ற உதவுகிறது. இதை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் ஆரோக்கியமுண்டு.

**கற்பூரவள்ளி (ஓமவல்லி):**

மிகச் சிறந்த இருமல் மருந்து. 5 இலைகளை அப்படியே சாப்பிட்டால் உடனே மூக்கடைப்பு, தொண்டை வறட்சி இருமல் மறையும். இது விரைவாக செயல் புரியும்.

**கண்டங்கத்தரி:**

கிராமங்களில் பரவலாக காணப்படும். இதன் இலைகளும் காய்களும் முள்கள் நிறைந்து காணப்படும்.

இலைகளையும், காய்களையும் முள்கள் நீக்கி கஷாயமாகவும் உலர்த்திப் பொடியாகவும் சாப்பிட்டு வருவதால் காசநோய், ஆஸ்த்துமா, மார்புச்சளி, காய்ச்சல், தொழு நோய், இரத்த அழுத்தம், பக்கவாதம், கல்லீரல் நோய்கள் முதலியவற்றுக்குச் சிறந்தது.

10 இலைகளை பாத்திரத்தில் போட்டு 1 டம்ளர் நீர் விட்டு 1/2 டம்ளர் நீர் வரும் வரை காய்ச்சவேண்டும். பின் வடிகட்டி ஆறவைத்து உணவின்பின் குடிக்க வேண்டும். இத்துடன் வேப்பிலையும் ஆடாதோடை இலையும் சேர்த்து கஷாயம் தயாரிக்கலாம்.

**பருத்தி:**

இலைகளை உலர்த்தி பொடி செய்து நீரில் கலந்து குடிக்கலாம்.

மாதவிடாய்த் தொல்லைகள், சிறுநீரகப் பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். உடலில் ஏற்படும் வீக்கங்கள் குணமடையும். சவ்வுகள் பாதுகாக்கப்படும்.

**தும்பை:**

இதனை உலர்த்தி பொடியாக்கி நீரில் கலந்து குடித்தால் பக்கவாதம் சளி, இருமல், தலைவலி, மார்புச்சளி, மூட்டுவாதம் முதலியவற்றுக்குச் சிறந்தது.

பாம்புக்கடிக்குத் தும்பை இலைச்சாறு பாதியும் வாழைத்தண்டுச்சாறு பாதியும் கலந்து கொடுக்க வேண்டும்.

**குப்பைமேனி:**

கிருமிகளை வெளியேற்றும், பாம்புக்கடிக்கு நல்லது. மூட்டுவாதம் , சொறி, சிரங்கு, தோல் நோய்கள் முதலியன குணமடையும் காயங்களுக்கு இலையை அரைத்துப் பூசலாம்.

**வெங்காயமும் பூண்டும்**

இவை இரண்டையும் அதிகமாக உணவுடன் சேர்த்துக் கொள்வதால் வயிற்றில் உள்ள கிருமிகளை வெளியேற்றிவிடும். மற்றும் சொறி, சிரங்கு, யானைக்கால் வியாதி, சைனஸ்,டான்சில், இரத்த அழுத்தம், இருமல் ஆஸ்த்மா, கொலஸ்ரோல் குறையும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஜீவசக்தி உயிராற்றல் இருக்கிறது. இந்த சக்தியை நாள்தோறும் செலவு செய்துகொண்டிருக்கிறோம்.

இந்த ஜீவசக்தியை வளர்ச்சிக்கு முயற்சி செய்கிறான். நாம் சாப்பிடுவதை நிறுத்தியவுடன் நமது உடலில் உள்ள ஜீவசக்தி உடலில் உள்ள விஷங்களை, கழிவுகளையெல்லாம் வெளியேற்றுகிறது. உண்ணா நோன்பு எல்லோரும் வாரத்தில் ஒரு நாள் கண்டிப்பாக இருந்தால் உடல் வளமுடன் நோயின்றி வாழமுடியும்.

வாணி.

# குடிசை வாசலில் ஒரு சக்கரவர்த்தி

ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று பகவான் புத்தர் கண்டறிந்தார். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்கிற ஆழ்வாரின் அறிவிப்பு இதே அலைவரிசையின் இரண்டாவது ஒலிபரப்பு. இந்த ஆசையை பொருட் பற்று! மனைவி மக்கள் பற்று. தன்மீது தான் வைத்தி ருக்கும் பற்று என்று மூன்று நிலையில் குறிப்பிடலாம். இதற்கு ஒரு கதையும் உண்டு.

காட்டு வழியில் ஒரு துறவி போய்க் கொண்டிருந்தார். வழியில் எந்த உயிருக்கும் தம்மால் தீங்கு வந்து விடக்கூடாதே என்று தம்கையில் வைத்திருந்த தடியால் தட்டிக் கொண்டே நடந்தார். 'ணங்' என்று ஒரு சத்தம் கேட்டது. எதிரே இருந்த புதரைத் தட்டிய போது அதில் இருந்துதான் அந்த ஒலி வருகிறது என்று கண்டார். தடியால் புதரை விலக்கினார். உள்ளே ஒரு வெண்கலப் பானை. அத்தனையும் தங்கக் காசுகள் பளபள என்று ஒளி வீசின. 'ஐயோ ஆட்கொல்லி இருக்கிறதே' என்று விழுந்தடித்துக் கொண்டு ஓடினார். பின்னர் அந்த வழியே வந்த இருவரும் பானையைப் பார்த்து ஒருவரை ஒருவர் ஒரு மாதிரிப் பார்த்தனர்.

பானையைக் கொட்டிக் காசுகளைப் பங்கிடுவது என்று முடிவெடுத்து பகல் வேளையில் பானையோடும் பணத்தோடும் ஊருக்குள் போய் அகப்பட்டு விடுவோம் இருட்டட்டும் போகலாம் என்று இருக்க பசி வதைத்தது. ஒருவர் ஊருக்கு உணவெடுக்கச் சென்றார் மற்றவர். பக்கத்திலிருந்த மூங்கிலை முறிக்க அது கத்தி போல கூர்மையாக இருந்தது. கண்ணில் வெறி ஏறியது. ஊருக்குள் போய் வந்தவர் உணவைக் கொண்டு வந்து வைத்து விட்டு நிமிர்ந்த அடுத்த விநாடி கூரான மூங்கில் அவர் வயிற்றில் பாய்ந்தது. 'ஆ' என்று அலறிச் சாய்ந்தார் அவர். கொஞ்ச நேரம் தங்கத்தின் பக்கத்தில் இருந்தவரை பணம் நம்பிக்கை துரோகம் செய்ய வைத்தது. பின் உணவைத் திறந்து பசியாற உண்டார். அப்போது தலை சுற்றி விழுந்தார்.

பானைக்கு அந்தப் பக்கம் ஒரு கொலைகாரப் பிணம்! இந்தப் பக்கம் ஒரு கொலைகாரப் பிணம்! காலையில் அந்த வழியில் போன துறவி மாலை அதே வழியில் திரும்பி வரும் போது பதறிப்போய்! 'ஐயோ ஆட்கொல்லி இருவரைக் கொன்றுவிட்டதே! இன்னும் எத்தனைபேரைக் கொல்லுமோ' என்று வருந்தினார்.

பொருள் நமது வேலையாள், எஜமானன் அல்ல. இதைப் புரிந்து கொண்டவன் மனிதன். பொருளாசைக்கே அடிபணியாதவன் துறவி. பொருளின் தேவையை வென்றவன் ஞானி!

சுகிசிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்
பெருமையுடன் வழங்கும்

**அன்னையின் மடியில் 2010**

(யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் முதலாவது சர்வதேச மாநாடு)



**காலம்**
12.09.2010
ஞாயிற்றுக்கிழமை

**நேரம்**
காலை 9.00

**இடம்**
யாழ்.இந்துக்கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

**பதிவுகளுக்கு**
யோகேஸ்
0773 946024
அருள்
0774 447646
தவா
0777 563213

**பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ஊடக அனுசரணை: உதயன்


# வீதிப்புனரமைப்புக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,செப்.9

குறித்து ஒதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடையாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்காக ஒரு மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு கச்சார்வெளி வீதியில் அரைக் கிலோ மீற்றர் தூரம் வரை திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ் வீதிக்குத் தார் போட்டு புனரமைப்புச் செய்யப்படுகின்றது. எனினும் இந்த நிதி போதுமானதாக இல்லை எனவும் அரைக் கிலோமீற்றர் கச்சார்வெளி வீதியினைத் தார் போட்டு திருத்தி அமைக்கவே இந்த நிதி போதுமான்து. மேலதிகமாக ஒரு கிலோ மீற்றர் தூரம் திருத்தப்பணிகள் செய்வதாயின் இன்னும் ஒரு மில்லியன் ரூபா தேவைப்படுமென விசேட ஆணையாளரும், பிரதேச சபைச் செயலாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். இவ் வீதியின் திருத்தப் பணிகள் ஒரு மாதத்துக்குள் பூர்த்தியடையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-315-313)


**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1967 ஆம் ஆண்டு ஆயிலியம் நட்சத்திரம், கிரகபாவம் 38, இளமைத் தோற்றமுள்ள மணமகளுக்கு நற்குணமுள்ள மணமகன் தேவை. தாரமிழந்தவர்களும் (பிள்ளைகள் இல்லாதவர்கள்) விரும்பத்தக்கது. தொடர்பு: 4067, மே/பா உதயன்

**காணி விற்பனைக்கு**

நல்ல தண்ணீர்க் கிணறு, சுற்றுமதில் என்பவற்றுடன் யாழ். கல்விவலயத்துக்கு அண்மையில் இல. 151, செம்மணி வீதி, ஆடியபாதம் வீதி ஆகிய இரு வழிப்பாதை கொண்ட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம். பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: 0779051432


## பதின்மூன்றாவது ஆண்டு கவிதாஞ்சலி



தோற்றம்: 16.12.1980
மறைவு 02.09.1997

## செல்வி சின்னையா கவிதா

திதி: பிரதமை

காலை மலர்ந்த மலரே எங்கள்
கவலைகள் தீர்த்த மருந்தே நீ
போன திசை எங்கே
புரியவில்லை மகளே
எங்கள்
கண்மணியே கவிதா
உன் நினைவால் நித்தம் நித்தம் உருகுகின்றோம்
நாளும் ஈரவிழிகளுடன்

'கவிதாலயா'
இல. 06, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்

அன்பு அம்மா, அப்பா, அண்ணன்மார்,
அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார்,
மருமக்கள், பெறாமக்கள்.

# பதினோராவது ஆண்டு பரிதவிக்கும் நினைவுகள்

## அமரர் குணசிங்கம் ஞானேந்திரன்

09 - 09 - 2010

(குட்டி, கண்ணன்) உரிமையாளர்: கோபிகா ஆடையகம், யாழ்.

தோற்றம்: 07.01.1977 மறைவு: 10.09.1999



பாசமுடன் நேசமுடன் பண்புகள் பலகாட்டி
ஆசையுடன் பழகிய அன்பு ஞானேந்திரா!
பதினொரு ஆண்டுகள் பறந்தோடிப் போயிற்றே
கதிகலங்கி நாம் தவிக்கும் தவிப்பு யாரறிவார்?

நேசமகனாய் பாசத் தம்பியாய், அண்ணனாயிருந்து
வாசமிழந்து நிற்கும் வாடாமலரே! எங்குற்றாய்?
பேச நா எழாது பெருங்கவலையில் வாழ்கிறோம்!
பூங்காவனம் வந்தால் வந்திடுமே உன் பாசமுகம்!

கண்ணின் மணிபோல் காத்துவளர்த்தென்ன பயன்?
விண்ணின் மணியாய் எமைப்பிரிந்து சென்றனையோ
மண்ணில் நினது புகழ் மாண்புடன் நிலைத்திடுமே
புண்ணில் வேல் நுழைந்தாற் போல் பரிதவிக்கிறோம் நாம் இங்கு!

40/6, புகையிரத நிலைய
கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரிகள்,
மச்சான், மருமகள், மருமகன்மார், உறவினர்,
நண்பர்கள், கோபிகா, கௌரி ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகத்தை அடைய வழி

உடல், மனம், ஆத்மா மூன்றையும் ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்துபவன் மனிதன். இந்த மூன்றின் ஒருமைப்பாடே மானவத்துவம். தெய்வீகத்திற்குச் செல்வதென்றால் மிருகக் குணங்களையும் அரக்க குணங்களையும் விரட்டி அடிக்க வேண்டும்.

நீ ஒருவனல்ல மூன்று நபர்கள், நீ யாரென்று நினைக்கிறாயோ அது உடல், மற்றவர்கள் உன்னை யாரென்று நினைக்கிறார்களோ அது மனம், உண்மையில் நீ யாரோ அது - ஆத்மா - தெய்வீகம்.

உடல் மட்டும் பிரதானமாக எண்ணிச் செயல்படுவதுதான் மிருககுணம். மனதை மட்டும் பின்பற்றுவது அரக்க குணம். ஆத்மாவை அனுசரித்து நடந்து கொள்வதுதான் தெய்வத்துவம். ஒவ்வொருவரும் தன்னைக் கேட்டுக் கொள்ளலாம் நான் மிருகமா? அரக்கனா? அன்றித் தெய்வமா? என்று. நான் உடலைப் பின்பற்றுகிறேனா? மனதைப் பின்பற்றுகிறேனா? அல்லது ஆன்மாவைப் பின்பற்றுகிறேனா? என்று கேட்டுக் கொள்ளலாம்.

மனிதன் உடலை வெறும் கருவியாக மட்டுமே கருதுகிறான். இது சரியல்ல. எல்லா விதங்களிலும் மனிதனுக்கு இலட்சியங்களை அறிவுறுத்தவே இவ்வுடல் ஏற்பட்டது. அத்தகைய இலட்சியங்கள் எவை? ஒவ்வொரு நாளும் இவ்வுடலைக் கவனத்துடன் பரிசோதித்தால் உடல் உள்ளே பரிசுத்தமான பிராணவாயுவை இழுத்துக் கொள்கிறது. கரியமில வாயுவை வெளியே அனுப்புகிறது. இவ்வுடல் புனிதமானது. இனிமையான பொருள்களை உள்ளே செலுத்திக் கொள்கிறது. துர்நாற்றம் தரும் கெட்ட பொருள்களை வெளியே அனுப்புகிறது.

இத்தகைய செயல்முறையின் உட்சிறப்பு என்ன?

உலகத்தின் நன்மைக்காக, சமுதாயத்தின் மகிழ்ச்சிக்காக மனிதன் நல்லவற்றை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். நாட்டுக்குத் துன்பம், கொந்தளிப்பு, இடைஞ்சல் தருவது எதுவாயினும் அதனை விலக்க வேண்டும். புனிதமான இவ்வுடலைப் பெற்ற மனிதன் மனித சமுதாயத்தின் நன்மைக்காக இவ்வாறுதான் நடந்து கொள்ள வேண்டும் என்பதை உடல் அதன் செயல் மூலம் விளக்குகிறது.

நாம் உயர்ந்த நல்ல பாவனைகளை உள்ளே ஏற்றுக்கொள்ள வேண்டும். புனிதமற்ற நிரந்தரமில்லாத எண்ணங்களை விலக்க வேண்டும். இத்தகைய புனித வாழ்க்கையினை மனிதன் வாழும்போது உடலும் இந்த இலட்சியத்தைச் செயல்முறைப்படுத்தி ஆரோக்கியமுள்ளதாகவும் வலுவுள்ளதாகவும் இருக்கும்.

இத்தகைய செயல்கள் புரிவதையும், நல்ல எண்ணங்களை வைத்துக் கொள்வதையும் நாடு முழுவதும் அறியும் வண்ணம் பரப்பவேண்டும். ஆனால் இக்காலத்தில் மனிதன் புனிதமற்ற சுயநல எண்ணங்களையே வளர்த்துக் கொள்கிறான். அவன் நித்தியமான, புனிதமான, தூய்மையான எண்ணங்களைக் கைவிட்டுவிட்டான்.

அழுகிய பழத்தை உண்பாயா? கனிந்த இனிப்பான பழத்தைத் தூக்கி எறிவாயா? பிராணவாயுவை வெளியே அனுப்பி கரியமிலவாயுவை உள்ளே செலுத்துகிறாயா? இல்லை. இவ்விதம் செய்தால் ஆரோக்கியம் கெடுவதுடன் உனது உயிரையும் இழப்பாய்.

மனிதன் உடல் ஆரோக்கியத்தையும் மன ஆரோக்கியத்தையும் ஆன்மீக ஆனந்தத்தையும் பெற வேண்டும். மனித வாழ்க்கை உடல், மனம், ஆன்மா (தெய்வீகம்) இவை கலந்த ஒன்று. உடல் செயல் புரிகிறது. மனம் சிந்திக்கிறது.



ஆத்மா சாட்சியாகத் துலங்குகிறது.

இவை மூன்றும் ஒன்றுசேரும்போது மனித வாழ்க்கை உன்னதமடைகிறது. ஒருவரும் இந்த உன்னத இரகசியத்தை அறிய முற்படுவதில்லை.

**சாயி சிந்தனை**

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், செப்.9

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்காமணி மண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் வழங்கும் 'நல்லை முருகனுக்கு ஜெயமங்களம்' சிறப்பு நிகழ்வு இடம்பெறும்.

என்.செல்வச்சந்திரனின் இசை நெறியாள்கையிலும் திருமதி சாந்தினி சிவநேசனின் நடன அமைப்பிலும் திருமதி ஜெயபாரதி கௌசிகன், வி.சிவஞானசேகரம் ஆகியோரின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

ஏ.ஜெயராமன் வயலினும், என்.செல்வச்சந்திரன் கீபோட்டும், கே.நக்கீரன் புல்லாங்குழலும், எஸ்.துரைராசா மிருதங்கமும் சதா வேல்மாறன் தபேலாவும், ஏ.செல்வரத்தினம் கடமும் வாசிப்பர்.

(201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று பி.ப 3 மணிக்கு 'முருக மந்திரம்' என்னும் தலைப்பில் சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச.லலீசனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

யாழ்.காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப்பாடசாலை, ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும்.

(204)

* * *

நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திருஞானசம்பந்தமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'தர்மர் பட்டாபிஷேகம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

(201)






# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## முறை செய்து காத்து அருள்வாயா?

நினைவார்தம் நெஞ்சில் நிழலாக வன்றி
நிஜமாக நிற்கும் நெடுவேலா
துணையாரு மின்றித் தொடர்பேது மின்றிச்
சுகவாழ்வு மின்றிச் சுழல்கின்றோம்
முனம் நாங்கள் செய்த வினையாவும் நீக்கி
முறைசெய்து காத்து அருள்வாயா
வனமாதும் தெய்வ மணமாதும் சூழ
மணவாள னாக வரும் வேலா!

சிற்பி.

## உளம்பொங்கும் பூங்காவனம்

நலம் தரும் நல்லையுறை வேலுடைய முருகா
நிலமொளிர உன்நாத மணியொலிக்கும் நாளும்
தலவாயில் உனதுகொடி உயர்ந்தே பறக்கும்
தினமொன்றாய் உற்சவநாள் தேர்பவனி தீர்த்தமுமாய்
புலம்செழிக்க பட்டுடுத்தி பக்தரெலாம் பொட்டுமிட்டு
பூங்காவன நன்நாளாம் அலங்கார இந்நாளில்
துலங்கிடவே வடதிசையில் பசுஞ்சோலை குளிர்மைதர
தாயவேல் கரத்தினொடு தாயகத்தைக் காப்பாயே

அல்லையூர் கே.ஆர்.திருத்துவராஜா

## முருகனுக்கு இன்று கல்யாணம்

நல்லூரில் கல்யாணம் இன்றே
நான்போய் பார்த்துவர வேண்டும்

பொல்லாத காதல் மன்னன் முருகன்
இல்லாமல் ஒருதிரு மணந்தானோ...

வள்ளிமீது காதல்கொள முன்பாக
வடிவாம் பிகைதேவானை மீதே
கொள்ளை காதல் கொண்டிருந்தான்
கொளுவல் பார்க்கப் போகவேணும்...

புதுமணத் தம்பதி முருகன்வள்ளி
புகவுளே விட்டிடாமல் கதவடைப்பார்
இதுநல்ல முசுப்பாத்தி பாத்துரசிக்க
இன்று நல்லூர் போகத்தான் வேணுமையா...

தெய்வானை இடம்முருகன் மண்டியிட்டு
தேறவிலைச் சம்மதம் என்றறிந்தே
தேவருலகப் பெரியார்கள் வந்துகூறி
தேற்றிவிட சேர்வதனைக் காணவேணும்...

மூலபாரதி.

## பூங்காவனத்தன்று பூசிப்போம்

பூங்கா வனத்தன்று பூசிப்போம் நல்லூரில்
ஆங்கழகுக்காய் வளரும் பூமரங்கள் - தீங்கான
சூழலை மாசகற்றுஞ் சூக்குமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி.

அமரர் சி.இராசரத்தினம்
வேலணை.

## வேலுடனே வருகிறான்

சுட்ட பழம் தந்தவன்
சூரனைத் தொலைத்தவன்
குட்டிக் குட்டி பிரமனையே
சிறையிலடைத்தவன்
எட்ட நின்ற வள்ளியிடம்
கிட்டவாக வந்தவன்
தந்தைக்கு உபதேசித்து
சுவாமி நாதன் ஆனவன்
அடியவர் குறை தீர்த்ததால்
தண்டபாணியானவன்
வள்ளியை மணந்துமே
வள்ளி மணாளன் ஆனவன்
வேலுடனே வருகிறான்
நல்லூரின் வீதியிலே...

ந.மணிகரன்.

## இரு கண்கள் போதவில்லை

நல்லைப் பதி குமரா - உன்
கண் கவரும் மணக்கோலம்
பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை ஐயா
வள்ளி தெய்வ யானையோடு
பவனி வந்து பக்தர்களுக்கு
அருள் புரியும் ஆறுமுகனே
உன் அழகைக் காண இரு
கண்கள் போதவில்லை முருகா

லோஜனா கிருஸ்ணசாமி
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையா **விவாத மேடை** தேவையற்றதா

# மொபெட் ரக (49CC) வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள நடைமுறைகள்

மொபெட்ரக 49 CC வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ள ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் போன்ற நடைமுறைகள் முக்கியம் தேவை என்பதுதான் எனது வாதமாகும்.

தற்போது யாழில் மொபெட்ரக மோட்டார் ரக வாகனங்களின் பாவனை கூடுதலாக காணப்படுகின்றது. காரணம் குறைந்த விலை, அதற்கு தலைக்கவசம், சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவை உடனடித் தேவை யில்லை. எந்த ரக மோட்டார் வாகனம் ஆக இருந்தாலும் சரி பெற்றோ லில் இயங்கும் வாகனம் அனைத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட ஹெல் மட், சாரதி அனுதிப்பத்திரம் அவசியம். அது இப்போதைய காலத்தின் தேவையும் கூட. கிட்டத்தட்ட எல்லா மோட்டார் ரக வாகனங்களின் வேகம் செலுத்துபவரின் தன்மையைப் பொறுத்து கூடுதலாகவே காணப் படுகின்றது.

மொபெட்ரக வாகனம் செலுத்தினால் மட்டும் விபத்துக் கள் வராது என்று நினைக்கக்கூடாது. ஆபத்து எந்த நேரமும் வர லாம். நாம் எம்மைப் பாதுகாக்க வேண்டும். மற்றும் 18 வயதிற்கு கீழ்ப் பட்டவர்கள், இவ்ரக வாகனங்கள் செலுத்துவது காணக்கூடியதாக உள் ளது. இது தவிர்க்கப்படல் வேண்டும்.

எனவே மொபெட் ரக வாகனம் செலுத்துபவர்கள் ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் போன்றவை தற்போதைய காலத்திற்கு ஏற்ப தேவைதான் என்பது எனது வாதமாகும்.

**க. கனகசபை,**
சண்டிலிப்பாய்.

மொபெட் (49CC) மோட்டார் சைக்கிள்களுக்கு சாரதி அனுமதிப்பத் திரம் தேவையா? தேவையில்லையா? என சரமாரியாக வாதப் பிரதி வாதங்கள் இடம்பெற்று வருகின்றது. இலங்கையில் வீதி விபத்துக் களுக்கு 49இஇ மோட்டார் சைக்கிள்கள் காரணம் அதுதான் சாரதி அனு மதிபத்திரம் கோரப்படுகின்றது என்று ஊடகங்கள் மூலமாக செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றது. அந்த வகையிலே எந்தவிதமான இலகு வான வேலையை எவரும் செய்வதற்காக மக்கள் மத்தியில் அறிமுகப்பத் தப்பட்டதே 49இஇ ரக மோட்டார் சைக்கிள்கள். இவை தமது வேலை களுக்கு இலகுவாக இருந்தமையாலும் சாரதி அனுமதிப்பத்திரம் தேவை யற்ற தன்மை கடந்த காலங்களில் இருந்தமையாலும் மக்கள் இதனை அதிகமாகக் கொள்வனவு செய்தனர். அதாவது விளம்பரப்படுத்தலின் போது சாரதி அனுமதிப்பத்திரம் இதற்கு தேவையில்லை என உத்தரவாதம் அளிக்கப்பட்டே கடந்த காலங்களில் விற்பனை செய்யப்பட்டது. திடீரென அதற்கு சாரதி அனுமதிப்பத்திரம் தேவையென அறிவிப்பதானது பலருக்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியுள் ளது. விபத்துக்களில் எல்லா வாகனங்களும் உட்படுகின்றன. ஆனால் 49 CC தான் எல்லா விபத்திற்கும் காரணம் என புதிய கண்டுபிடிப்பை வெளியிடுவதானது முழந்தாளிற்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடும் செயலாக பார்க்கப்படுகின்றது. எனவே தர்மசங்கடமான நிலை யில் இருந்து எம்மை காப்பாற்ற மோட்டார் போக்குவரத்து நிறுவனம் முன்வரவேண்டும். தீர்மானங்களை நீதியாக எடுக்கவேண்டும் என கோருகின்றோம்.

**அநித்தன்,** நெல்லியடி.

# இளவல்கள் வட்டம்

## "க்ளோஸ் ஃபிரெண்ட்" வேணுமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

அப்படியிருக்க, மற்றவர்களிடம் அப்படி எதிர்பார்ப்பதற்கு நமக்கு உரிமை யும் இல்லை. நம்மிடமுள்ள குற்றங்குறைகளை நம்முடைய நண்பர்கள் பொறுத்துக்கொண்டு நம்மை ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறோம். நாமும் கூட அவர்களுடைய குறைகளைப் பற்றி சதா நினைத்துக் கொண்டிராமல் அல்லது பெரிதுபடுத்தாமல் விட்டு விட வேண்டுமல் லவா? குறை காணாத நண்பர்கள் - அதாவது, ஒருபோதும் குறை சொல் லாத, எப்போதுமே நேசிக்கிற, ஒரு போதும் முகம் கோணாத, எப் போதும் கரிசனை காட்டுகிற, ஒரு போதும் ஏமாற்றாத நண்பர்கள் - செல் லப் பிராணிகளைப் போன்றவர்கள். நட்பு மகிழ்ச்சியை இரு மடங் காக்கும், துக்கத்தையோ அரைவாசியாக்கும்.

உற்றநண்பர்கள் வேண்டுமா? அதற்காக ஆசைப்பட்டுக் கொண்டிருப்பதோ காத்திருப்பதோ இது போன்ற கட்டுரைகளை வாசிப்பதோ மட்டும் போதாது. நண்பர்களைப் பெறுவதற்கான வழிகளை அறிவது, சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்வதைப் போன்றது. இந்த இரண் டிற்குமே புத்தகத்தைப் படித்தால் மட்டும் திறமைகள் எல்லாம் தானாக வந்து விடாது. சில முறை கீழே விழ வேண்டியிருந்தாலும் பழகிப் பார்ப்பது அவசியம்.

க்ளோஸ் ஃபிரெண்ட்ஸ் பெற நீங்கள் தீர்மானித்து விட்டீர்களா? முயற்சியைக் கைவிடாதீர்கள், சுயநலத்தைக் களைந்து முயற்சி செய் யுங்கள், நண்பராக இருங்கள்.



"ஒருவரிடம் உங்களால் எந்த விஷயத்தையும் மனம் விட்டுப் பேச முடிகிறதென்றால், ஒரு நாளில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஒருவரிடம் போனில் உரையாட முடிகிறதென்றால் அவரே நண்பர்."

"ஒரு நண்பர், நீங்கள் வேத னைப்படுகையில் புரிந்து கொள் கிறார், நீங்கள்படும்வேதனையை அப் படியே அவரும் புரிந்துகொள் கிறார்."

(முற்றும்)

**ஞா.சுகந்தி,** கல்வயல்

### விவாதமேடை

தேவையா — மொபெ ரக (49 CC) வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஹெல்மட், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல் போன்ற நடைமுறைகள் — தேவையற்றதா

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே "மொபெட்ரக(49cc)" வாகனங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள் தேவையா? தேவையற்றதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

### வாழ்க்கை



இறைவன் எழுதிய
பிறப்புக்கும் இறப்புக்கும்
இடையில் மனிதனால் - தீட்டப்பட்ட
கீறல்கள் எனக்காக

அன்று உனக்காக என் மனதில் பூ பூத்தது
வண்ண பூங்காவில் சுற்றித்திரிந்தேன்
நினைத்துக் கூடப் பார்க்கவில்லை!- அந்த பூவையோ
எனது கல்லறையில் நீ வைப்பாய் என்று

**எஸ்.அகல்யா,**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### பிரிவு



பிறந்த போது நீ
காட்டிய அன்பை
உணர முடியாத வயது
உன் அன்பு
கிடைக்காதா என்று ஏங்கும்
வயதில் உன்னை
என்னிடமிருந்து பிரித்துவிட்டது
காலம்
காலம் செய்த கோலம்
உறவுகள் செய்த துரோகம்
என் அண்ணனின் பிரிவு

ராகினி இராஜேந்திரராஜா
யா/கொழும்புத்துறை இந்து. ம.வி.

கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

### இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

"மொபெட்ரக (49cc)" வாகனங்களுக்கு புதிதாய்
அறிமுகப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள்

தேவையா ☐ தேவையற்றதா ☐

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
அடையாள அட்டை இல:........................

உங்கள் தீர்ப்புகளை 30.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும்,
பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்
'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது.
இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது
சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள
படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் 16 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்வு; நலன்புரி முகாம்களில் இன்னும் 8 ஆயிரம் குடும்பங்கள்

## புதுக்குடியிருப்பில் குடியேற்றம் விரைவில் என்கிறார் முல்லை. அரச அதிபர்

முல்லைத்தீவு ,செப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரை 16 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடிய மர்த்தப்பட்டுள்ளதுடன் 'இன்னமும் 8 ஆயிரம் குடும்பங்கள் நலன்புரி நிலை யங்களில் வாழ்கின்றனர் என்று முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேத நாயகம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடை பெற்ற அரச அதிபர்களின் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த முல்லைத்தீவு அரச அதிபரிடம் மாவட்டத்தின் மீள்குடியேற் றம் தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீள்குடியேற்றம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

முல்லைத்தீவில் கரைதுறையூர் பிர தேச செயலர் பிரிவில் இதுவரை 25 குடும் பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள் ளனர். இந்த மக்களுக்குத் தேவையான சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஏனைய குடும் பங்கள் அங்குள்ள மிதிவெடிகள் யாவும் அகற்றப்பட்ட பின்னர் விரைவில் மீள் குடியமர்த்தப்படுவர்.

இதேவேளை புதுக்குடியிருப்பில் உள்ள 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மக்கள் அடுத்த வாரமளவில் மீள்குடிய மர்த்தப்படவுள்ளனர். ஏனைய பகுதிகளில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற் றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இப்பணிகள் நிறைவடைந்ததும் மக்கள் விரைவில் மீள்குடியமர்த்தப்படுவர்- என்றார். (6-9)

# தென்னிலங்கை மக்களின் கவனத்தை ஈர்க்கும் கிளிநொச்சி நகரின் தண்ணீர்த்தாங்கி

கிளிநொச்சி,செப்.9

தென்னிலங்கை சுற்றுலாப் பயணி களின் சுற்றுலாத் தளமாக மாறி வருகி றது கிளிநொச்சி காக்காகடைச் சந்தியருகே அமைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கி. வன் னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது சேதமடைந்து வீழ்ந்து கிடக்கும் இந்த நீர்த்தாங்கியைத் தினமும் நூற்றுக்கணக் கான சுற்றுலாப் பயணிகள் பார்த்துச் செல் கின்றனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட் டில் கிளிநொச்சி இருந்தபோது நகரின் குடிதண்ணீர் தேவையை நீக்குவதற்காக அமைக்கப்பட்ட இந்த நீர்த்தாங்கி யுத்தத்தின் போது அழிவடைந்தது. கிளிநொச்சியில் தற்போது மக்கள் மீளக்குடியமர்த்தப் பட்டு எட்டு மாதங்கள் கடந்துவிட்ட போதிலும் நீர்த்தாங்கியைப் புனரமைப்பதற்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் பஸ்கள் இந்த இடத் தில் நிறுத்தப்பட்டு பயணிகள் இதனைப் பார்வையிடுவதையும் முன்னால் நின்று புகைப்படம் எடுத்துச் செல்வதையும் காணக் கூடியதாகவுள்ளது. (6-405)




# தென்னைச் செய்கைக்கு ஏக்கர் வரி

கிளிநொச்சி ,செப்.9

பச்சிலைபபள்ளி பிரதேச சபை எல் லைக்குள் ஐந்து ஏக்கருக்கு மேல் தென் னைச் செய்கையில் ஈடுபடுவோர் ஏக்கர் வரி செலுத்த வேண்டுமென பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் வரி செலுத்துவதற்கான விண் ணப்பப் படிவங்களைப் பெறா தோர் தமது காணிகளை மீண்டும் உரிமை கோர முடி யாது. எனவே மீள்குடியேற்றப்படாத கிரா மத்தைச் சேர்ந்தவர்களும் தம்முடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப் படிவங்க ளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென பச் சிலைப்பள்ளி பிரதேச சபையின் செய லாளரும், விசேட ஆணையாளருமாகிய சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (க-315-313)

# சாரணத் தலைவர்களுக்கான கருத்தரங்கும் பாசறையும்

கிளிநொச்சி ,செப்.9

வடமாகாண சாரணர் தலைவர்க ளுக்கான கருத்தரங்கும் பயிற்சிப் பாச றையும் எதிர்வரும் 13 ஆம் திகதி திங் கட்கிழமை காலை 8.30 மணிக்கு கிளி நொச்சி இந்துக் கல்லூரியின் பிரதான மண் டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண சாரணர் ஆணையாளர் நா. போஜன்ற் தலைமையில் நடைபெற வுள்ள பாசறை நிகழ்வில் பிரதம விருந் தினராக இலங்கை சாரணிய ஆணையாளர் த.பட்டுவாங்கல கலந்துகொள்ளவுள்ளார். (6-325)

# வளர்ப்புக் குரங்கின் அட்டகாசம்; படுகாயமுற்ற சிறுமி வைத்தியசாலையில்

கிளிநொச்சி ,செப்.9

மாயவனூர் பகுதியில் குரங்கினால் கடியுண்ட பாடசாலை மாணவி படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மாயவனூர் அ.த.க. வித்தியாலயத் தில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் ஸ்ரீகாந் தன் தயானி என்ற சிறுமியே குரங்கு கடித்து படுகாயமுற்ற நிலையில் கிளி நொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்க பட்டவராவார்.

இந்தப் பகுதியில் குடியிருப்பாளர் ஒருவரால் செல்லப்பிராணியாக வளர்க் கப்படும் இந்தக் குரங்கு இதுவரை 10 சிறார்களைக் கடித்துள்ளது. பாடசாலை மாணவர்களும், முன்பள்ளிச் சிறார்களும் இந்தக் குரங்கின் மேல் கொண்டுள்ள அச்சம் காரணமாக பாடசாலைகளுக்குச் செல்வதில் அக்கறை காட்டுவதில்லை.

இதுபற்றிப் பொதுமக்கள் பலமுறை முறைப்பாடு தெரிவித்துள்ள போதிலும் பயனெதுவும் கிட்டவில்லையென கவலை தெரிவிக்கின்றனர். (க-432)

# அருகில் உள்ள பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி ,செப்.9

வன்னி மாவட்டத்தில் மீளக்குடிய மர்ந்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 13 பாடசாலைகள் உள்ள போதிலும் ஆறு பாடசாலைகளே புனரமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

பளை மத்திய கல்லூரி, சோரன் பற்று கணேசா வித்தியாலயம், மாசார் மகா வித்தியாலயம், தர்மகேணி அ.த.க. பாடசாலை, புலோப்பளை றோ.க. பாடசாலை, பச்சிலைப்பள்ளி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் மீள்குடி யேற்றம் செய்யப்பட்ட மக்கள் தங்க ளுக்கு அருகில் உள்ள பாடசாலை களில் பிள்ளைகளைச் சேர்த்து பாட சாலைகளின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாடசாலை சமூகம் மற் றும் பிரதேச சபை செயலாளர் ஆகி யோர் வேண்டுகோள் விடுத்துள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-313-315)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல்

மன்னார் ,செப்.9

மன்னார் கடற்பரப்பில் கடற்றொ ழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் தடைசெய்யப்பட்ட உபகர ணங்களைக் கொண்டு மீன்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்படுவதாக மன்னார் மீன் பிடித் திணைக்களத்தின் உதவிப் பணிப் பாளர் எஸ். பவாநிதி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டத்தி லேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந் தக் கூட்டத்தில் மன்னார் அரசாங்க அதி பர், மன்னார் கடற்படைத் தளபதி, மீன் பிடித் திணைக்கள அதிகாரிகள், மீனவர் கூட்டுறவுச் சமாசங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களான இழுவைப் படகு (றோலர்) வலை, தங்கூசி வலை, சுருக்கு வலை, கணவாய் பற்றை கட்டை என்பவற்றை மீனவர்கள் உடனடியாக மீன் பிடித் திணைக்களத்தில் ஒப்படைக்க வேண் டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (6-80)

# வடமாகாணக் கல்வியமைச்சின் இப்தார் நிகழ்வு மன்னாரில்

மன்னார்,செப்.9

மன்னார் கல்வி வலயமும், வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்திய இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை வலயக் கல்விப் பணி மனை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அரச உயர் அதிகாரிகள் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாடசாலைக் கல்லூரி அதிபர்கள், மும் மதத் தலைவர்கள்,பொலிஸ், இராணுவக் கடற்படை அதிகாரிகள், சமுக சேவகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் வடமாகாணக் கல்வி பண் பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை யின் பணிப்பாளர் திருமதி ஸ்ரீதேவியும் கலந்துகொண்டார். (6-80)

# கண்டாவளைக்குத் தனியான பிரதேச சபையும் பொலிஸ் நிலையமும் அமைக்க நடவடிக்கை

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி ,செப்.9

கண்டாவளைப்பிரதேசத்துக்கென தனியான பிரதேச சபையும் பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்கவும் கண்டாவளைப் பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டுள்ளது.

கண்டாவளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மு.சந்திரகுமார் தலைமையில் தருமபுரம் நெசவு நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபாவதி கேதீஸ்வரன், கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்திய சீலன், திணைக்களத் தலைவர்கள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள், கரைச்சி வடக்கு பல.நோ.கூ. சங் கத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் மீளக்குடியேற்றத்தின் போது வாழ் வாதாரம் மற்றும் தொழில் முயற்சிகளில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதுடன் அவற்றை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

தவிர கண்டாவளைக்கெனத் தனியான பிரதேச சபை ஒன்றை உருவாக்குதல். கண் டாவளைப் பிரதேச செயலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன் தருமபுரம் பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் குற்றச் செயல் களை அடுத்து அங்கு பொலிஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் பிரதிநிதி களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் அதிகாரிகள் பொலிஸ் நிலையத்தை அமைப்பதற்குப் பொருத்தமான இடம் ஒன்றைப் பெற்றுத் தரும் பட்சத்தில் அங்கு பொலிஸ் நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர்.

பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு ஏற்ற இடத்தை தாம் விரைவாகப் பெற்றுத் தருவதாக கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்தார். (6-440)

# பல மாதங்கள் கடந்த போதும் பயிற்சிகள் ஆரம்பமாகாத நிலையில் 'நைற்றா' நிறுவனம்

கிளிநொச்சி ,செப்.9

இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பயிலுநர் கைத் தொழில்பயிற்சி அதிகார சபையின் (நைற்றா) கிளிநொச்சி மாவட்ட அலு வலகம் தொடர்ந்து பயிற்சிகள் எதுவும் வழங்காமல் மூடப்பட்டு இருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் இருந்து நாடாளு மன்ற உறுப்பினர் குழுவினர் கிளிநொச்சி இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காகக் கிளிநொச்சி தொழில் நுட்ப நிறுவனத்தின் வளாகத்தில் பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தனர்.

அங்கு காவலுக்கு காவலாளிகள் கடமையில் ஈடுபட்டுள்ள போதும் அக் கட்டடம் புனரமைக்கப்படாத நிலையிலேயே தொடர்ந்து இருப்பதுடன் இளைஞர், யுவதிகளுக்கு கைத்தொழில் பயிற்சி களை வழங்குவதற்கு இதுவரை எத்த கைய நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை என்று பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-405)

# பளையில் பொது நூலகங்களை புனரமைக்கும் பணி துரித கதியில்

கிளிநொச்சி ,செப்.9

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பளை நகரத்தில் 3 பொது நூலகங்களில் இரண்டு பொதுநூலகங்கள் தற்போது இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இவற்றைப் புனரமைக்கும் பணிகளும் துரிதமாக நடைபெறுகின்றன.

பொதுமக்கள் நலன்கருதி பிரமாண நன்கொடை நிதியாக (CBG) பொது நூலங் கங்களுக்கு 3 லட்சம் ரூபா நிதி புனர மைப்புப் பணிகளுக்கும் புத்தகக் கொள் வனவுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளது.

தற்போது பச்சிலைப் பள்ளியில் புலோப் பளை பொது நூலகம் இயங்கி வருகின் றது. புதுக்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள மற்றைய பொது நூலகத்தின் கட்டடப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வெகுவிரைவில் இந்த நூலகமும் மக்களின் பாவனைக்கு விடப் படும். இவற்றுக்கு தேவையான புத்தகங் கள், பத்திரிகைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

நூலகங்களின் புனரமைப்புப் பணி களை பொதுமக்களும் உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து செயற்பட்டு வருவதாக விசேட ஆணை யாளரும் பிரதேச செயலருமான சி.சிவப்பிர காசம் தெரிவித்துள்ளார். (6-313-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் எதிர் நாடுகளைக் கைக்கொள்வதில்.....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்தின் கவனத்தை ஈர்ப்பதில் எங்களால் பெரிதாக வெற்றிகாண முடிந்ததா என்று பார்த்தால் அதில் பாரிய அளவிற்கு எம்மால் வெற்றியீட்டியிருக்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

அதேவேளை, ஈழத் தமிழரில் ஒரு சிறிய குழு கைகளில் சிலுவைகளையும், பைபிளில் அநீதிக்கு எதிராகக் கூறப் பட்டிருக்கின்ற சில வாக்கியங்களையும், பாதிக்கப்படுகின்றவர்களுக்கு உதவேண்டும் என்ற கிறிஸ்துவின் போதனைகள் அடங்கிய பதாதைகளையும், வன்னியில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், தேவாலயங்கள் போன்றனவற்றின் காட்சிகளைக் கொண்ட படங்களையும் சுமந்தபடி வீதிகளில் இறங்கியிருந்தால், மேற்குலகின் அத்தனை கவனமும் நிச்சயம் எம்மை நோக்கி ஈர்க்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

எங்களில் ஒரு தரப்பு அவ்வாறு செய்திருந்தால், எமது பிரச்சினையையும், எமக்கு நடந்த அநீதிகளையும் உலகம் பார்த்திருக்கும். எமக்கெதிரான அவலத்தைத் தடுக்க மேற்குலகம் நிச்சயம் முயன்றிருக்கும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் சுமார் 500 இற்கும் அதிகமான கிறிஸ்தவ சபைகள் ஈழத் தமிழர்களால் நடத்தப்படுகின்றன. இந்தச் சபைகளை நாம் எமது போராட்டத்தின் ஓர் அங்கமாக மாற்றவில்லை என்பது உண்மையிலேயே ஒரு பின்னடைவு என்றுதான் நான் கூறுவேன்.

போராட்டத்தின் அங்கமாக மாத்திரமல்ல போராட்டத்தின் எதிரிகளாகவும் கூட சில பொறுப்பாளர்களால் இந்தச் சபைகள் கையாளப்பட்ட சம்பவங்கள் ஏராளம் இருக்கின்றன. புலம் பெயர் தமிழ் தேசிய ஊடகமாக ஒரு காலத்தில் அடையாளப்படுத்தப்பட்ட ரி.ரி.என் தொலைக்காட்சி ஒரு கிறிஸ்தவ சபையின் விளம்பரத்தை ஒளிபரப்புவதற்கு மறுத்ததை அந்தச் சபையின் போதகர் ஒரு தடவை என்னிடம் கூறி மனவருத்தப்பட்டார்.

விடுதலைப் புலிகளால் சுவிஸில் வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகையில் கிறிஸ்தவ சபை ஒன்றின் முக்கிய நிகழ்ச்சி பற்றி வெளிவந்த விளம்பரம் தொடர்பான பிரச்சினை வன்னிவரை சென்றிருந்தது.

இப்படி கிறிஸ்தவ மத அமைப்புகளுக்கு எதிராக தேசியம் பேசிய எம்மில் சிலரால் மேற்கொள்ளப்பட்ட அசம்பாவிதங்கள் பற்றி பல முறைப்பாடுகள் இருக்கின்றன.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பொறுப்புக்களில் இருந்த சிலரது தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு, மத நம்பிக்கை காரணமாக இடம்பெற்ற இதுபோன்ற சம்பவங்கள், புலம்பெயர் நாடுகளில் இருந்த கிறிஸ்தவ மத அமைப்புக்களை போராட்டத்தில் இருந்து அந்நியப்படவைத்திருந்தது என்பதான ஒரு சுயவிமர்சனத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் செய்வது அவசியம் என்றே நான் நினைக்கின்றேன்.

இதேபோன்றுதான் இலங்கையில் தமிழ் பேசும் சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாக இருக்கும் இஸ்லாமிய சமூகத்தை எமது போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளாததையும் குறிப்பிட வேண்டும்.

தமிழ் மக்களைப் போலவே இலங்கையில் ஏராளமான அடக்குமுறைகளை எதிர்கொண்ட - எதிர்கொண்டு வருகின்ற ஒரு சமூகம்தான் இஸ்லாமிய சமூகம். ஈழத் தமிழருடைய போராட்டத்தில் இணைந்து போராட ஒரு சந்தர்ப்பத்தில் அந்த இஸ்லாமிய சமூகம் முன் வந்திருந்தது. ஈழ விடுதலைப் போராட்ட அமைப்புகளில் தம்மை இணைத்துக்கொண்டு தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட இஸ்லாமிய இளைஞர்கள் எத்தனையோ பேர்.

'தமிழீழத்தை அமிர்தலிங்கம் கைவிட்டாலும், நான் கைவிட மாட்டேன்'' என்று பிரகடனம் செய்தவர்தான் மறைந்த அஷ்ரப். ஆனால், வழமையான எமது பிறவிக் குணம், இஸ்லாமியர்களை வேறுபிரித்து எமது போராட்டத்தில் இருந்து அவர்களை அந்நியப்படுத்தி அவர்களை எமது போராட்டத்தின் எதிரிகளாக்கிவிடும் சிங்கள பேரினவாதத்தின் திட்டத்திற்கு துணைபோயிருந்தது.

1984ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் ஆசியப் பிராந்திய உதவிப் பணிப்பாளராக டேவிட் மட்னாத நியமிக்கப்பட்ட பொழுதும், 1984ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பொழுதும், இஸ்ரேலின் உள்நாட்டுப் பாதுகாப்பு நிறுவனமான ஷின் பெய்த் மற்றும் இஸ்ரேலிய புலனாய்வு நிறுவனமான மொசாட் என்பன இலங்கைப் படையினருக்கு உத்தியோகபூர்வமாகப் பயிற்சிகளை வழங்க ஆரம்பித்த பொழுதும், 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி, இஸ்ரேலின் நலன் காக்கும் பிரிவின் புதிய பொறுப்பாளராக அக்ரயில் கார்பி என்கின்ற கடும்போக்கு யூதர் நியமிக்கப்பட்ட பொழுதும், தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக கிழக்கில் இஸ்லாமிய வாலிபர்கள் கிழர்ந்தெழுந்தார்கள். பாரிய எதிர்ப்புக்களை வெளிக்காண்பித்தார்கள்: ஆனால் அந்த நேரத்தில் வடக்கு கிழக்கில் உள்ள ஈழத் தமிழர் போராட்ட அமைப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவு ஆதரவை இஸ்லாமிய மக்களுக்கு வழங்கி, அவர்களை அரவணைக்க முன்வரவில்லை.

1984ஆம் ஆண்டு ஆணி மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற ஐ.தே.கட்சி செயற்குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன, 'இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு தொடர்ந்து இலங்கையில் தங்கியிருக்கும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் தீர்மானத்தை ஆதரிக்க விரும்பாவிட்டால் தாராளமாக வெளியேறலாம்' என்று உறுதியாகத் தெரிவித்திருந்தார். அரசின் தீர்மானத்தை கண்டித்துப் பேசும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசை விட்டு மாத்திரமல்ல கட்சியை விட்டும் வெளியேற்றப் படுவார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இதனால் ஆத்திரமடைந்த இஸ்லாமிய தலைவர்கள் இந்தியாவை அணுகுவதற்கான முயற்சியை மேற்கொண்டார்கள். அதற்கு அவர்கள் தமிழ் அரசியல்வாதிகள் சிலரின் உதவியை நாடிய போதும், தமிழ் தலைவர்கள் அவர்களை அரவணைக்கவும், அவர்களுக்கு உதவவும் முன்வரவில்லை.

அதுமட்டுமல்ல ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு ஈழத் தமிழனும் வெட்கித் தலைகுனியவேண்டிய அளவிற்கான சில சம்பவங்களை, எம்மைப் போன்றே அடக்கப்படுகின்ற ஒரு சமூகத்திற்கு எதிராக யாழ்பாணத்திலும், காத்தான்குடியிலும் நாம் செய்திருந்தோம்.

எமது போராட்டப் பயணத்தில் இஸ்லாமிய படகிலும் பயணிக்கும் சந்தர்ப்பத்தை நாம் இழந்துவிட்டிருந்தோம்.

பல தளங்களில் எமது போராட்டம் சமாந்தரமாகப் பயணிக்கவில்லை என்பதை உணர்த்தும் நோக்கோடு நாம் மேலே பார்த்திருந்த விடயங்கள் வெறும் உதாரணங்கள் மாத்திரம்தான். பல தளங்களை எமது போராட்டத்திற்குச் சாதகமாக மாற்றிக்கொள்வதென்பதுதான் தொடர்ந்து நாம் எமது விடுதலை நோக்கிய பயணத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

நாங்கள் எதோ செய்து அமெரிக்காவை எமது விடுதலைக்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஐரோப்பாவை எமது முக்கிய தளமாகத் தொடர்ந்தும் பேண வேண்டும். இந்தியாவிடம் இருந்து எத்தனை தூரம் எமக்கு உதவிகளைப் பெற முடியுமோ அத்தனை தூரம் பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்குப் பல வழிகள் இருக்கின்றன.

எதிர் எதிர் துருவங்களில் இருக்கும் சக்திகளைச் சமாளித்து அவர்களிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முதலாவது வழி, எங்களுக்கு இடையே காணப்படுகின்ற பிளவுகளைப், பிரிவுகளைக் கூட எப்படி எமது இனத்தின் நன்மைக்காகப் பயன்படுத்துவது என்று நாம் யோசிக்கவேண்டும். நாங்கள் பிரிந்து நின்றாவது எமது இனத்தின் விடுதலைக்காகப் பயணம் செய்யவேண்டும்.

நாடுகடந்த தமிழீழ அரசு சர்வதேச இராஜதந்திரத்தைக் கையாண்டால், மக்களவை புலம் பெயர் ஆதரவுத் தளத்தை தக்கவைக்கும் நகர்வினை எடுக்கலாம்.

பிரித்தானிய தமிழர் பேரவை பிரித்தானிய அரசைக் கையாண்டால், கனேடிய தமிழ் காங்கிரஸ் கனேடிய அரசைக் கையாளலாம்.

குளோபல் தமிழ் போரம் மேற்குலகைக் கையாண்டால், எம்மிடையேயுள்ள இடதுசாரிகள் ஒன்றிணைந்து கிழக்கு உலகைக் கையாளமுனைய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் காலில் விழுந்து கிடக்கின்றது என்று நாம் குறைகூறுவதை விட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக இந்தியாவை நாம் எப்படிக் கையாளலாம் எப்பது பற்றி யோசிக்கவேண்டும்.

அதேபோன்று, வெவ்வேறு நாட்டு அரசியலில் காணப்படுகின்ற முரண்பாடுகளைக் கூட எமக்குச் சாதகமாக்கிக் கொள்வது எப்படி என்று நாம் சிந்திக்கவேண்டும்.

எமது விடுதலையின் பாதையில் பயணம் செய்கின்ற பொழுது, வியூகம் அமைத்து இராஜதந்திரத்துடன் பயணிக்கின்ற பொழுது, எமது இனத்தில் உள்ள நல்ல கெட்ட அத்தனை அம்சங்களையும் நாம் எவ்வாறு எமது இனத்தின் விடுதலைக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று யோசித்து, கையாண்டு பயணிக்கின்ற பொழுது,- விடுதலை என்கின்ற விடயம் எங்களால் பெறமுடியாத ஒரு விடயம் இல்லை என்பதுதான் உண்மை. ****


CANADA
Work Permit
பெறுவதற்கான ஆலோசனைகள்

- வயதெல்லை – upto 40 years
- ஆங்கில அறிவு சராளமாக இருத்தல் வேண்டும்.
- அங்கிகரிக்கப்பட்ட Diploma / Degree உடையவர்களுக்கு முன்னுரிமை
- குறைந்த பட்சம் ஒரு வருட வேலை அனுபவம் தேவை.

SIC Center, 734, Hospital Road, Jaffna.
Tel : 077-900 4194

இன்னும் 3 நாட்களே உள்ளன விரையுங்கள் !
Mega
கொம்ப்யூட்டர் கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை
12.09.2010 (ஞாயிறு)
இலவச அனுமதிகள் அருகிலுள்ள கிளைகளில்
CSC-ASIAN COMPUTER EDUCATION



මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

07.09.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2289

வெற்றி எழுத்து Z  வெற்றி எண்கள் 9 7 1 0 1 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Z | 9 | 7 | 1 | 0 | 1 | 9 | ரூபா.24,708,642/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | | 9 | 7 | 1 | 0 | 1 | 9 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 7 | 1 | 0 | 1 | 9 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 1 | 0 | 1 | 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 123 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 1 | 9 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1349 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 9 | ரூபா. 100/= | பரிசுகள் 13517 |
| 6 பரிசுகள் | | | | | | | 9 | ரூபா. 20/= | பரிசுகள் 133380 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 9 | 7 | 1 | 0 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 17 |
| 8 பரிசுகள் | | 9 | 7 | 1 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 144 |
| 9 பரிசுகள் | | 9 | 7 | 1 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1384 |
| 10 பரிசுகள் | | 9 | 7 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13345 |
| 11 பரிசுகள் | Z | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 53387 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 36,994,332.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 10,000,000.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி. கொழும்பு 03.


## மரண அறிவித்தல்



### சுப்பையா சுந்தரம்பிள்ளை

புங்குடுதீவு கிழக்கு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 12ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சுந்தரம்பிள்ளை 06.09.2010 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- இளையபிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-தனபாக்கியலெட்சுமி தம்பதியரின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கனகசிங்கம், அருட்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசாவின் அன்புத் தம்பியும் ரஞ்சினிதேவி, சுசிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு.அருட்செல்வம் (மகன்).

12ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு.

(103103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அணிகள் கரப்பந்தாட்டம் 18 ஆம் திகதி குருநாகலில் ஆரம்பம்

## வடமாகாணத்திலிருந்து 18 அணிகள்

வலி.வடக்கு,செப்.9

அகில இலங்கைப் பாடசாலை அணிகளின் ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை குருநாகல் மாளிகபிட்டிய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாகாணமட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15,17,19 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் இப்போட்டியில் ஆண்கள் பிரிவுகளில் ஆயிரத்து 35 வீரர்களும், பெண்கள் பிரிவுகளில் ஆயிரத்து 35 வீராங்கனைகளுமாக சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள், வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர்.

இப்போட்டிக்கு வடமாகாணத்திலிருந்து 18 அணிகள் கலந்துகொள்கின்றன.

வடமாகாணத்தின் சார்பில் ஆண்களுக்கான 15 வயதுப் பிரிவில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியனவும்,

17 வயதுப்பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம், வவுனியா கிடாய்சூரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியனவும்,

19 வயதுப் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, மன்னார் அல்மினா மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியனவும் கலந்துகொள்ளவுள்ளன.

பெண்களுக்கான போட்டியில் 15 வயதுப் பிரிவில் வடமராட்சி பெண்கள் உயர்தரப் பாடசாலை, வவுனியா கிடாய்சூரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் ஆகியனவும்,

17வயதுப் பிரிவில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியனவும்,

19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியனவும் கலந்துகொள்ளவுள்ளன. (த-86)

## சனத் ஜெயசூரிய நாளை யாழ்.வருவார்



யாழ்ப்பாணம், செப் 9

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல கிரிக்கெட் வீரருமான சனத்ஜெயசூரிய நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகிறார்.

இவர் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள படையினர்-பொதுமக்கள் நல்லுறவுக்கான 'ருவெ ன்ரி-20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-23)

## ஹொக்கிப் போட்டி நாளை ஆரம்பம்

வலி.வடக்கு, செப் 9

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அமரர் ரி. ஆனந்தரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஆண்கள், பெண்கள் ஹொக்கி அணிகளுக்கு இடையே இரண்டாவது ஆண்டாக நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டிகள் நாளை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஹொக்கி மைதானத்தில் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. (த-86)

# படையினர்-பொதுமக்கள் 'ருவென்ரி-20' விமானப் படையை எதிர்த்து ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகமும் யாழ்.துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் படையினர்- பொதுமக்கள் நல்லூறவு வெற்றிக்கிண்ணத்துக்கான 'ருவென்ரி- 20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பலாலி விமாப் படை அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



விமானப் படை



ஜொனியன்ஸ் வி.க

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி பிரிகேடியர் பிறாங்கிளின் றொட்றிக்கோ கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி வீரருமான சனத்ஜெயசூரிய கலந்துகொள்வார். (த-23)

## பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் நாளை மறுதினம் அங்குரார்ப்பணம்

வலி.வடக்கு,செப்.9

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அமைக்கப்படவுள்ளது.

பாடசாலைகளுக்கான ஹொக்கிச் சங்கம் யாழ். மாவட்டத்தில் நீண்டகாலமாக அமைக்கப்படாமல் இருந்தமை பெரும் குறைபாடாகக் காணப்பட்டது.

தற்போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனின் முயற்சியினால் இச்சங்கம் உருவாக்கப்படுகின்றமை பாடசாலைகள் மட்டத்திலும், ஹொக்கி ஆர்வலர்கள் மட்டத்திலும்வரவேற்புக்குரியதாக அமைந்துள்ளது.

ஹொக்கி விளையாட்டில் ஆர்வம் உடைய அனைத்துப் பாடசாலைகளினதும் பிரதி நிதிகளையும் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வீராங்கனைகளுக்கு இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.9

மாகாண மட்டத்தில் விளையாட்டுத் துறையில் சாதனை நிகழ்த்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை விளையாட்டு வீராங்கனைகளைப் பாராட்டி கௌரவிக்கும் விழா இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் கனடா பழைய மாணவிகள் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இவ்விழாவிலே யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த)

# சிநேக பூர்வப் போட்டிகளுக்காக என்.சி.சி அணி யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம்,செப்.9

என்.சி.சி. கிரிக்கெட் பாடசாலையின் 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி சிநேக பூர்வ ஆட்டத்தில் பங்குகொள்வதற்காக இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றது.

யாழ்ப்பாணம் வரும் என்.சி.சி.அணி நாளை வெள்ளிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியுடனும் நாளை மறுதினம் சனிக்கிழமை சென்.பற்றிக் கல்லூரி அணியுடனும், 13 ஆம் திகதி திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியுடனும், 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி அணியுடனும் சிநேகபூர்வப் போட்டிகளில் பங்கு கொள்ளும். (த-23)

# உலக அஞ்சல் தினக் கிண்ணத்தை வடமாகாண அணி கைப்பற்றியது

யாழ்ப்பாணம்,செப்.9


உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று புதன்கிழமை அனுராதபுரம் மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வடமாகாண அணி சம்பியனானது.

இதில் வடமாகாண உதைபந்தாட்ட அணியை எதிர்த்து மத்திய மாகாண உதைபந்தாட்ட அணி மோதியது. இதில் வடமாகாண அணி வீரன் ஜெயதீசன் தனது அணிக்காக ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் வடமாகாண உதைபந்தாட்ட அணி தன்னை எதிர்த்து விளையாடிய மத்திய மாகாண உதைபந்தாட்ட அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,செப்.9

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையிலான லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் 'பி' அணியை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)



யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினால் நடத்தப்பட்ட ஆண்களுக்கான ஒரு நாள் மின்னல் வேக் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக [illegible] விளையாட்டுக்கழக அணி மோதுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப் பாரிய சர்வதேச நிதியின் சக்தி

நிலையான வைப்புகளுக்கு வருடத்திற்கு +11.25% (வ.மொ.வ.வீ.)

அதிகூடிய வட்டி

12 மாதங்கள் நிறைவான வட்டி (வ.மொ.வ.வீ. 11.25%)

ஒறிக்ஸ் குறூப் ஒப் கம்பனி ஆனது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒறிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்

LOLC குறூப் கம்பனி

100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை. ராஜகிரிய.

LOLC

அபிவிருத்திப் பாதையின் முன்னோடி

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட் ஆனது 1988, 78ஆம் இலக்க நிதிக் கம்பனி சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பதிவு செய்யப்பட்ட பிச் ரேட்டிங் லங்கா கம்பனியிடம் A-(lka) தரத்தைப் பெற்றுள்ளது. இணைக்கப்பட்ட திகதி டிசெம்பர் 13, 2001.

அவசர அழைப்பு :

077 2317575

077 2370992



# தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை

1993ஆம் ஆண்டு தொடக்கம் தகவல் தொழில்நுட்பக் கல்விச் சேவையில் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் முன்னணி வகித்துவரும் ASIAN COMPUTERS நாடு முழுவதிமுள்ள கிளைகளின் ஊடாக சமகால நவீன கொம்ப்யூட்டர் பயிற்சிகள் அனைத்தையும் 16 ஆண்டு காலமாக மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியாவை தலைமையகமாகவும் தென்மாவட்டங்களில் 500 பயிற்சி மையங்களைக் கொண்டு இயங்கும் மிகப்பெரிய நிறுவனமான CSC கொம்பி யூட்டர் எடியூகேஷன் உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்து சர்வதேச தரம்மிக்க மற்றும் அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழ்களையும் ASIAN வழங்கி வருகிறது. அத்துடன் CSC,SOFTVIEW மல்டிமீடியா பயிற்சி நிலையத்துடன் இணைந்து அனிமேஷன் பாடத்திட்டத்தையும் இலங்கை மாணவர்களுக்கு அளிக்கிறது. இவ்வகையில் ஒவ்வொரு ஆண்டும் இலங்கையைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் குறிப்பாக சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளின் பின் MEGA SAT - SCHOLARSHIP APTITUDE TEST எனும் கணனிப் படிப்புகளுக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தி மாணவர்கள் சமூகத்தில் பொருளாதார ரீதியில் எந்தநிலையில் இருந்தாலும் கொம்ப் யூட்டர் கல்வியைத் தொடர இச்சிறப்பான வாய்ப்பை CSC - ASIAN கல்வி நிறுவகம் அளிக்கிறது.

**மெகா இலவச பரீட்சைகள்**

ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே நடைபெறும் இவ் இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவ மாணவியர் பங்குபற்றி முறையே 40% 50% 60% மற்றும் 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பைப் பெறமுடியும். 50 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும் இப் பரீட்சையை தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய விரும்பிய மொழிகளில் எழுதலாம். பொது அறிவு, நுண்ணறிவு மற்றும் G.C.E. (O/L) பாடத்திட்டத்திற்கமைவாக 50 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இப்பரீட்சையை எழுதுவதற்கான அடிப்படைத் தகைமை க.பொ.த. சாதாரண தரம் மட்டுமே. இப்புலமைப் பரிசில்களுக்கான பாடநெறிகள் அனைத்தும் ICM U.K, IMIS U.K., CSC India, Softview India, Tally India, ICDL, U.K. கல்வி நிலையங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றவை. இப்புலமைப் பரிசில் பெறும் மாணவர் ஒருவர் தனக்குரிய பாடநெறிக் கட்டணக் கழிவுடன் உள்நாட்டு, வெளிநாட்டு, உயர் கல்வி, தொழில்வாய்ப்பு மற்றும் சுயதொழில் வாய்ப் புக்களைப் பெற்றுத்தரும் கீழ்க்கண்ட பாடநெறிகளை விரும்பிய துறைகளில் தேவைக்கேற்ப தெரிவு செய்யலாம். அத்துடன் அனைத்து பாடப் பிரிவுகளும் APPLICATION, PROGRAMMING, WEB DEVELOPMENT, MULTI MEDIA என பிரதான நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**பாடநெறிகள்**

Office Automation, Digital Pre - Press, Web Programming, Digital Video Production, Graphic Design, Tally Accounting, 2D & 3D Animation, MayaAnimation, Hardware & Networking, Adobe Application, Web Animation, Master Diploma in Multimedia, Advance Java Animation

உதாரணமாக இப்பரீட்சையில் அதிகூடிய 75% ஸ்கொலர்சிப் பெறும் மாணவர் ஒருவர் 25%த்தை மட்டுமே கட்டணமாகச் செலுத்த வேண்டும். பாடநெறிக்கான கட்டணம் 25%மாகக் குறைக்கப்பட்ட போது இலவச பாடநூல்களோ, பாடவிதானங்களோ (Syllabus), கொடுக்கப்படும் பயிற்சி நேரங்களோ (Practicals) எவ்விதத்திலும் குறைக்கப்படுவதில்லை. ஏற்கனவே படித்துச் சான்றிதழ் பெற்ற பல்லாயிரக் கணக்கான மாணவ, மாணவியரே இதற்கு சான்றாக உள்ளனர். அது மட்டுமல்லாமல் இம்முறை மெகா SAT பரீட்சையில் பங்கு பற்றும் மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையிலும் சேவை நோக்கத்தைக் கருதியும் "DDP துறையில் வேலைவாய்ப்புப் பெற மற்றும் உங்கள் சந்தேகங்களை நீக்கும் வழி காட்டி", "டெலி கணக்கியல் மென்பொருள் குறித்த கேள்வி பதில்", "A/L இன் பின்னர் என்ன படிக்கலாம்", "அனிமேஷன் பற்றிய கேள்வி பதில்" மற்றும் WHAT NEXT, போன்ற கையேடுகளை இலவசமாக வழங்கும் CSC ASIAN முன்வந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் பாடசாலை நூலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் கணனிக்கல்வி ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் "மல்டிமீடியா" மற்றும் "கொம்ப்யூட்டர்" என இரு பத்திரிகை வடிவிலான ஆக்கங்களை இம்முறை சிஎஸ்சி - ஏசியன் வெளியிடுகின்றது. இக்கால இளைஞர் யுவதிகள் உள்நாடு, வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புகளை எதிர்பார்த்திருப்பதாலும், சுயதொழில் வாய்ப்புக்களைத் தேடி நிற்பதாலும் அவற்றுக்குப் பலம் சேர்க்கும் வகையில் எமது பாடநெறிகள் அமைந்துள்ளது சிறப்பம்சமாகும். ஏசியன் கல்வி நிலையம் 1994ஆம் ஆண்டு தொடக்கம் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். அத்துடன் சிஎஸ்சி மற்றும் Softview நிறுவனம் தனித்தனியாக சர்வதேச தர நிர்ணயங்களுக்கமைய ISO 9001 : 2000 சிறப்பு அங்கீகாரச் சான்றிதழ் பெற்றவை.

CSC-ASIAN COMPUTER EDUCATION

**இலவச அனுமதிகள்**

2010இல் A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT கல்வியில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் இப்பரீட்சையில் பங்குபற்றலாம். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இவ் இலவச பரீட்சைக்கான அனுமதிகளை கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மட்டக்குளி, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம், வவுனியா, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி, வாழைச்சேனை, பண்டாரவளை, மாத்தளை CSE - ASIAN கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வகையில் படித்தவர்களுக்கும் பொருளாதார வசதிபடைத்தவர்களுக்கும் மட்டுமே கணனிக்கல்வி என்ற மாயையை புலமைப் பரிசில் திட்டத்தி னூடாக உடைத்தெறிந்த பெருமை ASIAN CSCயைச் சாரும். அத்துடன் ஸ்கொலர்ஷிப் மூலம் சேர்ந்து படிப்பது உங்கள் கல்விக்கான பெற்றோர்களின் செலவைக் குறைப்பதாகும்.

விளம்பர வரணம்


# மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெறாமல் அரசமைப்புத் திருத்தத்தை சட்டமாக்க முடியாது

## சபையில் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, செப்.9

மாகாண சபையின் அங்கீகாரங்களைப் பெறாது அரசமைப்புத் திருத்தங்களை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அவற்றைச் சட்டமாக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. தி. சுமந்திரன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

அரசமைப்புத் திருத்த யோசனைகள் நேற்று முன்தினம் அரசால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி எம்.பி. சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்பின் 18 ஆவது திருத்த யோசனைகள் இப்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியாது. அந்த திருத்த யோசனைகள் முதலில் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் மாகாண சபைகளுக்குச் சமர்ப்பிக் கப்பட்டு மாகாண சபை உறுப்பினர்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும்.

இவ்வாறு செய்யப்படும்வரை திருத்த யோசனைகளை நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்க முடியாது. தனி சட்டமாக்கப்பட்டாலும் அது சட்டமாகாது - என்றார். எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இதே விடயத்தைக் கூறினார். ஆனால், உயர் நீதிமன்றம் இதுதொடர்பான தெளிவான தீர்ப்பொன்றை வழங்கியுள்ளதால் மாகாண சபைகள் அங்கீகாரம் தேவையில்லை என்று சபாநாயகர் கூறினார்.

இந்தத் திருத்த யோசனைகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்திருந்தால் ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றம் சென்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது இங்கு வந்து குறை கூறுவதில் அர்த்தமில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

நீதிமன்ற உத்தரவு எப்படி இருப்பினும் நாம் நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் படியே செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. தயாசிறி ஜயசேகர கூறினார். (சி)




# யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில்

## மணவாளக் கோலவிழா

*10.09.2010 (வெள்ளிக்கிழமை)*

காலை 9 மணிக்கு சங்காபிஷேகம்

மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து திருவூஞ்சலும் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு பூந்தண்டிகையில் எம்பெருமானின் வெளிவீதி உலாவும் இடம்பெறும்.

## விநாயகர் சதுர்த்தி விழா

11.09.2010 (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் மாலை 5 மணிக்கு எம்பெருமானுக்கு வசந்த மண்டப பூசையும், அடியார்களால் நடத்தப்படும் சக்தி கணபதி பூசையும் ஆரம்பமாகும். மாலை 6 மணிக்கு எம்பெருமானின் வெளிவீதி உலாவும் இடம்பெறும்.

குறிப்பு: சக்தி கணபதி பூசை செய்ய விரும்புவோர் அலுவலகத்தில் ரூ150/= செலுத்தி பதிவுகளை மேற்கொள்வதோடு பூசைக்கான விவரங்களையும் அறிந்து கொள்ளலாம்.

ஆலய நிர்வாகம்.

(சி/570758)



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1223 நீலம்

தனுசு 21 41 42 53 07-09-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 4,007,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 230,952 | 20/- | 4,619,040/- |
| 2 இலக்கங்கள் | 21,303 | 40/- | 852,120/- |
| 1 இல. + லக்கினம் | 21,135 | 60/- | 1,268,100/- |
| 2 இல. + லக்கினம் | 1,885 | 200/- | 377,000/- |
| 3 இலக்கங்கள் | 571 | 1000/- | 571,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,007,050/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,797,260/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 614 | | 605,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 276,514 | | 9,402,760/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,039,600/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் 12 26 34 50

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 611 | 500/- | 305,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 614 | | 605,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.300,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பகுதிகளில் சிங்களக்குடியேற்றத்தை இந்திய அரசு உடன் தடுத்து நிறுத்த வேண்டும்

## திருமாவளவன் எம்.பி. வலியுறுத்து



கோவை,செப்ரெம்பர்9

இலங்கை அரசு, தமிழர் பகுதிகளில் இராணுவத்தினரின் குடும்பங்களைக் குடியமர்த்துவதாகக் கூறி சிங்களவர்களை குடியமர்த்துகின்றது. இந்திய அரசு இதைத் தடுக்க வேண்டும்.

இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவின் இலங்கைப் பயணம் எவ் வித பயனும் அளிக்கவில்லை. தமிழர்கள் மீதான இலங்கை அரசின் அடக்கு முறை தொடர்கிறது. அங்கு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 11 ஆயிரம் தமிழ் இளைஞர்களின் கதி என்ன ஆனது எனத் தெரியவில்லை.

- இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

கோவையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அக்கட்சியின் மண்டலச் சிறப்புச் செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்ற அவர், செய்தியாளர்களிடம் பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

அண்ணா பிறந்த நாளையொட்டி, சிறைகளில் 7 முதல் 10 ஆண்டுகள் வரை கழித்த கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த ஏராளமானோர் சிறையில் பல ஆண்டுகளாக உள்ளனர். அவர்களை விடுதலை செய்யக் கோரி துணை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் மனு அளித்துள்ளேன்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணி வலுவாக உள்ளது. வரும் பேரவைத் தேர்தலில் தனிப் பெரும்பான்மை பெற்று தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்கும். பா.ம.க. உள்ளிட்ட தோழமைக் கட்சிகளை இக் கூட்டணிக்கு அழைக்க முயற்சி எடுத்து வருகிறோம். விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தைப் பெறும் வகையில் இரட்டை எண்ணிக்கையிலான இடங்களைக் கேட்டுப் பெறுவோம்.

மூன்றாவது அணி அமைந்தால் பாமக தலைமையேற்க விரும்புகிறது எனக் கூறுவது அக்கட்சியின் காலம் கடந்த முயற்சி. அதற்கான வாய்ப்பை பா.ம.க. கை நழுவ விட்டுவிட்டது.

மற்றவர்கள் தன்னைக் கவனிக்க வேண்டும் என்பதற்காக தி.மு.க. மீது ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார். காங்கிரஸாரே அவரது விமர்சனங்களைப் பொருட்படுத்தவில்லை.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்தியச் செய்திகள்

# ஈழத்தமிழர் நலனுக்கு நடவடிக்கை: நிருபமாராவிடம் வலியுறுத்தினேன்

## கருணாநிதி நேற்றுத் தெரிவிப்பு



திருச்சி,செப்.9

ஈழத்தமிழர் நலனுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இலங்கை செல்வதற்கு முன்பு என்னைச் சந்தித்த நிருபமா ராவிடம் வலியுறுத்தினேன். இலங்கை சென்றுவந்த பின்னர் அவர் என்னை இன்னும் சந்திக்கவில்லை.

- இவ்வாறு தமிழக முதல்வர் கருணாநிதி நேற்று திருச்சியில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி பலமாக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை திருச்சி சென்ற கருணாநிதிக்கு ரயில் நிலையத்தில் தி.மு.க. தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அங்கு காலை 10 மணிக்கு புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்தை திறந்துவைத்தார். மேலும் மாநகராட்சியின் குடிநீர் விரிவாக்க திட்டத்தைத் தொடக்கிவைத்து பல்வேறு நலத்திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.

முன்னதாக அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி பலமாக, நட்புறவுடன் இருக்கிறது. தேர்தலுக்கான கூட்டணியை விரிவுபடுத்துவது குறித்து தேர்தல் நேரத்தில் முடிவு செய்யப்படும். 2011 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலிலும் தி.மு.க. வெற்றி பெறுவது உறுதி. கோவை பொதுக்கூட்டத்தில் மக்கள் விரும்பும் கூட்டணி அமையும் என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் ஜெயலலிதா கூறியிருப்பது ஒருவேளை பத்திரிகையாளர்கள் விரும்பும் கூட்டணியாக இருக்கலாம். - என்றார்.

# நடிகர் முரளி மாரடைப்பால் மரணம்; அதிர்ச்சியில் உறைந்தது திரையுலகு



சென்னை,செப்.9

பிரபல நடிகர் முரளி (வயது-46) சென்னையில் நேற்றுக்காலை மாரடைப்பால் காலமானார்.

நடிகர் முரளிக்கு நேற்றுமுன்தினம் நெஞ்சுவலி ஏற்பட்டதால், உடனடியாக அவர் சென்னை தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றுக்காலையில் சிகிச்சை பலனின்றி அவருடைய உயிர் பிரிந்தது.

இதையடுத்து அவரது பூதவுடல் சென்னை வளசரவாக்கத்தில் உள்ள அவரது வீட்டுக்கு கொண்டுவரப்பட்டது. அங்கு பொதுமக்கள் அஞ்சலிக்காக முரளியின் பூதவுடல் வைக்கப்பட்டுள்ளது. முரளியின் மரணச் செய்தியறிந்த தென்னிந்திய சினிமா பிரபலங்கள் பலரும் முரளியின் வீட்டுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

முரளியின் இறுதிச்சடங்கு இன்று காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

தமிழ்த் திரையுலகில் 1984இல் 'பூவிலங்கு' படத்தின் மூலம் அறிமுகமானார். 'புதுவசந்தம்', 'இதயம்' ஆகிய படங்கள் அவருக்கு ரசிகர்களிடையே நல்ல பெயரைப் பெற்றுத் தந்தன.

இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் அவர் தன்னுடைய 100 ஆவது படத்துக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவாஜி, விஜயகாந்த், பிரபு, சத்யராஜ், பிரபுதேவா, சூர்யா, பார்த்தீபன், சரத்குமார் உள்ளிட்ட பல நடிகர்களுடன் முரளி இணைந்து நடித்துள்ளார்.

நடிகர் முரளி பிரபல கன்னட பட தயாரிப்பாளர் சித்தலிங்கையாவின் மகன் ஆவார். முரளியின் தந்தை கன்னடர் என்றாலும் அவரது தாய் ஒரு தமிழ்ப்பெண். பெங்களூரில் பிறந்த இவர், சினிமாத் துறைக்கு வந்த பின்னர் தமிழ்நாட்டிலேயே இருந்தார். தமிழ் தவிர பிற மொழிப் படங்களில் நடிக்காதவர் என்ற பெருமையும் முரளியையே சேரும்.

நடிகர் முரளி கடைசியாக நடித்த படம் 'பானா காத்தாடி'. முரளியின் மகன் அதர்வா நாயகனாக அறிமுகமான இந்தப் படத்தையும் முரளியை அறிமுகப்படுத்திய சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தான் தயாரித்தது.

தான் நடித்த பெரும்பாலான படங்களில் கல்லூரி மாணவராக நடித்த முரளி, கடைசியாக நடித்த 'பானா காத்தாடி'யிலும் எம்.பி.பி.எஸ். நான்காம் ஆண்டு மாணவராக நடித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

மகன் நடித்த முதல் படமே முரளிக்கு கடைசி படமாக அமைந்து விட்டது திரையுலகில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

# வேலூர் சிறையில் சீமானுடன் வைகோ, நெடுமாறன் சந்திப்பு



சென்னை,செப்.9

வேலூர் சிறையிலுள்ள சீமானை நேற்றுமுன்தினம் மாலை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்து குரல் கொடுத்ததால் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் எனக் கூறி தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சீமான் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரை நேற்றுமுன்தினம் மாலை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத் தலை வர் பழ. நெடுமாறன் ஆகியோர் சந்தித்துப் பேசிவிட்டு வெளியே வந்தனர்.

அப்போது அங்கிருந்த செய்தியாளர்களிடம் வைகோ, பழ நெடுமாறன் ஆகியோர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததால் இயக்குநர் சீமான் மீது அடக்குமுறை ஏவப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்துள்ளனர். இயக்குநர் சீமான் பேசியதில் எந்தத் தவறும் இல்லை. எனவே, இயக்குநர் சீமானை தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

- இப்படிக் கூறினர்.

# சப்பாத்து அணிந்த மாணவர்கள் ராகுலை சந்திக்க அனுமதி மறுப்பு

## செருப்பு வீச்சுக் கலாசாரம் அதிகரித்து வருவதால்



அகோலா,செப்.9

மராட்டிய மாநிலத்தில் கல்லூரி ஒன்றில் செருப்பு அணிந்த மாணவர்கள், ராகுல் காந்தியுடன் உரையாட அனுமதி மறுக்கப்பட்டது. அவர்கள் முக்கிய நுழைவாயிலிலேயே திருப்பி அனுப்பப்பட்டனர்.

2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், ஈராக்கில் அப்போதைய அமெரிக்க ஜனா திபதி புஷ் மீது பத்திரிகையாளர் ஒருவர் சப்பாத்தைக் கழற்றி வீசி எறிந்தார். அதிலிருந்து, முக்கிய தலைவர்கள் மீது சப்பாத்து வீசும் கலாசாரம் தொடர்கதையாகி வருகிறது. சீன பிரதமர் வென் ஜியாபோ, பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், காஷ்மீர் மாநில முதல்வர் உமர் அப்துல்லா ஆகி யோர் சப்பாத்து வீச்சுக்கு இலக்காகி உள்ள னர்.

இந்நிலையில், காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி எம்.பி. ஒரு நாள் பயணமாக நேற்றுமுன்தினம் மராட்டிய மாநிலத்துக்குச் சென்றார். அகோலாவில் உள்ள ஒரு கல்லூரியில் அவர் மாணவர்களுடன் உரையாடும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகி இருந்தது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் மாணவர்கள் யாராவது, ராகுல் காந்தி மீது சப்பாத்து வீசிவிடக் கூடாது என்பதற்காக, மாணவர்கள் சப்பாத்தோ, செருப்போ அணிந்து செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. உரையாடல் நிகழ்ச்சி, கல்லூரிக் கட்டடத்தில் நடந்த போதிலும், முக்கிய நுழைவாயிலிலேயே பாதுகாவ்லர்களும், அதிகாரிகளும் நின்று கொண்டு மாணவர்களின் செருப்புகளையும், இடுப்புப் பட்டிகளையும் கழற்றச் செய்து, வாங்கி வைத்துக் கொண்டனர். செருப்புகளைக் கழற்ற விரும்பாத மாணவர்களை அவர்கள் திருப்பி அனுப்பினர்.

பின்னர், நீண்ட நேரம் கழித்து, செருப்புகளுடன் செல்ல அனுமதி வழங்க முடிவு செய்தனர். ஆனால் அதற்குள் பல மாணவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்கட்டியில் திருமண விழா நடத்திய சீன ஒலிம்பிக் வீரர்கள்

பீஜிங், செப். 09



ஓய்வுபெற்ற ஒலிம்பிக் வீரரான டியோ சென் கியூவும், சாகொங்போவும் தமது திருமணத்தை பனிக்கட்டியில் கொண்டாட வேண்டும் என்ற நீண்டகால அவாவை சீனாவின் தலை நகரான பீஜிங்கில் நிறைவேற்றினர்.

திருமண விழாவுக்கு சர்வதேச பனி சறுக்கும் பிரபல வீரர்கள் உட்பட 20 ஆயிரம் பேர் சமுகமளித்திருந்தனர். இவர்கள் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றவர்கள்.

18 வருட காதலால் இருவரும் இணைக்கப்பட்டிருந்தனர். திருமணத்துக்கு வந்தவர்களையும் இவர்கள் பனிக்கட்டிகளில் விளையாடி மகிழ்வித்தனர். இவ்வைபவத்தில் அமெரிக்கா, சுவிஸ், ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரசித்திபெற்ற பல வீரர்களும் பங்குகொண்டனர். (ஒ-சி)

# மெக்ஸிக்கோவில் சூறாவளி; 48 பேர் பரிதாப உயிரிழப்பு

அக்ஸாகா (மெக்ஸிக்கோ), செப். 09

மெக்ஸிக்கோவின் தெற்குப் பகுதியில் உள்ள குயேடிமாலா பகுதியில் வீசிய கடும் சூறாவளி புயல் மற்றும் வெள்ளத்தில் சிக்கி 48 பேர் உயிரிழந்தனர்.

கடும் வெள்ளம் காரணமாக 5 இலட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர் என்று பொலிஸ்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ள சீற்றத்தோடு ஆங்காங்கே மண் சரிவும் ஏற்பட்டதால் பாதிப்பு கடுமையாகியுள்ளது. வெள்ள பாதிப்பில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 45 ஆக இருந்தது. மேலும் மூன்று பேரை வெள்ள நீர் அடித்துச் சென்றதால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்துள்ளது. (ஒ-சி)

## துயர் பகிர்வு!

எமது கல்லூரியின் ஆசிரியர் A.M.C. மகேந்திரன்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி திரேசம்மா அலோசியஸ்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய வட்டம்,**
**யாழ்.மத்திய கல்லூரி.**

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் கிருஷ்ணராசா

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கிருஷ்ணராசா நேற்று (08.09.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சந்திரவதனாவின் பாசமிகு கணவரும் விமலேந்திரன் (லண்டன்), ரவீந்திரன், கஜேந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிவநிமலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நிசாந்தினி (லண்டன்), கஜீனா ஆகியோரின் மாமனும், ஜெயவதனா (லண்டன்), சச்சின் (லண்டன்), பிரியதர்சினி (லண்டன்), கஜீதரன், பிரவினா ஆகியோரின் பாசமிகு பேரனும் றோசம்மா, தெய்வேந்திரன் (ஜேர்மனி), சுப்பிரமணியம், ஜெயா (கனடா), பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மகுலசிங்கத்தின் (மாத்தயா) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (09.09.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைக்காக அச்சுவேலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
தர்மகுலசிங்கம்
*(மாத்தயா - மைத்துனர்)*

### திருமதி கந்தசாமி நாகமுத்து ஆச்சி

அல்வாய் வடக்கு, ஆழ்வார் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நாகமுத்து ஆச்சி நேற்று (08.09.2010) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர்-பசுபதி தம்பதியரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற இளையதம்பி கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், கிருஸ்ணபிள்ளை, மு.செல்லப்பாக்கியம் (அதிபர்) ஆகியோரின் சகோதரியும், சிவயோகநாதன், கமலநாதன், ஆகியோரின் அன்புத் தாயும், பத்மா, பரமேஸ்வரி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் துன்னாலை மத்தி, 'செல்லமஹால்', கரவெட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செல்லமஹால்'*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்:
க.சிவயோகநாதன்
*(மகன்).*

# தமிழ் மக்கள் மீதான இரத்தம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சியின் மூலம் விடுதலை செய்து, நவீனத்தைக் கட்டியெழுப்பிய மேலான தலைவராகிய மாஓசேதுங்கின் மேற்கோள் ஒன்றுடன் எனது உரையை இங்கே ஆரம்பிப்பது பொருத்தமானது என நான் நம்புகிறேன்.

அரசியல் என்பது இரத்தம் சித்தாத யுத்தம்
யுத்தம் என்பது இரத்தம் சிந்துகிற அரசியல்

தமிழ்மக்களாகிய நாம் எமது உரிமைகள் பறிக்கப்படும்போதெல்லாம் அவற்றைப் பாதுகாக்க முனைந்த காலங்களில் எம்மீது இரத்தம் சிந்துகிற அரசியல் திணிக்கப்பட்டது!

இரத்தம் சிந்தினோம்? உயிர்களை இழந்தோம் உடைமைகளைப் பறிகொடுத்தோம் எரியும் நெருப்பில் கருகிச்செத்தோம்.

இது கடந்த காலங்களில் நடந்து முடிந்த வரலாறு!

1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது தந்தை செல்வா தலைமையில் காலிமுகத்திடலில் நாம் அமைதியாக எமது எதிர்ப்பைத் தெரிவித்தபோது காடையர் கூட்டம் எமக்கு இரத்தம் சிந்தும் அரசியலைப் பதிலாக வழங்கியது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்ததனாவின் 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்ற பிரகடனத்துடன் மீண்டும் ஒரு முறை எமது மக்கள் மீது இரத்தம் சிந்தும் அரசியல் திணிக்கப்பட்டது.

1983இல் சிறைச்சாலைகள், வீடுகள், வீதிகள் என எங்கும் பரந்து இரத்தம் சிந்தும் அரசியல் அகோரத்தாண்டவம் ஆடியது. சம அந்தஸ்து கேட்டோம் கிடைக்கவில்லை, சமஷ்டி கேட்டோம் கிடைக்கவில்லை, பிரதேச சுயாட்சியை ஏற்றோம் - ஏமாற்றப்பட்டோம், மாவட்ட சபையை மறுதலிக்கவில்லை அதுவும் கானல் நீராகியது. கேட்டவை எதுவும் கிடைக்கவில்லை. கிடைத்தது இரத்தம் சிந்தும் அரசியல் மட்டுமே!

குருதியில் குளிப்பாட்டும் அந்தக் கொடூர அரசியல் எம்மீது மீண்டும் மீண்டும் திணிக்கப்பட்டபோது நாமும் எங்கள் இளைஞர்களும் அதே அரசியலைத் தவிர்க்க முடியாதபடி கையிலெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

நாம் உரிமையுடன் கூடிய ஒன்றிணைந்த வாழ்க்கை கோரியபோதெல்லாம் உதைத்துத் தள்ளப்பட்ட காரணத்தால் நாம் பிரிந்து போக வேண்டும் என எமது மக்கள் முடிவெடுத்தனர். வெறுங்கையுடன் நின்ற எமது மக்களை வேட்டையாடிய ஆயுதங்களுக்குப் பதில் கொடுக்க எமது இளைஞர்களும் ஆயுதத்தைக் கையிலெடுத்தனர். இரத்தம் சிந்தும் அரசியல் ஒரு பெரும் யுத்தமாக விரிந்தது. இரு தரப்பிலும் உயிர்களும் உடைமைகளும் பலி கொள்ளப்பட்டன. அழகிய இலங்கை தேசம் ஆயுத வியாபாரிகளுக்கும் அந்நிய சுரண்டல்காரர்களுக்கும் வேட்டைக்காடாகியது.

எமது இரு இனங்களினதும் அழிவிலும் அவலங்களிலும் தங்கள் சொந்த நலன்களை மேம்படுத்திக் கொண்ட அதிகாரபீடங்களும் அந்நிய தேசங்களும் எமது உரிமைப் போராட்டத்தை ஒடுக்க மூர்க்கத்தனமாக முறையில் ஒருங்கிணைந்தன. சதிகள், துரோகங்கள், சுயநலன்கள் என்பன தோள்கொடுக்க எமது இனத்தின் உரிமைப் போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் கருகிப்போனது.

**இரத்தம் சிந்தாத யுத்தம் முழு முனைப்புடன் இப்போது**

அத்துடன் இரத்தம் சிந்துகின்ற அரசியல் ஒரு முடிவை எட்டியது. ஆனால் அன்றைய தினமே ஆரம்பித்த இரத்தம் சிந்தாத யுத்தம் முழு முனைப்புடன் மேலெழுந்துவிட்டது. அதாவது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் தமிழ்மக்கள் மீது இரத்தம் சிந்தாத ஒரு யுத்தம் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த இரத்தம் சிந்தாத யுத்தத்தின் ஓர் உயர்ந்த கட்டம்தான் இன்று இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம்.

என்று எமது மக்கள் யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வர ஆரம்பித்தனரோ அன்றே எமது மக்கள் மீதான இரத்தம் சிந்தாத யுத்தம் தொடுக்கப்பட்டுவிட்டது.

எமது மக்கள் குற்றவாளிகள் போன்று முட கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டனர். வெளியே போக அனுமதிக்கப்படுவதில்லை. உறவினர்கள் உள்ளே வர அனுமதிக்கப்படுவதில்லை. கொடுப்பதை உண்டு வாழ வேண்டிய கொடுமை. மருத்துவ வசதியின்றி உயிரிழந்த அவலங்கள்? கொடிய வெயிலிலும் கொட்டும் மழையிலும் கூடாரவாழ்க்கை.

**அர்த்தமற்ற குடியேற்றங்கள்**

உலகநாடுகளின் அழுத்தங்களைத் தவிர்க்க அர்த்தமற்ற மீள்குடியேற்றங்கள், பற்றைக் காடுகளுக்குள் பன்னிரண்டு தகரங்கள் கொண்ட கொட்டில்கள் அல்லது கூடாரத் துணிகளில் குடியிருப்புகள். குடிதண்ணீரும் குடியிருப்புகளும் பற்றாக்குறைகளுடன் நாளைய நாள் எப்படி இருக்கும் என்பதையே புரிந்துகொள்ள முடியாத நிலையில் அந்த மக்கள்.

இன்னொரு புறம் காலம் காலமாக எமது மக்கள் வாழ்ந்த காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கு படைமுகாம்களும், இராணுவக் குடியிருப்புகளும் அமைக்கப்படுகின்றன. எமது மக்களோ எதிர்காலம் புரியாத நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் அவதிப்படுகின்றனர். ஆம்! இப்படியாக இரத்தம் சிந்தாத ஒரு யுத்தம் எமது மக்களின் மேல் தொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் ஓர் உயர்ந்த கட்டம்தான் இன்றைய 18 ஆவது திருத்தச் சட்டம்.

**13 ஆவது திருத்தச் சட்டம் ஜீவனையே இழக்கிறது**

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே 13 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இரு தேசங்களுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம் வடக்கு - கிழக்கைப் பிரித்ததன் மூலம் அவமானப்படுத்தப்பட்டது. இன்றைய 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அது தன் ஜீவனையே இழக்கிறது.

மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இல்லை என்ற குற்றச்சாட்டு இன்று அரசுடன் இணைந்திருப் பவர்கள் உட்பட சகல தமிழ்த் தரப்பினராலும் முன்வைக்கப்பட்டது. அப்படியிருந்தபோதிலும் அந்தக் குறைந்த அதிகாரங்கள் கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இன்றோ அந்த நிலையிலிருந்தும் பல படிகள் கீழிறங்கி இதற்கு சட்ட அளவில் வழங்கப்பட்ட பொது நிர்வாக பொலிஸ் அதிகாரங்களும் பறிக்கப்படுகின்றன. இது தமிழ் மக்கள் மீது இந்த அரசு தொடுககும் இரத்தம் சிந்ததாத யுத்தத்தின் ஓர் உச்சக்கட்டம் என்று சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும். எனவேதான் இச்சட்டத்தை எதிர்ப்பது ஒவ்வொரு தமிழரினதும் தலையாய கடமை என இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நேற்று நான் இச்சபையில் இச்சட்டத்தால் தமிழ்மக்களுக்கு ஏற்படும் ஆபத்து தொடர்பாகவும் தமிழ்மக்களால் தெரிவு செய்யப்பட்ட இச்சபையின் உறுப்பினர்கள் இச்சட்டத்தை எதிர்க்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்ட போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை தாம் நம்புவதாகவும் அவர் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குவார் எனவும் தெரிவித்தார்.

ஒருவருக்கு இன்னொருவர் மேல் நம்பிக்கை ஏற்படவேண்டுமானால் அதற்குரிய சில அறிகுறிகள் தென்படவேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை அப்படியான எந்த ஒரு சமிக்ஞையையும் ஜனாதிபதியிடம் காண முடியவில்லை. மாறாக எதிர்மாறான விளைவுகளே எங்கள் முன் காட்சியளிக்கின்றன. இதுகாலம்வரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13ஆவது திருத்தச் சட்டத்துடன் பிளஸ் தீர்வாக அமையும் எனக் கூறி வந்தவர் ஜனாதிபதி. ஆனால் இன்றைய திருத்தச் சட்டமூலத்தினால் 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு வழங்கப்படுவது மைனஸ்தான்!

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் பின்னர் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போதும் ஈ.பி.டி.பியினர் இணைந்த வடக்கு-கிழக்கில் மாநில சுயாட்சி என்ற கொள்கையை முன்வைத்தனர். தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் அவர்களை ஏற்றுக்கொண்டு மூன்று உறுப்பினர்களைத் தெரிவுசெய்தனர். அவர்களைத் தெரிவுசெய்த அந்த மக்களுக்கு பதில் சொல்லவேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

**கையாலாகாதது ஆகிவிட்ட மாநில சுயாட்சி**

இன்றைய சட்டமூலம், பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரங்களைக் கூட பறிக்கின்றன. அதாவது மாநில சுயாட்சி என்ற அவர்களின் கொள்கையை இந்தச் சட்டமூலம் கையாலாகாதது ஆக ஆக்கிவிட்டது.

எனவேதான் ஈ.பி.டி.பியினர் உட்பட தமிழ் மகளால் தெரிவுசெய்யப்பட்ட எந்த ஒரு பிரதி நிதியும் இந்தச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கக்கூடாது என உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இச்சட்டம் தமிழ்மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களைக் கூட ஒரு சர்வாதிகாரத்தின் குடை நிழலுக்குள் கொண்டுசெல்கிறது என்பதை எமது சகோதர உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைகள் சட்ட அதிகாரமற்றவையாக மாறுகின்றன.

நீங்கள் அனைவருமே இந்த நாட்டின் முழு அதிகாரத்தையும் ஜனாதிபதியிடம் கொடுத்து விட்டு ஜனநாயகத்தின் மரணத்தை வரவேற்கப்போகின்றீர்களா என கேட்க விரும்புகிறேன்.

மாகாண சபைகளுக்கு சட்டப்படி அனுப்பாமல் மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களைக் குறைப்பதனால் இந்த 18 ஆவது திருத்தங்களை எதிர்த்து வாக்களிக்கின்றோம்.

எனவே தமிழ்மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இச்சபையின் தமிழ் உறுப்பினர்களே, எமது சிங்கள சகோதரர்களே இந்தப் பதினெட்டாவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதன் மூலம் இந்நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பற்றுங்கள் எனக் கேட்டுக் கொள்கின்றேன். - என்றார். (அ)


## பாரதியின் பரிசுமழை

ரூபா. 60/= வலம்புரி மிக்சர் பரிசுக்குரிய இலக்கங்கள்

| | | |
|---|---|---|
| 01 ஆம் பரிசு | - | H 696 |
| 02 ஆம் பரிசு | - | S 197 |
| 03 ஆம் பரிசு | - | P 14 |

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| M916 | C316 | H313 | O576 | O443 | J365 |
| E565 | R295 | R126 | A840 | K577 | K371 |

பரிசுகளை வழங்குவோர்:
பாரதி இன்டஸ்ரீஸ்
இல.19, சம்பியன் லேன், கொக்குவில்.
தொ.பே.: 021 4921822, 077 4014328


## மரண அறிவித்தல்

### *திருமதி சிசிலியா குணமணி இராசரத்தினம்* B.A

(ஓய்வுபெற்ற உதவி அதிபர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)



திருமதி சிசீலியா குணமணி இராசரத்தினம் B.A (ஓய்வுபெற்ற உதவி அதிபர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை) அவர்கள் மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் J.S.இராசரத்தினம் (ஓய்வு பெற்ற கணித ஆசிரியர், யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும் திரு. திருமதி குணநாயகம் (ஓய்வுபெற்ற ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர்) தம்பதியரின் பாசமிகு மகளும் திரு.திருமதி செல்லத்துரை தம்பதியரின் மருமகளும் ரஜனி, Dr.ராஜசீலன், ராஜபாலன் Dr.ராஜசெல்வம், ராஜகருணா ஆகியோரின் பாசமிகு தாயாரும். குவின்ரஸ், நில்மினி, றுலாந்தினி, Dr.அருணிகா, மைதிலி ஆகியோரின் மாமியாரும். டிலான், நட்டாஸா, யோனத்தான், சிறில், அனிற்றா, அன்று, எலானா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 'பெத்தனி' கடற்கரை வீதி, பருத்தித்துறையில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை மறுதினம் (11.09.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
J.S.இராசரத்தினம்
*( கணவர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் சொந்த இடங்களில் இன்று 1,080 பேர் மீளக்குடியமர்வு

## இராமாவில் முகாமில் தற்போது 37 குடும்பங்கள் மட்டுமே

தென்மராட்சி, செப். 9

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 356 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 80 பேர் இன்று வியாழக் கிழமை தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தினால் மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செம்பியன்பற்று கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 52 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேரும், செம்பியன்பற்று தெற்கு பிரிவைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும், மருதங்கேணி பிரிவில் 57 குடும்பங்களைச் சேர்ந்த 189 பேரும், வத்திராயன் பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 187 பேரும், உடுத்துறை பிரிவில் 95 குடும்பங்களைச் சேர்ந்த 282 பேரும், ஆழியவளை பிரிவில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 254 பேரும் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதேவேளை நலன்புரி நிலையத்தில் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 37 குடும்பங்கள் மட்டுமே தங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது: இக் குடும்பங்களையும் விரைவில் சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கு மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207-131)

## தென்மராட்சிப் பகுதியில் ஏ9 வீதியில் விபத்துக்கள்; நேற்று நால்வர் காயம்

தென்மராட்சி, செப்.9

ஏ9 வீதியில் விபத்துக்களில் சிக்கி பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட நால்வர் நேற்று புதன்கிழமை காயமடைந்தனர்.

பாடசாலைக்கு காலையில் சைக்கிளில் சென்றவேளையில் இராமாவில் பகுதியில் வீ.நிருஷன் (வயது 11) மடத்தடிப் பகுதியில் எஸ்.விதுஷன் (வயது 12) ஆகியோரை மோட்டார் சைக்கிள்கள் மோதியதாலும் -

பளைப் பகுதியில் லொறி சைக்கிள் மோதிக்கொண்டதில் கே.ஈசன் (வயது 48) என்பவரும் நடந்து சென்றவேளையில் காருடன் மோதுண்டதில் வெற்றிவேலு (வயது 72) என்பவருமே இவ்வாறு காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (ஒ-207)

# இம்முறை ஜி.சீ.ஈ (சா/த) தேர்வுக்கு தயாராகும் மாணவருக்கான கருத்தரங்குகள்

## இன்று காலை விஞ்ஞான பாட முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 9

தேசிய மட்டத்தில் ஜி.சீ.ஈ (சா/த) மாணவர்களுக்கான பரீட்சையும் கருத்தரங்குகளும் இன்றுமுதல் அடுத்த மாதம் 30ஆம் திகதிவரை 29 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன. அத்துடன் இரு மொழிமூலம் தோற்றும் அனைத்து மாணவர்களுக்குமான பரீட்சை நிலையமாக யாழ். இந்துக் கல்லூரியே செயற்படும்.

இந்தப் பரீட்சைகள் இரு மொழிமூலமான மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைகளின் மதிப்பீடுகள் முடிவுற்றதும் பின்வரும் கால அட்ட வணைக்கமைய அதே நிலையங்களில் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

எனவே உரிய பாடப்பொறுப்பாசிரியர்கள் மேற்படி பரீட்சை மதிப்பீடுகளையும் கலந்துரையாடலையும் சிறப்பாக மேற்கொள்வதை அதிபர்கள் உறுதிப்படுத்துமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்ளும், கருத்தரங்குகளுக்குமான நேர அட்டவணைகள் வருமாறு -

| பாடம் | பரீட்சை I | பரீட்சை II | கருத்தரங்கு | |
|---|---|---|---|---|
| | | | செப்ரெம்பர் | ஒக்ரோபர் |
| விஞ்ஞானம் I | 09.09.2010 | 10.09.2010 | 11 சனிக்கிழமை | |
| விஞ்ஞானம் II | | 01.10.2010 | | 02 சனிக்கிழமை |
| கணிதம் I | 14.09.2010 | 16.09.2010 | 17 வெள்ளிக்கிழமை | |
| கணிதம் II | | 08.10.2010 | | 09 சனிக்கிழமை |
| தாய்மொழி (சிங்களம்/தமிழ்) I & II | | 17.09.2010 | 18 சனிக்கிழமை | |
| தாய்மொழி (சிங்களம்/தமிழ்) III | 15.09.2010 | 15.10.2010 | | 16 சனிக்கிழமை |
| ஆங்கிலம் I | 20.09.2010 | 23.09.2010 | 24 வெள்ளிக்கிழமை | |
| ஆங்கிலம் II | | 22.10.2010 | | 23 சனிக்கிழமை |
| வரலாறு I | | 24.09.2010 | 25 சனிக்கிழமை | |
| வரலாறு II | 21.09.2010 | 29.10.2010 | | 30 சனிக்கிழமை |

### திடீரென ரயரில் காற்றுப் போனதால்

# கம்பத்துடன் மோ.சைக்கிள் மோதி இளம் பூசகர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 9

அராலி செட்டியார்மடம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நல்லூர் இளம் பூசகர் சிகிச்சை பயனின்றி நேற்று மரணமானார்.

நல்லூரைச் சேர்ந்த சி.ஸ்கந்தசிவரூப சர்மா (வயது 20) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

அவரது சொந்த இடமான அராலிக்குச் சென்று சகோதரியுடன் மோட்டார் சைக்கிளில் திரும்பி வந்த வேளை திடீரென ரயரில் இருந்து காற்று வெளியேறிய நிலையில் மோ. சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்றும் -

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பூசகர் சுய நினைவற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போதும், உணர்வு திரும்பாத நிலையில் அவர் உயிரிழக்க நேரிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்த அவரது சகோதரி சிகிச்சைபெற்று வருகிறார். (ஒ-16)

# இந்திய அரசின் வீட்டுத்திட்டம்; தென்மராட்சியில் 135 பேர் தெரிவு

## முதற்கட்டப் பதிவுகள் பூர்த்தி

தென்மராட்சி, செப். 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் 135 பேருக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு 27 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலகத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீளக் குடியமர்ந்த மக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் முதற்கட்டமாகவே தென்மராட்சிப் பிரதேசத்தில் 135 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

## கிறிஸ்மஸ் தீவில் கலவரம்: அகதிகள் சார்பில் ஆஜராக இலங்கைச் சட்டத்தரணிகள்

கன்பரா, செப். 9

ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலுள்ள தடுப்பு முகாம் கலவரம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள எட்டு இலங்கையர்கள் சார்பாக மெல்போர்ன் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு இலங்கையிலிருந்து சட்டத்தரணிகள் குழுவொன்று ஆஸ்திரேலியா செல்லவுள்ளது.

ஆஸ்திரேலியாவிலுள்ள கிறிஸ்மஸ் தீவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கை அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் மாதம் இங்கு கலவரம் ஏற்பட்டது. இக்கலவரம் தொடர்பில் எட்டு இலங்கையர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிரான வழக்கு மெல்போர்ன் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. (ஒ-சி)

### சுயதொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ள

# யோகபுரம் குடும்பங்களுக்கு விரைவில் ரூ.10 ஆயிரம் கொடுப்பனவு

முல்லைத்தீவு, செப். 9

மல்லாவி யோகபுரத்தைச் சேர்ந்த 130 குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை மேற்கொள்வதற்காக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என்று வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

பனிச்சங்குளம், யோகபுரம் பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்த ஆளுநர் சந்திரசிறி அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

மக்கள் தாம் நிறைய பிரச்சினைகளை எதிர் நோக்குவதாகவும் அவற்றைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர். அதற்குப் பதிலளித்த ஆளுநர் ''பல்வேறு பிரச்சினைகளுக்கு நீங்கள் முகம் கொடுத்து வருவதை நான் அறிவேன். இது தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் உயர் அதிகாரிகளை உங்கள் பிரதேசத்துக்கு அனுப்பி பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்'' - என்றார்.

மேலும் இந்திய அரசினால் வடக்கில் அமைக்கப்படவுள்ள வீட்டுத்திட்டத்தில் இங்குள்ள மக்களுக்கு முன்னுரிமை வழங்கி வீடுகள் புனரமைத்துக் கொடுக்கப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (ஒ-15)


CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை - யாழ்ப்பாணம்
புரட்டாதி 08, 2010
பங்குச்சந்தைச்சுட்டிகள்

அனைத்துப்பங்கு(ASPI)5,962.62↑
மிலங்கா(MPI) 6,152.93↑

உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.)4,796.43Mn
பங்குகளின் அளவு(No.)86.49Mn
வியாபாரம்(No.) 22,627
சந்தை முதல்(Mkt.Cap) 1,963.04Bn

விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
அலயன்ஸ் 669.90
லங்கெம் டெவலப்மன் 35.20
லங்கெம் சிலோன் 234.50
ஆசிரி சென்றல் 149.00
ஷாவலன்ஸ் 245.10

குறைவு(Top 5 losers) - விலை Rs.
டேடன்ஸ் 107.20
டேடன்ஸ்(x) 95.10
அலுபா(f) 40.00
கொழும்பு பார்மசி 1100.00
ரேணுகா அக்ரீ 4.10

மேலதிக தகவல்கள் -www.cse.lk


# நாட்டைக் காட்டிக்கொடுக்காத கட்சி தமிழ்க் கூட்டமைப்புத்தான்!

## சுமந்திரன் எம்.பி. பெருமிதம்

அரசமைப்புத் திருத்த யோசனைகளை எதிர்த்ததன் மூலம் நாட்டைக் காட்டிக் கொடுக்காத கட்சி என்ற பெயரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்டுள்ளது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அரசமைப்புத் திருத்தம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மக்களிடம் கலந்தாலோசிக்கப்படாது இந்த அரசமைப்புத் திருத்தம் அவசர அவசரமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 4 வருடங்களும் 2 மாதங்களும் உள்ளன. அவ்வாறு நீண்டகாலம் இருக்கும் போது அரசு ஏன் இதை இவ்வளவு அவசரப்பட்டு கொண்டுவந்தது?

இதுதொடர்பாகக் கலந்தாலோசிக்க நீதிமன்றத்துக்கு மிகக் குறைந்த காலமே வழங்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட திருத்த யோசனைகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் அல்ல. அமைச்சரவைக்கு வேறு யோசனைகளும், நீதிமன்றத்துக்கு வேறு யோசனைகளுமே அரசால் சமர்ப்பிக்கப்பட்டன.

நான் செவ்வாய்க்கிழமை இந்தச் சபையில் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியதன் பின்தான் எமக்கு திருத்த யோசனைகளின் பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்தத் திருத்த யோசனைகள் மக்கள் கருத்துக்கு விடப்பட்டு அதன்பின்பே நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அவசர அவசரமாக அரசு சபையில் சமர்ப்பிக்கப்படக்கூடாது என்று சட்டத்தரணிகள் சங்கம் ஜூன் மாதம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அத்தீர்மானம் அரசுக்கும் வழங்கப்பட்டது.

அவை எவற்றையும் கருத்தில்கொள்ளாது அரசு அவசரமாக இதைக் கொண்டு வந்துள்ளது. இது நாட்டின் எதிர்காலத்துக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இதை எதிர்த்ததன் மூலம் நாட்டைக் காட்டிக்கொடுக்காத கட்சி என்ற பெயரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தட்டிச் செல்கிறது. - என்றார். (ஒ-சி)

## பறவைக்காவடி முறிந்ததில் பக்தர்கள் ஐவர் காயம்

பறவைக் காவடி முறிந்துவீழ்ந்ததில் காவடி எடுத்துவந்த மூவர் உட்பட ஐவர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற நல்லூர்க்கந்தன் ஆலய தீர்த்தத்திருவிழாவில் பறவைக் காவடி எடுத்து வந்தவேளை நல்லூர் ஆலயத்துக்கு சமீபமாக அந்தக் காவடி முறிந்து வீழ்ந்தது. இதில் காவடி எடுத்துவந்தவர்களான கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ்.மயூரன் (வயது 17), பி.பிரதீபன் (வயது 18), பி.லக்ஸ்மன் (வயது 17) ஆகியோரும் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.பூமாதேவி (வயது 42), அரியாலை மேற்கைச் சேர்ந்த ஆர்.இராசகுலம் (வயது 54) ஆகியோரும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-16-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவாகவும் எதிராகவும் நேற்றும் ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, செப்.09

அரசமைப்புத் திருத்தம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் மூன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

நாடாளுமன்றம் செல்லும் வழியில் தேசியக் கொடியும் ஸ்ரீல.சு.கட்சியின் நீலநிறக் கொடியும் பறக்கவிடப்பட்டிருந்தன. வழமையை விட பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். கலகம் அடக்கும் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக இராஜகிரிய சந்தியிலிருந்து நாடாளுமன்ற சந்திவரை பெரும் எண்ணிக்கையானோர் வீதியோரத்தில் ஆங்காங்கே கூடிநின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அரச ஆதரவாளர்களை ஏற்றி வந்த இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்கள் வீதியோரங்களில் நிறுத்தப்பட்டிருந்தன.

பஸ்களில் கொண்டுவந்து இறக்கப்பட்ட ஆண்களும், பெண்களும் ஜனாதிபதியின் படத்தைக் கைகளில் ஏந்தியவாறு ''இன்றும் என்றும் எமது ஜனாதிபதி நீங்களே'' எனக் கோஷமிட்டனர்.

இதேவேளை, நேற்றுப் பகல் ஐ.தே. கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் இருந்து நாடாளுமன்றத்தை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று ஆரம்பமானது. இப் பேரணியில் ''ஜனநாயகத்தின் மரணம்'' என எழுதப்பட்ட சவப்பெட்டியை ஆர்ப்பாட்டக் காரர்கள் சுமந்து வந்தனர். இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதியை அடைந்தபோது பொலிஸார் வீதித் தடையை ஏற்படுத்தி பேரணியை நகர விடாது தடுத்தனர். இதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் சவப்பெட்டியை அந்த இடத்திலேயே தீமூட்டி எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உட்பட கட்சி எம்.பிக்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி சபைகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, ஐக்கிய சோஷலிச முன்னணித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்புத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணியொன்று கொழும்பு வார்ட்பிளேஸில் இருந்து நேற்றுக் காலை ஆரம்பமானது. இந்தப் பேரணியும் நாடாளுமன்ற வீதிக்கு நுழைய முற்பட்டபோது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஜனநாயக ரீதியில் நடத்தப்படும் பேரணிகளைத் தடுத்து நிறுத்துவது ஏன் எனப் பொலிஸாரிடம் கேட்டபோது, அரச ஆதரவு ஆர்ப்பாட்டம் நாடாளுமன்றத்துக்கு அருகே நடைபெறுகிறது. எதிர்ப்புப் பேரணிகளைச் செல்ல அனுமதித்தால் தேவையற்ற மோதல்கள் ஏற்படலாம் எனத் தெரிவித்தனர் என்றும் கூறப்படுகிறது. (ஓ-சி)

---

## வாக்கில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கடற்படைத் தளபதி வைட் அட்மிரல் திஸர சமரசிங்க மற்றும் விமானப் படைத்தளபதி ரொஷான் குணத்திலக ஆகியோர் தகவல்கள் வெளியிட்டனர்.

இச் சாட்சியத்தின் போது இராணுவத் தளபதி அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் யுத்தம் நடைபெற்ற கால பகுதியில் இராணுவம் சர்வதேச உதவி அமைப்புக்களுடன் கொண்டிருந்த நிலையான தொடர்பினை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான விதிவிடப் பிரதிநிதி நீல் புஹுனே உறுதிப்படுத்துவார்.

நாட்டில் யுத்தம் நடை பெற்ற காலப் பகுதியில் இராணுவம் சர்வதேச உதவி அமைப்புகளுடன் நிலையான தொடர்பை கொண்டிருந்தது. குறிப்பாக செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையுடன் நிலையான தொடர்பைப் பேணி வந்தனர். அதுமட்டுமன்றி ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிக ளுடன் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து இராணுவம் கொண்டிருந்த தொடர்புகளை நீல் புஹுனே உறுதிப்படுத்துவார்.

அதேவேளை, மனிதாபிமான நடவடிக்கைகளின் போது சிறந்த சர்வதேச தொடர்பை பேணியமை மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். அதனை நாம் நன்றாகப் பயன்படுத்தினோம்.

எந்த நேரத்திலும் எவ் வகையான விடயங்களானாலும் எம்முடன் அல்லது இராணுவத்திடம் வினவினால் நாம் உரிய பதிலை வழங்கத் தயாராக உள்ளோம்.

குறிப்பாக இராணுவ நடவடிக்கைகள் குறித்து சர்வதேச அமைப்புகள் விருப்புடன் செயற்பட்டது மட்டுமன்றி எம்மை மேலும் ஊக்கப்படுத்தின. - இப்படி அவர் தெரிவித்தார். (ஓ-சி)

---

## 18 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18ஆவது திருத்தத்தை ஆணித்தரமாக எதிர்த்து வந்தபோதும் அக்கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எச்.ஏ.பியசேன அரசுக்கு ஆதரவு தெரிவித்து அரச தரப்புக்குத் தாவியதுடன் 18ஆவது திருத்தச் சட் டத்தை ஆதரித்தும் வாக்களித்தார். சபைக்கு சமுகமளித்த கூட்டமைப்பு எம்.பிக்கள் 10 பேரும் எதிராக வாக்களித்தனர்.

ஜே.வி.பி. உள்ளடக்கலான ஜனநாயக தேசிய முன்னணி உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டுத் தெரிவான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுப்பதாகத் தெரிவித்து 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஏற்கனவே அரசு பக்கம் சென்ற திகாம்பரம், பிரபா கணேசன் ஆகியோரும் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அரசின் பக்கமிருக்கும் இடதுசாரிக் கட்சி உறுப்பினர்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்களும் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஒட்டு மொத்தமாக ஆதரித்து வாக்களித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-சி)

---

## கால அவகாசம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சுமந்திரன், ''ஸ்ரீல.மு.கா. தனது மனச்சாட்சிக்கு விரோதமாகவே இன்று அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கின்றது'' என்று கூறினார்.

இது உண்மைக்கு மாறானது. எங்களுடைய தாராளத் தன்மையை தவறாக எடைபோடக்கூடாது.

அரசமைப்புத் தொடர்பாக எமக்கிருக்கும் சந்தேகத்தை நாம் ஜனாதிபதியிடமே விட்டுவிடுகின்றோம். அவர் மீதான ஆழமான நம்பிக்கையால்தான் நாம் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்குகிறோம்.

நாம் வெளியில் இருந்துகொண்டு இதற்கு ஆதரவு வழங்குவதால் இது தொடர்பில் நாம் அரசிடம் கேள்வி கேட்க முடியும். அரசுடன் இணைந்திருந்தால் அது முடியாது.

எனக்குப் போதுமான கால அவகாசம் இருந்திருந்தால் அரசமைப்புத் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கும் சந்தேகத்தைத் தீர்த்து அரசமைப்புத் திருத்தத்துக்கு கூட்டமைப்பின் ஆதரவையும் பெற்றுக்கொடுத்திருப்பேன். - என்றார். (ஓ-சி)

---

## பியசேன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடி உத்தேச அரசமைப்பு திருத்தத்துக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? எனக் கலந்துரையாடினோம். இதன்போது அரசமைப்பு திருத்தத்திற்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்தோம். இதற்கு பியசேன எம்.பியும் அதரவளித்தார். இதனால் அவர் மீது கட்டாயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. - என்றார். (ஓ-11)

---

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நில்வல ஜயசிங்க, உபேக்ஷா சுவர்ணமாலி ஆகியோருடன் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பியசேன ஆகியோர் காதர் எம்.பியுடன் இணைந்து அரச தரப்புக்குச் சென்றனர். (ஓ-சி)

---


**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், திருத்துதல், மாபிள் பதித்தல், சுற்றுமதில் கட்டுதல் போன்ற வேலைகள் குறித்த நேரத்தில் தரமாகவும் நியாயவிலையிலும் செய்து கொடுக்கப்படும்.

**AXSHAYA CONSTRUCTIONS, JAFFNA**
**T.P. : 0776679564 / 0213207202**

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 021 2228093 E-mail : alliancejaffna@yahoo.com

*Learn Frence the French Way*
**French Classes**

"ALLIANCE FRANCAISE DE JAFFNA" இலங்கையில் உள்ள பிரரெஞ்சு தூதரகம் மூலம் பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட கலாசார மையமாகும்.
France இல் உள்ள ALLIANCE FRANCAISE DE JAFFNA தலைமைக் காரியாலயமாகவும் அமைந்துள்ளது.
மாணவர்கள், சிறுவர்கள், வெளிநாட்டுக்குப் போகிறவர்கள் எவரும் கற்றுக்கொள்ளலாம்.......
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம். (103108)

**SCC**
பயிற்சி நெறிகள் ஆரம்பம்11, 14.09.2010
பிரிவுII

- Dip. In MS Office
- Dip. In Desktop Publishing
- Dip. In Computer Programming
- Dip. In Eng. Drawing & Auto CAD
- Dip. In Computerized Accounting
- Dip. In Data Base Management System
- Dip. In Audio & Video Editing
- Dip. In Visual Basic
- Dip. In Web Designing

Free
- Dip. In Hardware Engineering
- Dip. In Internet e-mail

4000/=

மேலதிக விபரங்களுக்கு

**Softview Computer College**
43, Thaddatheru Junction, Jaffna. T.P: 021 2225170

**THE SCIENCE CORNER**
**CLOCK TOWER LANE, JAFFNA.**

| A/L 2012 | PHYSICS |
|---|---|
| | நிலையியல் |

ஆரம்பம் :- 10.09.2010
6.30 (am) வெள்ளி
By :- K.Selvan. B.Sc (Hons)

**வீடு வாடகைக்கு**

அரியாலை சின்னக்கிணற்றடி ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : V.T. இராஜேந்திரா
T.P. : 0772286923
வெள்ளி, சனி, ஞாயிறு நாள்களில் மட்டும் பார்வையிடலாம்

**THE SCIENCE CORNER**
**CLOCK TOWER LANE, JAFFNA.**

10/09/2010 வெள்ளி
காலை 6.30 முதல்
**2011 - A/L DAY CLASS**

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
- அலகு ரீதியான மீட்டல்
- மாதாந்த பரீட்சைகளுடன்

வழமையான ஆசிரியர் குழாம்

**NOTHING IS IMPOSSIBLE**
தொடர் மாதிரிப் பரீட்சை
10/09/2010 வெள்ளி 3 மணி
★ உயிரியல் ★
வெளி மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம்

**யா/திருக்குடும்ப கன்னியர் மடம்**
**தேசிய பாடசாலை**
**புதிய மாணவர்களுக்கான அனுமதி கோரல் - 2011**

தரம் 6, 7, 8, 9 வகுப்புக்களுக்கான புதிய மாணவர்களை (2011) யா/திருக்குடும்ப கன்னியர்மடம், தேசிய பாடசாலையில் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி 31.10.2010.
விண்ணப்பங்களை பாடசாலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

PRINCIPAL,
HOLY FAMILY CONVENT,
JAFFNA.

(சி/570754)

**THE COLLEGE OF CHEMISTRY**
32, பழம் ரோட், கந்தர்மடம்.

**2011 A/L DAY CLASSES**
ஆரம்பம் 09.09.2010 வியாழன் 3.00 – 4.30

**CHEMISTRY**
Sat, Sun: 7.30 am – 9.30
Tue, Thu: 3.00 pm – 4.30

**PHYSICS**
Time
Mon,Tue,wed,thu -4.30 -6.00

DIAS N.KAPILAN

**இன்று மாலை மெகா மெஜிக்**

இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி
தினமும் மூன்று காட்சிகள்
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
ரிக்கற் மண்டபவாயிலில்..



100/= 200/=
T.P: 077 8060 225


## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் சிவமணிதேவி

681, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த இராசலிங்கம் சிவமணிதேவி நேற்று (08.09.2010) புதன்கிழமை காலமானார். அன்னார் இராசலிங்கத்தின்(பரஸ்கோ லுப்றிகேசன் சேர்விஸ்) அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*681, பருத்தித்துறை வீதி, நல்லூர்.*

தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org